T.458

பரிய புராணப் பெண்மணிகள்

ஆசிரியர் :

வித்துவான், ஆ. சிவலிங்கனர்,

விரிவுரையாளர்,

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி

மயிலம்.

44-20

ஒற்றுமை ஆபீஸ்

தியாகராயநகர், சென்னை.

1953

இவ்வாசிரியரின் பிற நூல்கள்

1. அகத்தியர்கள்
2. புற நானூற்றுக் கட்டுரைகள்
3. கட்டுரைப் பூங்கா
4. தமிழ் நாட்டு மூவேந்தர்

விலை. ரூ. 1—4—0

Golden Press, 2/50 Thana Street Purasawalkam, Madras-7.

முகவுரை

பெரிய புராணத்தைப் பல முறையில் படித்து வருவதில் அவ்வப்போது புதிய புதிய கருத்துக்கள் தோன்றி மனதை மகிழ்விக்கின்றன. அதில் வரும் பெண்மணிகளின் அறிவாற்றல்கள், கொள்கைகள் மனதைக் கவர்ந்தமையால், அவற்றை நீம் மகளிர்கட்கும் தெரிவிப்பது நல்லது என்ற நோக்கத்துடனேயே இந் நூல் எழுதப்பட்டது. பெரிய புராணத்தில் நாயன்மார்கள் வைப்பு முறையில் பெண்மணிகளை இந் நூலில் அமைக்க வில்லை. அடுத்த பதிப்பில் அமைப்போம். பிற குறைகள் இருப்பினும் அறிஞர்கள் அறிவிப்பின் திருந்த வாய்ப்பு உண்டாகும்.

சென்னை,
1-6-1953.

ஆ. சிவலிங்கன்,
மயிலம்.

பெரிய புராணப் பெண்மணிகள்

பொருள் அட்டவணை

		பக்கம்
1.	திருநீலகண்டர் மனைவியார் ...	1
2.	இளையான் குடிமாற நாயனார் மனைவியார் ...	13.
3.	திலகவதியார்	20
4.	செட்டி மகளார்	28
5.	வெண்காட்டு நங்கையார்	35
6.	சந்தன நங்கையார்	53
7.	சங்கிலியார்	58
8.	குங்கிலியக் கலயர் மனைவியார் ...	66
9.	பரவையார்	74
10.	அப்பூதியடிகள் நாயனார் மனைவியார் ...	78
11.	கலிக்காமர் மனைவியார்	86
12.	மங்கையர்க் கரசியார்	91
13.	கலிக்கம்பர் மனைவியார்	101
14.	கழற்சிங்கர் மனைவியார்	105
15.	இயற்பகை மனைவியார்	107

பெரிய புராணப்
பெண்மணிகள்

(1)
திருநீலகண்டர் மனைவியார்

முன்னுரை.

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை.

செந்நாப் புலவர் வள்ளுவரின் செந்தமிழ் வாக்கு இது.

"தன் கணவன் புகழை விரும்பிய மனைவியை இல்லாதவர்க்குத் தம் பகைவர்முன்னே செருக்கோடு ஏறுபோல் நடத்தல் இல்லை" என்பது இக்குறளின் கருத்து. மனைவியின் நாட்டம் முழுமையும் தன் கணவனின் புகழிலேயே யிருக்கவேண்டும். எந்தவகையிலும் அவன் புகழ்க்குக் குறைபாடு நேராவண்ணம் காத்தல் வேண்டும். எவ்வாறு காக்க இயலும்? முதலில் தன்னால் அவனுக்குக் குறை நேரலாகாது என எண்ணல் வேண்டும். பின்னர் அவனாலேயும் அவனுக்குக் குறை நேரலாகாது என எண்ணி, ஒருவேளை நேருமாயின் நீக்குதற்கு முற்படவேண்டும். இவ்விரண்டு வகையிலும் கணவனைக் காத்தல் மனைவியின் கடன்.

ஒருவனுக்கு மனைவியால் நேரும் புகழ்க் குறைபாடு களுக்குக் காரணங்கள் பல. அவற்றுள் முதன்மை யானது கற்புக்கேடாகும். கற்பொழுக்கம் இல்லாத மனைவியோடு வாழ்க்கை நடத்தும் ஒருவனை உலகம் பழிக்கும். கற்பிழந்த மனைவியின் கையால் உண வுண்ணும் ஒருவன் நரகம் புகுவன் எனவும் ஆன்றோர் கருதினர். எனவே மனைவியானவள் தன் கணவனுக் குத் தாழ்வு வராமல் தன் கற்பினைக் காத்துக்கொள்ளும் வகையில் தன் கணவன் புகழை விரும்ப வேண்டும்.

கற்பு நெறியால் தன்னைக் காத்துக் கொண்ட ஒருத்தி, கணவனிடத்தில் நல்ல மதிப்புள்ள வளாகவும் இருந்தும் அவனை நல்ல முறையில் உணவு முதலிய வற்றால் காக்கும் வகையற்றிருப்பதும் உண்டு. நல்ல குடும்பத்திலிருக்கும் ஒருவன் தன் வீட்டுச்சாப்பாடு பிடிக்க வில்லை என்று கூறிச் சிற்றுண்டிச் சாலையில் அடிக்கடி சென்று சாப்பிடுதலைக் காண்கின்றோம் அன்றோ? இவ்வாறு உணவில் குறைபாடு இல்லாமல் மனம் விரும் பும் வகையில் சமைத்து உண்ணச் செய்வது மனைவியின் கடன். இத்தகைய நலம் வாய்ந்த மனைவியைப் பெற்ற வன் இகழ்வார் முன் ஏறுபோற்பீடு நடையுடையவனாவான்.

கற்பிலும் வழுவாது கணவனை உண்டிமுதலிய வற்றினாலும் நன்முறையில் பேணும் ஒருத்தி தன் கணவனைப் பற்றிப் பிறர் பழிதூற்றக் கேட்க விரும்ப மாட்டாள்; தானும் குறைகூற மாட்டாள். உலகில் தன் கணவனைப்பற்றிப் பிறர் குறை கூறினால் பொறுத்த ஒருத்தி, தானே குறை கூற்றுவதையும் காணலாம்.

"அந்த மனிதனு! மிகப் பொல்லாதவனுயிற்றே; ஏதேனும் சிறுதவறு நேர்ந்தாலும் உயிரையே வாங்கி விடுவானே" என்றெல்லாம் தம் கணவரைப்பற்றிக் குறைவாக அவன் அறிவின்மையை வெளிப்படுத்திப் பேசுவர் பலர். இவரெல்லாம் தம் கணவன்மார்களின் காலில் சிறு முள் தைத்ததாலும் மனம் பொருது வருந்துபவர்களே என்றாலும் தம்மையறியாமலோ அன்றி இவ்வாறு சொல்வதின் மூலம் பெருமை தேடித்தருவதாக எண்ணிய தவறான எண்ணத்தாலோ கணவர்களைப் பற்றிக் குறைபாடு கூறிவிடுகிறார்கள். என்னே இவர் தம் மடமை! இவ்வாறெல்லாம் இல்லாமல் பிறராலும் தன் சொல்லாலும் புகழ்க்குக் குறைபாடு நேராவண்ணம் சொற்களைக் காத்துக் கொள்ளல் வேண்டும் மனைவி.

அன்னை தயையும் அடியாள் பணியும் மலர்ப்
பொன்னின் அழகும் புவிப் பொறையும் — வன்னமுலை
வேசி துயிலும் விறல்மந் திரிமதியும்
பேசில் இவையுடையாள் பெண்.

என்றபடி நடந்து தான் புகழ்பெற்று எவ்வகையிலும் தவறாது நடப்பின் தன் கணவன் புகழை உறுதியாகக் காக்கலாம். தன் கணவன் நல்லவனையினும் அவனைச் சார்ந்தோர் தீயோராயின் அவரால் புகழ்கெடும். அவ்விடத்தில் தன் கணவனை மந்திரிபோல் அறிவு கொளுத்தித் திருத்திக்காப்பது மனைவியின் கடமையே.

கற்பொழுக்கத்தால் தன்னைக் காத்து, உணவு முதலியவற்றால் தன் கணவனைக் காத்து இவைகளாக உலகினரால் வரும் புகழைக் காத்துக் கொள்ளும்

ஒருத்தியே சிறந்த மனையற மாண்புடையவளாவாள் என்றூர் வள்ளுவர்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

என்பது அவரது வாக்கு. இம்மூன்றும் உடையவளே கணவன் புகழ் விரும்பிய மனைவியாவாள். இவளே யுடையவனே பீடு நடை யுடையவனுவான்,

'புகழ்புரிந்தில்' என்பதற்குத் தகுதியானவர் நமது திருநீலகண்டர் மனைவியாவர், தற்காத்தவர் இவர்; தற்கொண்டாற் பேணியவர்; தன்னுடைய தும் கணவனுடையதுமான தகைசான்ற சொற்காத் தவர்; இம்மூன்றிலும் எக்காலத்தும் சோர்விலாதிருந்த வர். இவற்றையே இவரது வரலாற்றி லிருந்து நாம் அறிகின்றேம்.

வரலாறு.

சிதம்பரத்திலே குயவர் குலத்தில் தோன்றிய திருநீலகண்டர் என்பார், சிவபிரானிடத்து மிகவும் அன்புடையவராய் அவன் அடியவர்கட்குத் தமக்கேற்ற தொண்டாகப் பிச்சை ஓடுகளே வழங்கி வந்தார். அவர் சிவபிரானின் நீலகண்டத்தை அடிக்கடி நினைந்தும் சொல்லியும் வந்ததால் நீலகண்டர் எனப் பெயர்பெற்றூர். அவரது மனைவியாரும் அவர் தொண்டிற்கு யாதோர் இடையூறும் நேராதவாறு உடன்உதவி செய்து வந்தார். ஒருநாள் நீலகண்டர் தமது இளமை வேகத்தின் வயப் பட்டு இன்பத்துறையில் எளியாராகிப் பரத்தை ஒருத்தி யின் வீடு சென்று மீண்டார். அதனை உணர்ந்த மனைவியார் மனம் பொருதவராகி ஊடல் கொண்டிருந்

தார். அன்றிரவு மனைவியாரிடம் ஊடல் நீக்கிக் கூடச் சென்ற காலத்து அவரைநோக்கி "எம்மைத் தீண்டா தீர்; நீங்கள் வணங்கும் நீலகண்டத்தின் மீது ஆணை" என்றார். ஆணைகேட்ட அடியவர் அஞ்சி, கற்றறிந்த ராதலினால் அம்மையாரின் சொல்லுக்குரிய பொருளை நன்றாக உணர்ந்து அவரை நோக்கி, "நீ என்னை என்று உன்னைமட்டும் குறிக்காமல் 'எம்மை' என்று உன்னினத்தவரைச் சேர்த்துக் குறித்தமையால் யானும் உன்னைமட்டுமல்லாமல் உன் இனத்தாரையே என் கரத்தால் மட்டுமல்லாமல் மனத்தாலும் தீண்டேன்; இஃது ஆணை" என்று கூறி ஒதுங்கினார். அன்றுமுதல் தம் மனைவியாரை அயலாரைப் பார்ப்பது போலவே கருதிவந்தார். நாட்கள் வாரங்களாய் வாரங்கள் மாதங்களாய் மாதங்கள் ஆண்டுகளாயின என்றாலும் அவ்விருவரும் அன்றுமுதல் இன்பத்துறையில் இறங் காதவரானார்கள். என்றாலும் பிச்சை ஓடு வழங்கும் தொண்டில் சிறிதும் தவறவில்லை. இருவரும் இளமை கடந்து முதுமையும் அடைந்தனர்.

திருநீலகண்ட நாயனார் வரலாறு கூறிவந்த சேக்கிழார் இவ்விடத்தில் நீலகண்டரின் மனைவியாரைப் பற்றிக் குறிப்பிடுவதை நாம் நன்கு நோக்குதல் வேண்டும்.

கற்புறு மனைவி யாரும் கணவனார்க் கான வெல்லாம்
பொற்புறு மெய்யுறுமல் பொருந்துவ போற்றிச் செய்தே
இற்புறம் பொழியா தங்கண் இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி யின்மை அயலறி யாமை வாழ்ந்தார்.

அம்மையரை, 'கற்புறு மனைவியார்' என்று சேக்கிழார் மேலாகப் பாட்டுப் போக்கில் அமைக்கவில்லை. வேண்டு

மென்றே அம்மையாரின் ஒழுக்க நிலையை உயர்த்து வதற்காகவே அமைத்தார். கட்டழகுக் காளை அடியவர். 'திருவினும் உருவம் மிக்கார்' அம்மையார். இவ்விரு வரும் மெய்யுறு புணர்ச்சி யின்ற முதுமைப்பருவம் வந்தெய்துமளவும் இருந்த காலத்தில், எவ்வித மன மாறுபாடும் கொள்ளாமல் — தெய்வம் தொழாது கொழுநனையே தொழு தெழும் நிலையில் மாறுபடாமல் தமது நிறையை—கற்பைக் காத்தொழுகிய அருமையை வியப்பதற்காகவே அம்மையாரைக் 'கற்புறு மனைவியார்' என்றார் சேக்கிழார் வள்ளுவர் கூற்றுப்படி அம்மையார் தற் காத்துக் கொண்டவரானார்.

அம்மையார் "கணவனுக்கான எல்லாம் பொற் புறு மெய்யுறுமல் பொருந்துவ போற்றிச் செய்தார்" என்றார் சேக்கிழார், தம் உடல் எவ்வகையிலும் தம் கணவர் உடலில் படாதவாறு காத்து அடியார்க்கு உண்டி முதலியவற்றால் குறைவு நேராதவாறு பணிவிடைகளும் செய்துவந்தார். எனவே தற் கொண்டானைப் பேணுவதிலும் தவறுதவரானார் நம் அம்மையார்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணிய அம்மையார் தம் புகழை அவற்றால் காத்துக் கொண்டதோடன்றிக் கணவர்க்கும் புகழ்க் குறைபாடு நேராவண்ணம் காத்துக் கொண்டார் என்பதனைத் தெரிவிப்பதற்காகச் சேக்கிழார், "அற்புறு புணர்ச்சியின்மை அயலறி யாமை வாழ்ந்தார்" என்றார்.

வீட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தம் பக்கத்து வீட்டாரிடம் சொல்லாவிட்டால் தலை வெடித்தே

விடும் என்ற நிலையில் சில பெண்டிர்கள் இருப்பதை நாம் காணலாம். தமக்கும் கணவன்மார்கட்கும் விளைந்த சச்சரவுகளைக் கூறிக்களிக்கும் கயமைக் குணம் உள்ளவர்களும் உளர். அவற்றைக் கூறி அயலவர் தேற்றத் தேறும் மகளிரும் உளர். "என் வீட்டுக் காரரா? கூத்திக் கள்ளரல்லவா?" என்பதுபோலக் கூறிப் பெருமைகொள்ளும் பேதையரும் உளர். இவரெல்லாம் தம் கணவன்மார்கட்குப் பழிப்பினையே உண்டாக்குகின்றோம் என்ற எண்ணமே யில்லாதவராவர். இவரால் இவர்தம் தலைவர்கட்கு ஏறுபோற் பீடு நடை எவ்வாறுண்டாம்?

இத்தகைய கூட்டத்தைச் சார்ந்தவரில்லை நம் அம்மையார். தமக்கு அன்புற்ற கூட்டுறவு இல்லாமையை அயலார் அறியாதபடியே வாழ்ந்தார். நீலகண்டரும் அப்படியே இருந்தார். இவ்விருவரிடத்திருந்தும் நம் ஆடவரும் பெண்டிரும் அறியவேண்டிய சிறந்த கொள்கை இதுவேயாம். இது சிறந்த பண்பாடும் ஆம். இவ்வகையில் தம் கணவர்க்கு வர இருந்த புகழ்க்குறைபாட்டினைப் போக்கிக் கொண்டார் அம்மையார். எனவே அம்மையார், தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாதவராயினர்.

இனி வரலாற்றைத் தொடர்வோம்.

அன்புறு புனர்ச்சியின்மை அயலறியாது வாழ்ந்து வருவதை வெளிப்படுத்தி ஆட்கொள்ள எண்ணிய இறைவன், சிவயோகி வடிவுகொண்டு நீலகண்டர்பால் வந்து, ஒரு மண் பிச்சை ஓட்டினைக்கொடுத்து 'நான் மறு முறை வந்து கேட்குமளவும் பாதுகாக்க' என்று

கூறி அதன் பெருமையையும் இயம்பிச் சென்றார். நீலகண்டரும் அவ்வோட்டினைப் பாதுகாப்பான இடத்திலேயே வைத்தனர். இறைவன் அவ்வோட்டினை மறைத்துச் சிலகாலம் கழித்து மீண்டும் வந்து தம் ஓட்டைக் கொடு என்றனர். அடியவர் அதனை வைத்த இடத்திற் காணாது சிவயோகியிடம் மன்னிப்பு வேண்டி மண் ஓட்டுக்குப்பதில் பொன் ஓடு தருவதாகக் கூறினர். சிவயோகி வாதுக்கென்றே வந்தவராதலின், அடியவரை நோக்கி, "நின் மகன் கையினைப் பற்றி என் ஓட்டினைத் திருடவில்லை என்று குளத்தில் மூழ்கிச் சபதம் செய்து தருக" என்றனர். அடியவர் தமக்கு மகப்பேறின்மை குறித்து வருந்த, "நின் மனைவியின் கைப்பிடித்து மூழ்கு" என்றனர். அடியவர் அஃதியலாமை கூறித் துன்புற்றனர். இறைவனும் யோகி தில்லைவாழ் அந்தணரிடம் அழைத்துச் சென்று முறையிட்டனர். அவர்களும் சிவயோகி பக்கம் சார்ந்து நீல கண்டரிடம், 'மனைவி கைப்பற்றி மூழ்கிச் சபதம் செய்க' என ஆணையிட்டனர். ஆணையை ஏற்ற அடியவர், 'ஏற்ற வகையில் மூழ்கிச் சபதம் செய்கின்றேன்' என்று கூறி வீடுவந்து, மனைவியார்பால் யாவும் கூறி அழைத்துச் சென்று குளத்தை யடைந்து யாவரும் அறிய அதுவரையிலும் வெளியிடாதிருந்த உண்மையை—அதாவது தமக்குள் உடல் தொடர்பில்லாமலிருந்த செயற்கரும் செயலை வெளியிட்டுக் கூறி, அதனால் மனைவியாரின் கரம்பற்றி மூழ்க முடியாது என்று ஒரு மூங்கில் தண்டு கொண்டு அதன் இருதலைப்புக்களையும் அம்மையார் ஒரு தலைப்பையும் தாம் ஒரு தலைப்பையும்,

பற்றி மூழ்கினர். மூழ்கி எழுந்த இருவரும் மூப்பு நீங்கப் பெற்று இளமை வரப் பெற்றனர். சிவயோகியும் மறைந்தனர். அந்தணர் முதலியோர் வியந்தனர். இறைவன் திருவருள் இருவரையும் காத்துப் பேரின் பத்துக் குறுதுணை புரிந்தது.

இவ்வரலாற்றில், அம்மையாரின் சிறந்த செயல்க ளான கற்பைக் காத்ததும் கணவனைப் பேணியதும் அயல் அறியாமை வாழ்ந்ததும் ஆகிய மூன்றனுள் மூன்றும் இன்றி யமையாது நம்மால் அறியப்பட வேண்டுமென்றாலும் இறுதியில் உள்ளதைச் சிறப்பாக அறிய வேண்டும். அயலறியாது வாழ்தல் சிறந்த செயல் — செயற்கரும் செயல்.

குறையும் நிறையும்.

இவ்வாறு சிறந்த செயல் புரிந்த நம் அம்மை யாரிடத்தில் எளிதாக ஒரு குறையினைக் கூறிவிடலாம். பெண் ஒருத்திக்குத் தன்கணவன் பரத்தைபால் சென்று வந்தமை காரணமாக ஊடல் நிகழ்தல் இயல்பு. அவன் செல்ல வில்லை என்றாலும் சென்ற தாகக் கருதிக்கொண்டு, பின்னர் நிகழ இருக்கும் கூட்டத்திற்கு இன்பத்தினை மிகுவித்துக் கொள்ளவும் ஊடல் கொள்ளுதலும் உண்டு. அவ்வாறு ஊடல் கொண்டவிடத்துத் தலைவன் அவள் ஊடல் நீக்கிக் கூட முற்படுவான். சிறிது போழ்து உடன்படா ளாகிப் பின் உடன்படுவள். இருவரும் இன்புறுவர். இது வழக்கு. செய்யுட்களிலும் இவ்வழக்காறே உண்டு. தலைவியின் ஊடல் மிகுந்து காலம் நீண்ட தாயின், தோழி அதனை நீக்கி இருவரையும் ஒற்று மைப் படுத்துதல் உண்டு. இவ்வாறு நீக்கியதாகக்

குறுந் தொகை முதலிய சங்க இலக்கிய நூல்களில் பரக்கக் காணலாம். பிற்கால நூலாகிய தஞ்சை வாணன் கோவை என்ற நூலில்,

> புனையலங் காரநம் கற்பியல் போற்றியும் போற்றருஞ்சீர்
> மனையறம் பாலித்தும் வாழ்வதல் லால்தஞ்சை வானன் நன்னாடு
> அனையவண் டார்குழல் ஆரணங்கே நமக்கன்பர் இந்நாள்
> இனையரென் றுர்வமில் லாவுரை யாடல் இயல்பல்லவே. (38)

எனப் பாங்கியானவள், தலைவன் பரத்தமை கொண்டான் எனப்புலந்த தலைவியை இடித்துரைத் தமையும் காணலாம். 'கற்பினைப் போற்றியும் மனையறத்தை வழுவாது காத்தும் வாழ்வதையே நோக்கமாகக் கொள்வதன்றித் தலைவனைக் குறைகூறுதல் கூடாது' என்பது அதன் கருத்து. இவ்வாறு மனையற மகளிர் இருத்தல் வேண்டும் என நூல்கள் கூறவும் நம் அம்மையார், மாறுகத் "தீண்டுவீராயின் எம்மைத் திருநீல கண்டம்" என்றது தகுமோ? ஆதலின் கணவனிடம் கொண்ட மதிப்பில் குறைபாடுடையவர் என்பதோடு, கணவன் தவறுகண்ட விடத்துப் பொறுக்கும் பொறுமைக் குணமும் இல்லாதவராவர் என நம் அம்மையாரைக் கூறலாம்.

அம்மையார்க்கு ஊடல் வந்தமைக்குக் காரணம் நீலகண்டர் பரத்தைபால் சென்று வந்தமை என்ற அளவில் கூறவில்லை சேக்கிழார். காரணம் அதுவாயின் அம்மையார் குறையுடையவரே. அம்மையார் மானத்துடன் வாழ்பவர். தம் கணவனையும் அவ்வாழ்விலேயே கொண்டுவருபவர், அவர்க்கு மானக்கேடு வினைந்தது வினைந்ததாக எண்ணினார். அதனால் ஊடல் கொண்டார். "மானமுன் பொருது வந்த ஊடல்" என்று

ஊடலுக்குக் காரணம் கண்டு கூறினர். "மானமாவது தன் நிலையில் தாழாமையும் தாழ்வுவந்துழி உயிர் வாழாமையும்" என்றார் பரிமேலழகர். அம்மையார் எந்த வகையிலும் தமக்கு மானக்கேடு உண்டாக லாகாது என எண்ணினர். கற்புக்கேட்டால் விளைவதே மானக்கேடு என எண்ணவில்லை. தன் கணவருக்கு அவராலேயே மானக்கேடு நேரினும் தனக்கு நேர்ந்த தாக எண்ணுபவர். அதனால் மிகவும் அரிதாகத் தன்னைக் காத்தும் கணவரைக் காத்தும் வந்தவர். காத்தும் கணவர் இன்பத்துறையில் எளியராயினரே என்பதை எண்ண எண்ண அவர்க்கு மானக்கேடு விளைந்ததாகவே பட்டது.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

என்றார் வள்ளுவர். ஆம்! மானம் கெடவந்ததால் அம் மையார் உயிர்விட்டிருக்கத்தான் வேண்டும். உயிர்விட வில்லை. ஏன்? கணவரைக் காப்பார் யாவர்? கண வரைக் காவாதது குற்ற மன்றே? கணவர் செய்த தவறு காரணமாக மனம் ஏங்கி ஏங்கி உயிர் இழக்க வேண்டிய நிலையைக் கணவரைக் காக்கும் பற்றுதல் காரணமாக-அதாவது கற்பின் காரணமாகத் தடுத்துக் கொண்டார். அதன்விளைவு ஊடல் அளவில் நின்றது.

பெண்ணுக்குரிய இலக்கணங்களுள் புவிப் பொறை யும் கூறப்பட்டிருக்கின்றதே! அவ்வகையில் கண்ணகி போல இவர் பொறுத்த தன்மையால் அவ்விலக்கணத் திற்கு மாறுபடாரோ எனின் மாறுபடார் என்னலாம். பொறைக்கும் ஓர் எல்லை உண்டு. பொறுக்கக் கூடியன

பொறுக்கலாம், கணவர் செய்த பிழை அவரளவில் பொறுக்கக் கூடாததாயிற்று. பிழை மானம் கெட வந்த பிழை; அதனால் பொறுக்கக் கூடவில்லை. என்றாலும் ஓரளவில் பொறுத்ததாலேயே தாம் உயிர் விடாமல் ஊடல் மட்டும் கொண்டார்.

மானம் பொருதுவந்த ஊடலைத் தணிப்பாரும் இலர். ஏன்? இவர் தம் குடும்பநிலை அயலவர்க்குத் தெரிதல் கூடாது என்ற கொள்கையினர் அல்லவோ? தெரிவதை மானக்கேடு எனக் கொண்டவர். அதனால் ஊடல் கொண்டதும் பிறர்க்குத் தெரியாதன்றோ? எனவே அவ்வூடலை நீலகண்டரே நீக்கவேண்டிய தாயிற்று. நீலகண்டரும் முற்பட்டார். நீலகண்டரது நோக்கம் ஊடல் நீக்கிக் கூடல் வேண்டும் என்பது. அம்மையாரது நோக்கம் மானம் கெட்டு இனி இன்பம் தேவையில்லை என்பது, கணவரையும் நல்வழிப்படுத்த வேண்டும் என்பதும் உண்டு. அதனால் தன்னைத் தீண்டவேண்டாம் என நினைத்தவர், அவ்வாறு கூறி விட்டால் தன்பால் இன்பம் பெறுதலை விட்டுப் பரத்தையர்பால் பெறச் சென்று விடுவர்; அதனால் உலகினர் அவரைப் பழிப்பர்; அப்பழிகேட்டு மனைவி யிருப்பா ளானால் அதனினும் மானக் கேடு வேறு வேண்டிய தில்லை; அதனால் பரத்தை பாலும் நாடவிடுதல் கூடாது என்றெல்லாம் நன்கு எண்ணியவராய் தன் பெண்ணினத்தாரை உட்படுத்தி 'எம்மைத் தீண்டா தீர்' என்றார், அறிவுடையார் நீலகண்டர்; அன் புடையார் இறைவன் நீலகண்டத்தில். அதனால் அன்று முதல் பிறமாதரையும் மனத்தாலும் தீண்டாதவரானார். அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாது வாழ்ந்தார்.

எனவே உலகில் நிகழும் ஊடலும் இலக்கியங்களிற் காணும் ஊடலும் போலன்றி மானம் பொருதுவந்த ஊடலாதலின் அம்மையார்பால் மேற் காட்டிய குற்றம் தங்காது என்னலாம். இறைவன் அருள்பெறும் பேறுடையவராதலின் அவ்விருவரின் ஊழ் அவ்வாறு மானம் பொருத ஊடலை உண்டாக்கி அது காரணமாக கூ அருள்பெரும் படிச்செய்தது எனவும் கொள்ள வேண்டும்.

---

(2)

இளையான்குடிமாற நாயனார் மனைவியார்

முன்னுரை.

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மானக் கடை.

"மனைவி நல்லவளானால் ஒருவனுக்கு இல்லாதது என்ன இருக்க முடியும்? எல்லாம் உள்ளவாம். அவள் நல்லவ ளில்லை என்றால் அவனுக்கு உள்ளது என்பது யாது? யாவும் இல்லாமலேபோம்." என்பது மேற் குறளின் கருத்து. நல்லவள் என்பதற்கு "நற்குண நற் செய்கைகள் உடையவள்" என்பது பொருள்.

"நற் குணங்களாவன துறந்தார்ப்பேனும்,
விருந்தயர்தலும்' வறியார் மாட்டருளுடைமையும் முதலாயின.
நற்செய்கைகளாவன வாழ்க்கைக்கு வேண்டும்
பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும் அட்டில்
தொழில் வன்மையும் ஒப்புரவு செய்தல் முதலாயின."

எனப் பரிமேலழகர் 'மாண்பு' என்பதற்கு விளக்கம் எழுது மிடத்துக் கூறினர். இவைகளையுடைய ஒருத்

தியை மனைவியாக வாய்க்கப் பெற்றவனே இல்லறப் பயன் யாவும் பெற முடியும். மேற் கூறப் பட்டனவற் றுள் ஒன்றிரண்டு குறையினும் இல்லறம் செம்மை யுறாது. கணவன் விருந்தயரும் உள்ளத்தானாக மனைவி மாறுக இருப்பானேயானால்

இருந்தங் கிதம்பேசி யிருமிப் பேன் பார்த்து
விருந்துவந்த தன்பன் விளம்பத்—தீருந்தடியாள்
ஆடினுள் பாடினுள் ஆடிப் பழமுறத்தால்
சாடினுள் ஓடோடத் தான்''

என ஔவையார் கூறியவாறு கண்டவர் பழித்துரைக்க நேரும். மனைவிக்குரிய மாண்புகளுள் ''அன்னதையை'' முதலியனவும் இன்றியமையாதனவேயாம்.

''அன்னை தையையும்'' என்ற பாடலில், புவிப் பொறையும், மந்திரி மதியும் கூறியதிலிருந்து இல் வாழ்க்கையில் கணவன் தவறுபடவும் கூடும் என்பதும், மனைவி அதனைப் பொறுத்துத் தன் அறிவால் அவனைத் திருத்துதல் வேண்டியவள் என்பதும் அறியலாம். ஊழ் வயத்தால் ஏற்படும் குறைபாடு வலியுடையது. அதனை யும் பொறுக்க வேண்டும்.

ஊழ் வயத்தால் குடும்பத்தில் ஏற்படும் குறை பாடுகள் வறுமை முதலியன எய்துதலாம். தொடக்கத் திருந்தே வறியநிலையுடைய குடும்பமானால் அக் குடும்பத் தலைவி அவ்வறுமையைக் குறையாக எண்ணமாட்டாள். ஆனால் தொடக்கத்தில் நல்ல நிலையில்—செல்வத்தில் வாழ்ந்த குடும்பத்து மனைவியே பின் வறுமை வந்ததா யின் வருந்த நேரும். அவ்வாறு வருந்தும்போது அவ் வருத்தம் ஒருகால் தீய நெறியில் ஈர்த்துச் சென்று விடுதலும் கூடும். அதற்கு இடம் கொடாது 'இது நம்

ஊழ்வினை என அமைவதே புவிப் பொறைக் குணம். புவி தன்னைத் தாக்குப வரையும் தாங்குகின்றது. மனைவி தன்னைக் கணவன் துன்பத்திற் சேர்க்கினும் பொறுக்க வேண்டும் என்பதன்றியும் பிறவகையில்—வறுமை முதலியன வகையில் வரும் துன்பத்தையும் பொறுக்க வேண்டும். இதுவே புவிப் பொறையாம். சிறந்த செல்வத்துடன் வாழும் குடும்பத்தினர் ஒரு நல்ல செயலை—தமக்கு உறுதி தரும் செயலை மேற்கொண்டு தவறுது நடத்தி வரும் காலத்தில் வறுமை வந்ததாயின் உடனே மனம் மாறுபடக் கூடும். "தீமை செய்கின்றான் அவன்; அவன் சுகமாக வாழ்கின்றான். தான தருமங்கள் செய்யும் நமக்குத்தான் வறுமை வந்து வாட்டுகின்றது. இனி தான தருமங்களையெல்லாம் விட்டுத்தள்ள வேண்டியது தான்" என்ற எண்ணம் தோன்றி விடும். அவ் வெண்ணம் தோன்றுவாறு மனப் பொறுமை கொண்டு அறிவிற்கும் வேலை கொடுத்து இவ்வறுமைக்குக் காரணம் யாதாகும் என்பதை

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

என்ற வள்ளுவர் வாக்குப்படி அறிந்து 'ஊழ்' என்ற முடிபிற்கு வருதல் வேண்டும். வந்து தாம் கொண்ட உறுதியான கோட்பாட்டினின்றும் சிறிதும் வழுவாது அதனைக் காத்தல் வேண்டும். இவ்வாறான சமயங்களில் ஆண்களை விடப் பெண்களே அமைதியுள்ளவர்களாகவும் அறிவுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். எடுத்த காரியத்திற்கு இடையூறு நேர்ந்ததாயின் அதனை நினைத்து அசர்ந்து விடுவர் ஆண்கள். அப்போது தக்க அறிவு கூறி அக்காரியத்தை நிறை வேற்றும்படிச்

செய்வது பெண்களின் கடமை. சந்தர்ப்பத்தில் அறிவு வழங்கும் பண்புடையவள் மந்திரிமதி யுடையவளாவாள்; மாண்புடையவள் ஆவாள்.

மேற் கூறிய யாவும் வாய்க்கப் பெற்றவர் நம் இளையான் குடிமாற நாயனார் மனைவியார்.

வரலாறு.

நம் அம்மையாரின் கணவர் இளையான்குடி என்ற ஊரில் வேளாண் குடியில் வந்தவர்; மாறன் என்ற பெயருடையவர். பெருத்த வயல் வளம் உள்ளவராகவும், சிவபிரானிடத்தும் அடியாரிடத்தும் அன்புள்ளவராகவும், அடியவர்கட்கு நாளும் நாலுவகையிலும் ஆறு சுவையிலும் உணவு அருத்துபவராகவும் விளங்கினர். இவரது உறுதியான நோக்கம் அடியார்கட்கு அமுது செய்வித்தல். இறைவன் இவரது உறுதியை உலகினர்க்கு வெளிப் படுத்துவான் வேண்டி இவர்க்கு வறுமையை உண்டாக்கினன். வறுமையிலும் தம் உறுதியைக் கைவிட்டார் இல்லை. விற்க வேண்டிய அனைத்தையும் விற்று நிறைவேற்றி வந்தார். இந்நிலையில் ஒரு நாள் சிறிதளவு தம்மிடம் இருந்த விதை நெல்லையும் வாரத்திற்கோ அன்றிக் குத்தகைக்கோ கொண்ட நிலத்தில் விதைத்து உண்ணவும் உணவின்றி இருந்தார். அன்று சிவபிரான் ஓர் அடியவர் போல வேடங் கொண்டு இரவு வேளையில் மழையில் நனைந்த வராய் மாறனார் மனை நோக்கி வந்தார். மாறனாரும் அவரை வரவேற்று ஈரம் துவட்டி ஆசனத்திருத்தி மனைவியாரிடம் சென்று, "அடியார் மிகப் பசித்து வந்திருக்கிறார். நமக்கும் இப்போது உணவில்லை. என்றாலும் இவர்க்கு எப்படியாவது உணவிட

வேண்டுமே! எவ்வாறியிலும்?" என ஒன்றும் அறியாத வராக வினவினர். அதற்கு அம்மையார் "எனக்கு ஒருவகையும் தெரியவில்லை. பிறரும் இனிமேல் கடன் தர மாட்டார்கள். என்ன பாவமோ இவ்வாறு நம் கதி யாயிற்று. ஒன்று தோன்றுகின்றது. அதன்படி செய் வதே சிறந்ததாகும். பகலில் நீங்கள் விதைத்து வந்த நெல்லை வாரிக் கொண்டு வாருங்கள். நன்றாக மழை பெய்திருக்கிறபடியால் அவை மிதக்கும். ஒன்று குவித்து வாரி வரலாம். அதனைக் கொண்டு வந்தால் நன்றாக அமுதாக்கலாம். அடியவர்க்குப் படைக்கலாம்; இது தவிர வேறு வகையில்லை" என்று வருந்திக் கூறினர். உடனே மாறனார், அவ்விரவில் மழையில் நனைந்தவாறே சென்று நெல் முளைகளை வாரியெடுத்து வந்து கொடுத்தார். மனைவியாரும் அதனை நன்றாகச் சேறு போகக் கழுவிப்பின் மாறனாரிடம் அடுப்பு மூட்ட விறகில்லையே என்றனர். மாறனாரும் வீட்டில் தொங்கிக் கிடந்த அலக்குகளை வெட்டிக் கொடுத்தார். அம்மை யார் நெல்லை அரிசியாக்கிப் பதமாகச் சோறாக்கிப் பின், 'கறிக்கு என் செய்வோம்.' என்றார். மாறனார் வந்த அடியவர் பசித்திருக்கிறாரே என்ற கவலையுடன் சென்று தோட்டத்து முளைத்த கீரைகளைப் பறித்து வந்தார். அக் கீரைகளைக் கொண்டு பல வகைக் கறி களைச் சமைத்துக் கணவனார்க் கறிவித்தார். மாறனார் அடியாரை அமுது செய்விக்க அழைக்கச் சென்றபோது அடியார் மறைந்து வானவெளியில் அம்மையப்பராகக் காட்சியளித்தார்.

மாட்சி

வரலாறு இவ்வளவே. இவ்வரலாற்றில் சேக் கிழார் அம்மையாரின் மனமாட்சியை நன்கு விளக்கிச்

செல்லுகின்றார். அம்மையாரின் விருந்தயரும் நற்குண மும் சமையல் தொழில் வன்மையும் சேக்கிழார் கூற்றி விருந்து நாம் நன்கு அறியலாம். நெல் முளைகளை வாரிக் கொண்டு வரும்போது அவர் வாயிற்படியில் எதிர் பார்த்திருந்து, "சிந்தையில் விரும்பி நீரில் சேற்றினை அலம்பினதாகவும், வெறுப்பு இல் இன் அடிசில் ஆக்கி னதாகவும் கூறியிருக்கின்றார் சேக்கிழார்." இவற்றால் விருந்தயரும் குணமும் அட்டில் தொழில் வன்மை யும் புலப்படும். கீரைகளைக் கொண்டு வேறு வேறு கறிவகைகளைச் சமைத்தது கொண்டும் அட்டில் தொழில் வன்மை யுணரலாம். 'அடியார்க்கு அமுது படைப்பது எவ்வாறு?' என ஏங்கிய கணவர்க்கு, பகலில் விதைத்த நெல்முளைகளை வாரிவரும்படி அறிவு கொடுத்த மதியினையும் நாம் கருதுதல் வேண்டும். வறுமைக் காலத்தும் உறுதிக்கு உலைவு வராதவாறு மனம் பொறுத்தும், மாறனார் தம்மைவிற்றுக் கொடுத் தால் கடன் யாவும் அடைந்துவிடும் அளவுக்குக் கடன் பெற்று வந்தகாலத்தில் தன் அணிகலன் முதலியன வற்றை இழப்பதற்கு உடன்பட்டும் இருந்த நிலை மனை மாண்பினைப் புலப் படுத்துகின்றதன்றே?

குறையும் நிறையும்.

மனைத்தக்க மாண்புடைய நம் அம்மையாரிடம் ஒரு குறை பாடுண்டெனக் கூறலாம். சேக்கிழார் அடிகள் புராணம் சொல்லிச் செல்லும் முறை அக்குறை பாட்டினைப் புலப்படுத்துகின்றது. நெல்முளைகளை வாரிவரச் செய்த அம்மையார், அவற்றைச் சேறுபோகக் கழுவிய பின்னர் அடுப்பிற்கு விறகில்லை யென்றதாகவும், விறகினைக் கொண்டு வந்து கொடுத்ததும் அடுப்பு மூட்டி

நெல்லை அரிசியாக்கிச் சோறு சமைத்த பின்னர் 'கறிக்கு என் செய்வோம், என்றதாகவும் சேக்கிழார் கூறுகிறார். இவர்கூற்று அம்மையாரின் குறைபாட்டினையே புலப் படுத்துகின்றது. குடும்பத்தில் இருக்கும் ஒருத்தி தன் கணவனை வீட்டிற்கு வேண்டும் பொருள்களை வாங்கி வரும்படிக் கடைக்கு அனுப்பும் போதே எல்லாவற் றையும் சொல்லியனுப்பாமல் சிலவற்றை மட்டும் சொல்லியனுப்பி அவன் வாங்கி வந்த பின்னர், உளுந் தில்லை, பயறில்லையென்று மீண்டும் அவனைக் கடைக்கு அனுப்புவது போன்றதாகும் அம்மையாரின் செயல். நெல்முளையை வாரி வந்தவுடனேயே விறகில்லை, கறிக்குரியன இல்லை என்று கூறியிருந்தால் அடியார்க்கு இன்னும் சற்று விரைவில் அமுது சமைத்திருக்கலாம் அன்றோ? இக்குறையினை நாம் காணும் வகையில் சேக்கிழார் பாடிய பாடல்களைக் காண்போம்.

வந்தபின் மனைவி யாரும் வாய்தலின் நின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரில் சேற்றினை யலம்பி யூற்றி
வெந்தழல் அடுப்பில் மூட்ட விறகில்லை யென்ன மேலோர்
அந்தமில் மனையில் நீடும் அலக்கினை அறுத்து வீழ்த்தார்

முறித்தவை யடுப்பின் மாட்டி முனைவித்துப் பதமுன் கொள்ள
வறுத்தபின் அரிசி யாக்கி வாக்கிய உலையிற் பெய்து
வெறுப்பில்இன் அடிசில் ஆக்கி மேம்படு கற்பின் மிக்கார்
கறிக்கினி என்செய் கோமென் றிறைஞ்சினர் கனவனரை.

இப்பாடல்களில் அம்மையார் நெல்முளைகளை நீரில் சேற்றினை அலம்பியூற்றியபின் 'விறகில்லை' என்ற தையும் அடிசில் ஆக்கி 'கறிக்கினி என் செய்வோம்' என்றதையும் நோக்குக. இவ்வாறு ஒவ்வொன்றையும் செய்து முடித்துக் கொண்டே வந்தமையால் நேரம்

ஆகியது. அதனுல் கறிக்காகக் கீரைபறிக்கச்சென்ற மாறனரும், "வழிவரும் இளைப்பி னேடும் வருந்திய பசியினுலே அழிவுறும் ஐயன்" என எண்ணிக் கொண்டே சென்றார். எனவே நம் அம்மையார்க்கு இவ்வகையில் ஒரு குறைபாடு உண்டு என்னலாம்.

இதற்குக் கூறலாம் அமைதி யாது? வந்த அடியவர்க்கு நல்ல முறையில் முன்னெல்லாம் அமுது படைத்தது போன்று உண்டி நாலு விதத்திலாறு. சுவைத்திறத்தில் படைப்பதற்கு இல்லையே என்ற பெரிய கவலையை மனதில் கொண்டமையால் இன்னது செய்கின்றேம் என்ற உணர்வின்றியே ஒவ்வொன்றுகச் செய்துவர முட்டுப்பட்ட இடத்துக் கணவனரிடம் கேட்டனரோ என்று நாம் எண்ண வேண்டும். இவ் வகையில் அமைதி கொள்வதே சாலச் சிறந்ததாகும்.

---

(3)

திலகவதியார்

வழிகாட்டி.

திருப்பாதிரிப்புலியூரில் திருக்கோவலூர் ஆதினம் ஞானியார் மடாலயத்தில் ஐந்தாம் பட்டமாக எழுந் தருளியிருந்த அருள் மிகு சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் ஒருகால் தலயாத்திரைக்குச் சென்றபோது ஆடுதுறைக் கணித்தாயுள்ள வடமட்டம் என்னும் வேதமடம் அடைந்தனர்.

"வடமட்டம் ஜமீன்தாரான திருவேங்கடம் பிள்ளை யவர்கள் அடிகளாரை அன்புடன் வரவேற்ற னர். வேத மடம் ஸ்ரீ வாகிச பக்த பதசேகர சபையின் முதல் ஆண்டு நிறைவு விழா 3-1-1919 முதல் மூன்று

தினங்கள் அடிகளார் தலைமையில் சிறப்பு வகையாகக் கொண்டாடப்பட்டது, கடைசி தினத்தில், "பிற மதம் புகுவோர் விரும்பினால் அவரை மீட்டும் சைவ சமயத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்று ஒரு தீர்மானத்தைச் சச்சிதானந்தம் பிள்ளை யவர்கள் கொண்டுவந்தனர், கும்பகோணம் தமிழ்ப் பண்டிதர் வேங்கடராம ஐயரவர்கள், "மீண்டும் அவர்கள் செல்லின் என் செய்வது? இன்று இவ்வளவு நிர்ப் பந்தம் உள்ளபோதே அவர்கள் செல்வதால் அவர்களைச் சேர்ப்பதால் நமது சமயத்தின் பெருமையே கெட்டு விடும்." என்றனர், அதனைப் பல அன்பர்கள் ஆதரித்துப் பேசினர். அதன்பின், "பிற சமயம் புகுவோர் மனம் மாறி நம் மதத்திற்கு மீண்டும் வர விரும்பின் அவர்களை ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்றும், "அவர்கள் இரண்டாவதாகவும் மதம் மாறுவார்களானால் அவர் களை என்றுமே சேர்க்கக்கூடாது" என்றும் ஒரு திருத்தப் பிரேரேபணையைத் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள் கொண்டு வந்தனர். அது அனை வராலும் ஏற்றுக் கொள்ளப் பெற்று முடிவு செய்யப் பெற்றது.

அதற்கு முடிவுரை கூறிய அடிகளார், "திருவதி கையில் திலகவதியார் என்னும் மாதசிரோமணி பஞ் சாட்சரத்தைக் கூறித் திரு நீறளித்துப் பிற மதம் புகுந்த தன் தம்பியாரைச் சைவராக்கினர். ஆண் பிள்ளை கள் என்று சொல்லிக் கொள்ளும் நாமோ இன்று துணிவும் நம்பிக்கையும் இன்றி ஆராய்ச்சித் துறையில் இறங்கியுள்ளோம்." என்று சொல்லும்போது அனைவர் கண்களிலும் ஆனந்த பாஷ்பம் பொழிந்தன."

(ஞானியார் சுவாமிகள் வாழ்க்கை வரலாறு. பக். 53-54)

இவ்வாறு எங்கள் அடிகளரால் புகழ்ந்துரைக்கப் பட்ட திலகவதியார் தம்பியார்க்காகவே உயிர் வாழ்ந் ததை உடன் பிறப்புள்ள மகளிர்கள் நன்கு நினைத்துப் பார்க்கவேண்டும். திலகவதியாரைத் தமக்கு ஒரு வழி காட்டியாகக் கொள்வாராக. பிற சமயத்திலிருந்து சைவம்சார எண்ணுபவரை ஏற்றுக் கொள்ளும்படி சைவ மதத் தலைவர்கட்கு வழி காட்டியவர் திலக வதியார்.

பேருள்.

நடுநாட்டுத் திருவாமூரில் தோன்றியவர் நம் திலக வதியார். தந்தையார் புகழனார்; தாயார் மாதினியார்; தம்பி மருள் நீக்கியார். தாய்தந்தையரால் உறுதிபடுத்தப் பட்ட கலிப்பகையார் என்பவரைக் கணவனாக மனதில் பதித்துக் கொண்டார் அவர். கலிப்பகையார் தம் திருமணத்திற்கு முன் தம் அரசன் ஏவலை மேற் கொண்டு வடநாடு சென்று போர்புரிகையில் அம்மை யாரின் தாய்தந்தையரான மாதினியாரும் புகழனரும் உயிர் நீத்தனர். திலகவதியார் தம்பியாரான மருள் நீக்கியாருடன் சுற்றத்தின ரிடையிலிருந்து வந்த காலத்தில் வடக்கேசென்ற கலிப்பகையார் போரில் உயிர்நீத்த செய்தி எட்டியது உடனே திலகவதியார் தாமும் உயிர்நீக்க எண்ணியபோது தம்பியார், தம்மை விட்டுப்பிரியின் தாம் முன்னதாகவே இறப்பதாகக் கூறினர். தம்பியார் வாழவேண்டும் என்ற எண்ணத் தால் அம்மையார் தாம் இறவாது கைம்மை நோன்பை மேற் கொண்டனர், இவ்வரலாற்றினைச் சேக்கிழார்.

தம்பியார் உளராக வேண்டுமென வைத்த தயா
உம்பருல கணையவுறு நிலைவிலக்க வுயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார்

என அழகாகக் கூறுகிறார். தம்பியார் உலகில் உயிர் வாழ வேண்டும் எனவைத்த தயை அவரது இறப்பினை-உயிர்விடுவதை விலக்கியதாம்.

உலகில் உடன் பிறந்தார்களிடம் அன்பு கொள்வது இயல்பு. அம்மையார் தன் உடன் பிறந்தாரான மருள் நீக்கியாரிடம் அன்பு கொண்டதாகக் கூறாமல் அருள் கொண்டதாகக் கூறுகிறார் சேக்கிழார். தயா என்ற வட சொற்கு அருள் என்பது பொருள். அருளாவது தொதுமலரிடத்துத் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி-அம்மையாருக்கு நேர் தம்பியார் மருள் நீக்கியார். அவ்வாறிருக்க அவரிடம் அம்மையார் வைத்தது தயை என்கின்றார். அதனால் நாம் அறியவேண்டுவ துண்டு. அம்மையாரது அருள் நோக்கம் மருள் நீக்கியாரை மட்டும் குறித்ததன்று, உலகமக்களையும் குறித்ததாகும் என்னலாம். உலகில் தம்பியார் இருந்து நன்னெறி சென்று மக்களுக்கும் நல்லனபுரிய வேண்டும் என்ற எண்ணம் இருந்தமையால் அவர் அருள் தம்பியார்க்கேயன்றி மக்களுக்கும் உரியதாகும் என்னலாம். தம்பியாரிடம் மட்டும் சென்றதாயின், அது அருள் எனப்படாது. அன்பு எனப்பட்டுப் பொதுவில் பெண்களின் உடன் பிறப்புப் பற்றுப் போன்றதாகிவிடும். அம்மையார் கைம்மை நோன்பு கொண்டவர். உலகப் பற்றினை விட்ட நிலையினர். அதனால் அனைத்துயிர்க்கும் அருள் தாங்கினர். தவம் தாங்கினர். தவத்திற்கு

இன்றியமையாத அருள் உணர்வு தம்பியார் மாட்டும் எழுதுவதாயிற்று.

உடன் பிறப்பு

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி—உடன் பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பினிதீர்க்கும்
அம் மருந்து போல்வாரும் உண்டு.

இப்பாடல் ஈண்டு நினைவுக்கு வருகின்றது. உடன் பிறந்தவர்கள் சொத்து காரணமாகத் தம்முள் பகைத்து ஒருவரை ஒருவர் வீழ்த்தப் பார்ப்பதைக்காண்கின்றோம். அண்ணன் ஆண்ட நாட்டைக் கைப்பற்றிக் காட்டிற்கு விரட்டிய இளங்குமணன் வரலாற்றினையறியாதவர் இலர். இவன் போன்றூர் யாவரும் நோயைப் போன்ற வரேயாவர். தமக்கு வர இருந்த பேரரசினையே துறந்து முறைப் படி அண்ணனுக்கே அரசு உரியதாக வேண்டும் என எண்ணி அண்ணனாகிய செங்குட்டுவனுக்கே அரசை விடுத்துத் துறவு பூண்ட இளங்கோவடிகள் போன்றூர் உலகில் மிக அரியராவர். மேற்பாட்டு இளங்கோவைப் போன்றுரை நோக்கியதன்று. இளங்குமணனைப் போன்றுரை நோக்கியதாகும், உடன் பிறப்பாளர் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதவர். "தம்பியுடையான் படைக்கஞ்சான்" என்று வழங்கும் வழக்கினையும் கேட்கலாம். உடன் பிறப்பினர் அனைவரும் ஒற்றுமையுடன் இருத்தல் வேண்டும். தலைவன் கொள்கையை மற்றவர் புறக் கணிக்கலாகாது. மற்றவரும் தன்னை மதிக்குமாறு அவர்களுடன் கலந்தே தலைவனும் யாவும் நடத்தல் வேண்டும். இவ்வாறு செல்லும் வாழ்நாளில் உடன்

பிறப்பினர்கள் உலகினரால் புகழ் பெறுவர். வேண்டும் பலன் பெறுவர்.

"மாறில் உடன் பிறப்பில்லா உடம்பு பாழ்" என்றதையும் கவனித்தல் வேண்டும். உடன் பிறந்தான் மாறுபாடின்றி யிருக்கவேண்டும். உடன் பிறப்பு எனப் பொதுப் படையில் இருத்தலால் உடன் பிறப்பு ஆணாகவோ பெண்ணாகவோ இருவருமாகமோ இருக்கலாம். ஆணாகவே யிருக்க வேண்டும் என்ற நியாதியில்லை. யாவராயினும் மாறுபடாதிருக்க வேண்டும்.

உடன் பிறப்பினர்களுள் மாறுபாடு நிகழ்வதற்குரிய காரணங்கள் இருபாலும் நிகழும். இராவணனுகிய அண்ணன் தீநெறியில் சென்றது காரணமாக வீடணன் அவனைப் பிரிந்தான். இவன் பிரிவுக்கு அண்ணன் குற்றம் காரணம், அண்ணனுகிய குணமணனுடைய ஈகைக் குணத்தை வெறுத்தும் அரசைக் கைக்கொள்ள எண்ணியும் இளங்குமணன் அண்ணனைப் பிரித்தான். இவன் தன்குற்றம் காரணமாக அண்ணனைப் பிரித்தான். வீடணனும் இளங்குமணனும் நல்லவர் தீயவர் என்பன வற்றில் முறையே சேர்த்தற்குரியர். இவர்கள் இராவணனுக்கும் குமணனுக்கும் மாறில் உடன்பிறப்பினர் ஆவாரோ? இராவணனுக்குக் கும்ப கருணனே மாறில் உடன்பிறப்பினன் ஆவான். சூரபதுமனுக்கு அவன் போக்கினைக் கண்டித்த சிங்கமுகனும் அவனைப் பிரியாது முருகனுடன் போர்புரிந்து உயிர் நீத்தமையால் மாறில் உடன்பிறப்பினனே. உடன்பிறந்தான் தன்மனம் வெறுக்குமாறு தீநெறி நடந்தாலும் அவனை உடனே வெறுத்தொதுக்காமல் எவ்வகையிலும் அவன்தான் செல்லும் நன்னெறியிலேயே கொண்டு வருவதற்குப்

பாடு படுதல் வேண்டும். அழிவே நேரினும் சிங்க முகனும் சூரபது மனும் போலவும், கும்பகருணனும் இராவணனும் போலவும் அழிதல் வேண்டும். இத் தகையவனே மாறில் உடன் பிறப்புடையவனாவான். மாறில் உடன்பிறப்பு ஆணையினும் பெண்ணையினும் வேண்டுவதே.

வழிகாட்டிய வகை.

மருள் நீக்கியாருக்கு மாறில் உடன் பிறப்பாக அமைந்தார் திலகவதியார். இவர்கள் சைவவழியினர். திலகவதியாரின் துணை கொண்டு உலகநிலையாமை யுணர்ந்து துறவு நெறி கொண்டவர், காலமாறு பட்டால் சைவம் விட்டுச் சமணம் புகுந்தார். பாடலி புத்திரம் என்னும் நகர் அடைந்து அங்கிருந்த சமணர்க ளால் சமணராக்கப்பட்டுத் தரும சேனர் என்னும் சிறப் புப்பெயரும் அடைந்து சமணரால் போற்றப் பட்டார். திலகவதியாருக்குத் தம்பியாரின் மதமாறுதல் கவலைக் கிடமாக்கியது தம்பியாரை வெறுக்கவில்லை. தாம் உயிருடன் இருப்பதே தம்பியார்க்காக அன்றோ? அதனால் தம்பியாரிடம் கொண்ட அருளில் சிறிதும் தளரவில்லை. மீண்டும் தம்பியாரைச் சைவராக்க எண்ணினார். திருவாமூர் விட்டுத் திருவதிகை வந்து சேர்ந்தார். அங்கு இறைவனுக்கு வேண்டிய திருப் பணிகள் பலவற்றையும் புரிந்தார். இறைவனிடம் "அடியேன்பின் வந்தவனை ஈண்டுவினைப் பரசமயக் குழியின்றும் எடுத்தாள வேண்டும்" எனப்பரவினர். அவர் பரவுதலுக்குச் சிவபிரான் அம்மையாரிடம் "உன்னுடைய மனக்கவலை ஒழி; அவனைச் சூலை நோய் கொடுத் தாட்கொள்ளுகிறோம்" என்றருளினார். பாடலி

புத்திரத்திருந்த தருமசேனர்க்குச் சூலைநோய்கண்டது. சமணர் போக்க முடியாது கைவிட்டனர். தரும சேனர் தமக்கையார்க்கு ஓட்போக்கினர். தமக்கையார் அவர் இடம்போக மறுத்தனர். பின்னர் தருமசேனரே நேரே திருவதிகை வந்து தமக்கையாரைப் பணிந்து உய்யும் நெறியருள்க என வேண்டினர். அம்மையாரும் சிவபிரானையே வணங்கும்படிக் கூறிச் சமயமாற்றம் வேண்டித் திருவாளன் திருநீற்றினை அஞ்செழுத்தும் ஓதிக் கொடுத்தார், அன்று முதல் மீண்டும் சைவராகித் திகழ்ந்தார் மருள் நீக்கியாரே—தரும சேனரே—நம் திருநாவுக்கரசராவார்.

இவ்வாறு தம்பியாரைச் சைவராக்க மதம் மாற்றிய செயலையே விதந்து எங்கள் ஞானியார் அடிகள் தம் தலைமை முடிப்புரையில் அனைவரும் வியக்கக் கூறினர்கள். திலகவதியார், • நாட்டில் உடன்பிறப்பாக இருந்து ஆடவர்க்கும் சிறப்பாகப் பெண்களுக்கும் நல்லறிவு புகட்டிய தோடன்றிப் பேரறிஞர் கட்கும் "பிறமதம் புக்கோர் மீண்டும் தம்மதம் புகவரின் அவரை வெறுத் தொதுக்காது ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்ற சிறந்ததொரு கருத்தினையும் அறிவுறுத்தினர்.

---

(4)

செட்டி மகளார்

"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"

என்பது ஆன்றோர் வாக்கு. மகளிர்களுக்கு நாணம் மிக இன்றியமையாதது. "நாணமாவது பழிபாவங்களின் மடங்குதல்" என்றூர் ஓர் உரையாசிரியர். மகளிர்கள் எவ்வகையிலும் தங்கட்குப் பழி பாவம் வாராவண்ணம் காத்துக் கொள்ளல் வேண்டும். எவ்வாறு காக்க இயலும்? அவை வருதற்கான செயல்களே மேற் கொள்ளாது விட்டால் காக்க இயலும். சிலசமயங்களில் அவை வருதற்குரிய செயல்களேச் செய்யநேரின் என் செய்வது? அச்சமயத்தில் அச்செயல்களால் வரும் பயன்களேச் சீர்தூக்கி அவை சிறந்தனவாயின் பழி பாவங்கட்குரிய செயல்களேயும் செய்யலாம். அதனல்தான் நாணினும் கற்புச் சிறந்தது என்று கூறப்பட்டது. சிறுத்தொண்டர் மனைவி வெண்காட்டு நங்கையார் தம் ஒரே மகனேயும் கொல்லத் துணிந்தார். ஏன்? தம் கணவனூர் உய்வதே தமக்கு உறுதியானது; சிறந்தது, என்ற எண்ணம் தோன்றவே கொலேப் பாவத்திற்கும் உடன் பட்டார். அதனல் விளேந்தபயன் பெரிய தாயிற்று பின்னர். இது வெண்காட்டு நங்கையார் வரலாற்றில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. எனவே கற்பின் உயர்வு குறித்துச் சிலசமயத்தில் நாணேயும் விடவேண்டியதுதான்.

நாணேயம் விட்டுக் கற்பினேக் காக்குமிடத்து எவ்வெவ்வகையில் தவறுபடாமல் நடக்கலாமோ அவ்வவ் வகையில் நடத்தல் வேண்டும்.

ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

என்றூர் நம் கடவுட்புலவர். கற்பினைக் காக்கு மிடத்தும் பெரியோர்கள் சிறப்பித்துப் போற்றும்படி யான நிலையில் ஒழுக்கத்தினையும் உடன் காத்தல் வேண் டும். இந்தவகையில் நாணைத் துறந்து கற்பினையும், சிறந்த ஒழுக்கத்தையும் காத்தவர் நம் செட்டி மகளார் ஆவர்.

வரலாறு.

வைப்பூர் என்ற ஊரில் தாமன் என்பான் ஒரு வணிகன். அவனுக்கு ஏழு பெண் மக்கள் இருந்தனர். அவனுக்கு முறையுடைய மருகன் ஒருவன் இருந்தான். அம்மருகனுக்கு முதல் பெண்ணை மணந்து கொடுப்ப தாக வாக்களித்திருந்தான். தாமன் பணப்பித்துக் கொண்டவன்; ஆதலினால் நிறைந்த பணம் உள்ள ஒருவனுக்கு அவனை மணம் செய்து கொடுத்தான். மரு மகனிடம் அடுத்த பெண்ணைக் கொடுப்பதாக வாக்களித் தான். பணப்பித்தன் வாக்குமீறி இரண்டாம் பெண்ணை யும் ஒரு பணக்காரனுக்கே மணம் முடித்து வைத்தான். இவ்வாறே வாக்களித்து மீறி ஆறு பெண்களையும் மணம் செய்து கொடுத்தான். இறுதிப் பெண் தந்தையின் செயலை வெறுத்தாள். ஒவ்வொருத்தியையும் மாற்றார்க்கே மணம் செய்து கொடுத்து வருந்தாறும் அவளுக்கு இலவு காத்த கிளிபோன்றவனை அத்தா னிடம் இரக்கம் மிகுந்து வந்தது. இரக்கமான அருள் உணர்வு அத்தானிடம் ஆழ்ந்த பற்றுதலை உண்டாக் கியது. அன்பு அருளாக மாறும். "அருள் என்னும் அன்பீன் குழவி" என்றூர் வள்ளுவரும். இவளுடைய

அருள் அன்பாக மாறியது. அன்புக் காதல் கொண்டாள் அத்தானிடம். அத்தான் இவளிடம் காதல் உடைய வனே என்றும் ஆறு பெண்களையும் இழந்த அவன் இவளை மணக்கவும் காத்திருந்தான் ஆதலின் உடை யவன் என்று தான் சொல்ல வேண்டும். காதல் வேரூன்று மிடத்துக் கற்பும் வேரூன்றி நிலைக் கத்தானே செய்யும்? அதனால் அத்தானையன்றிப் பிறரை நினையாப் பெருங்குணம் படைத்தாள். தன் காதலையும் அவனிடம் வெளிப்படுத்தினாள். அவனும் சமயம் பார்த்திருந்தான். இந் நிலையில் அவளையும் வேறு ஒரு பணக்காரனுக்கு மணம் செய்து கொடுக்கும் எண்ணம் தாமனுக்கு உண்டாயிற்றுப் போலும்! அதனையுணர்ந்த மகள் மிகவும் மனம் வருந்தினாள். அது வரையிலும் பழி பாவங்களுக்கு நாணிய அவள் நிலை தருமசங்கடமான நிலைக்கு வந்து விட்டது. எப்படியும் அத்தானை அழைத்துக்கொண்டு வேற்றூர் போய்த் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது; உலகம் பழி தூற்றுமே என்ற நாணம் அதனைத் தடுத்தது. 'அவ்வாறு செய்யா விட்டால் தந்தை மற்றொருனுக்கு மணம்செய்து கொடுக்க நேரும். அதனால் தன் கற்பு கெடும். என்ற எண்ணம் உடனே குறிக்கிட்டது. இவ்விரண்டு எண்ணங்களையும் சீர் தூக்கிப் பார்த்து நாணத்தை விட்டு, 'அத்தா னுடன் உடன் போக்கைக் கொள்வதேமேல் என்ற முடிபிற்கு வந்தாள். இவளது முடிபுசிறந்த முடிபு. ஆன்றோர் போற்றும் முடிபு. இத்தகைய முடிபினைக் கொண்டு கற்பினைக் காத்த இவ்வேழாம் பெண்மணி பெண்களுக்கு—காதல் காரணமாகத் தரும சங்கடம்

கொள்பவர்களுக்கு ஒரு வழி காட்டியாக இருப்பதால் நாமும் நன்மதிக்கும் முறையில் 'பன்மை' கொடுத்து அம்மையார்' என்றே கூறுவோம்; அம்மையாரின் முடிபு,

அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பின் ஒங்கு மணல் ஒரு சிறை
தீம்புனல் நெரிதர வீழ்ந்துக் காஅங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைந்நீல் லாவே. (குறு. 149)

என்ற குறுந்தொகைப் பாடல் முடிவு போன்றதாகும். "நாணமானது நம்மோடு குழவிப் பருவத்திலிருந்தே நெடுங்காலமாக உடன் இருந்து வருந்தியது. இனி வெண்மையான பூவினையுடைய கரும்பின் உயர்ந்த மணலையுடைய சிறிய கரை இனியதண்ணீர் அடிக்கடி நெருங்கி அலைத்தலால் கரைந்து அழிந்ததுபோல, காமமானது மேலும், மேலும், நெரிதர அதைத் தடுக்கு மளவு தடுத்து முடியாது தானும் போய்விடும் அந்த நாணம் மிகவும் இரங்கத்தக்கது" என்பது இதன் பொருள். பெண்ணின் பெற்றோர் அவள் விருப்பம் அறியாது அவள் விரும்பிய ஒருவனை விடுத்து மாற்றுனுக்கு மணந்துகொடுக்க எண்ணிய போது, அவள் தோழி, 'நீ உன் காதலனுடன் யாரும் அறியாதபடிப் போய் விடுவதே நல்லது' என்றுசொல்ல, அவள் அவ்வாறு கூறித் தான்போய் விடுவதாக உடன் பட்டாள். அவள் செயலோடு ஒத்ததே நம் அம்மையாரின் செயலும்.

உடன் போக எண்ணிய அம்மையார் தம் கற்பினைக் காத்துக் கொண்டு அத்தானுடன் வெளிக்

கிளம்பிவிட்டார். நாணம் கற்பு ஆகிய இரண்டிற்கும் போட்டி ஏற்பட்டவிடத்துக் கற்பே சிறந்தது என்ற மையின் நாணம் பின்னிட்டது. அதனால் நாணைத் துறந்தனர் அம்மையார். உடன்போக்கு மேற்கொண்ட இருவரும் பல நெடுவழிகளையும் கடந்து திருமருகல் என்ற ஊருக்கு வரும்போது இரவுவந்தது. அதனால் அவ்வூர் மடத்தில் தங்கினர். அவ்விரவில் ஒருபாம்பு அம்மையாரின் அத்தானைத் தீண்டியது. அவன் விடம் தலைக்கேறி உயிர்விட்டான். அம்மையார் அவன் அருகிருந்த வாறே அரற்றினர்.

இளங் கன்னியர் தாம் காதலித்த காதலர்களுடன் திருமணம் ஆதற்கு முன்னதாகவே கூடிக் களியாட்டயர்தலை உலகில் காண்கின்றோம். அவர்கள் களியாட்டம் பெற்றோர் அறியாதது. அதனால் பின்னர் தீர்க்க முடியாத தொல்லைகள் அனுபவிப்பதையும் காண்கிறோம். ஆடவர்களும் தங்கள் காம வெறியினால் அவர்களைக் கெடுத்துப் பாழ்படுத்தி விடுகின்றனர். எவ்வளவுதான் நிறைந்த காதலுடையவர்களாயினும் திருமணம் ஆனபின்னரே தம்முள் கூட்டுறவு கொள்ளுதல் சாலச்சிறந்த தாகும். நம் அம்மையார் அத்தானுடன் வெளிப் புறப்பட்டதிலிருந்து அவன் இறந்து கிடந்தவரையிலும் அவன் உடலினைக் கையினாலும் தொட்டறியார். இறந்து கிடந்தவன் அருகில் அவனைத் தொடாமலே வீழ்ந்து அரற்றினதைக் கூற வந்த சேக்கிழார் "வாளரவு தீண்டவும் தான்தீண்ட கில்லாள்" என்றார். 'தொடகில்லாள்' என்னுது 'தீண்ட கில்லாள்' என்றதை நாம் கூர்ந்து கவனித்தல் வேண்டும். தீண்டுதல் என்பதற்குத் 'தொடுதல்'

என்ற பொருள் உண்டேனும் வேறுபாடும் உண்டு. தீண்டுதல் தாழ்ந்தது. ஒருவன் தொடக்கூடாத தொன்றைத் தொட்டாலும் தீண்டினன் தீண்டப் பட்டான் என்று கூறுதல் வழக்கு. தொட்டால் கெடுதல் வீளையுமாயின் அத்தொடுதல் தீண்டுதல் எனப் படும். வாள் அரவு தீண்டியது; செட்டி இறந்தான். அவ்வாறே நம் அம்மையார் தம் காதலனைத் தொட்டின் தீண்டியவ ராவார். தொட்டால் ஒழுக்கத்திற் சிறிது மாசுபடும். மணமான பின்னரே ஒருவரை ஒருவர் தொடுதல் வேண்டும் என்பது பெரியோர் கொள்கை அவ்வொழுக்கத்தை மேற்கொண் டொழுகும் அம்மை யார் தொடுவாரோ? அதனால் அவர் தொடாது— தீண்டாது அருகிருந்து அரற்றினர்.

இத் தீண்டாமையை நம் நாட்டில் மட்டுமன்று— பிற நாடுகளிலும் உயர்ந்தோர் என்றே கருதினர் எனத் தெரிகின்றது. செகப்பிரியர் எழுதிய "நடு வேனில் இரவுக்கனவு" என்ற நாடகத்தில் ஓரிடத்தில் இக் கருத் தினைக் காணலாம்.

"ஏதென்சு நகரில் எர்மியா என்ற அழகியும் லைசாண்டர் என்ற அழகனும் தம்முள் காதலராயினர். எர்மியாவின் தந்தை வேறொருத்தனை மணக்க வற்புறுத் தினன். அந்நாட்டின் சட்டம்" "தந்தை வழி மக்கள் நடக்கவேண்டும். இன்றேல் அவர்களை எவ்வகையிலும் தண்டிக்கத் தந்தைக்கு உரிமையுண்டு" என்பதாகும். அதனால் எர்மியாவும் லைசாண்டரும் யாரும் அறியாத படி ஏதென்சு நகரைக் கடந்து லைசாண்டரின் உறவினர் வீடு செல்லப் புறப்பட்டனர். ஒரு காட்டினை யடைந் தனர். இரவு வந்தது. காட்டிலேயே யிருவரும் உறங்க

நேர்ந்தது. அப்போது எர்மியா லேசாண்டரை நோக்கி, "நான் இப் புல்லணையைத் தலையணையாகக் கொண்டு உறங்குவன்; நீர் நமக்கோர் தனிப்படுக்கையினை மேற் கொள்வீர்" என்றனள். லேசாண்டர் தன் காதலைப் புலப் படுத்தி அவள் அருகில் நெருங்கினன். முடிவில் அவள், "அன்பரே! பெண்மை, கற்புடைமை கன்னிமை ஆகிய வற்றைக் கருதிக் கூறுவதைக் கேட்பீர்! மன்சடங்கின் முன்னர் மணமாகா மக்கள் நடக்கை முறை எனும் உலகியல் வழி நின்று அன்போடு யான் வற்புறுத்துவதை உளங் கொண்டு விலகிப் படுப்பீராக" என்றுள். பின் லேசாண்டர் எர்மியாவின் கருத்தை ஏற்றவனாகி நடந்தான்.*

எர்மியா எண்ணமும் நம் அம்மையார் எண்ணமும் ஒன்றாக அன்றே இருக்கின்றன! இவ்வாறு சிறந்த முறையில் ஒழுக்கத்தினை மனதில் கொண்டு தம் காதலனைத் தொடாமலே அரற்ற அண்மையிலிருந்த மருத்துவர் வந்து மருத்துவம் செய்தும் பயன்படவில்லை. அம்மையார் மருகல் சிவபிரானை நோக்கிப் புலம்பினர்.

இக்காலத்தில் ஞான சம்பந்தர் தலயாத்திரை செய்து கொண்டு வந்தவர் அன்று மருகலுக்கு வந்திருந்தார். புலர் காலையில் மருகல் இறைவனை வணங்க வந்த அவரது செவியில் அம்மையார் ஓலம் அட்டது. சம்பந்தர் அம்மையாரிடம் வந்து அனைத்தையும் அறிந்து சிவபிரானை வணங்கிப் பாடி இறந்தவனை

* "இக்கருத்தினைச் செந்தமிழ்ச் செல்வி நிலம்பு 20— பரல் 3-ல் அமெரிக்க நாட்டு ஆங்கிலக் கவிஞர்" என்ற தலைப்புக்கட்டுரையில் வித்துவான், மு. இராசாக்கண்ணு முதலியார். B.o.l. (Hons.) M.E.S. அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

யுயிர்ப்பித்தார் அங்கேயே அவர்களை மணமக்களாக்கி யும் வாழ்த்திச்சென்றார்.

இவ்வளவே பெரிய புராண வரலாறு திருவிளை யாடற் புராணத்தில் இவனது வரலாறு சிறிது மாறு பாட்டுடன் காணப்படுகின்றது. அதனை ஈண்டு விடுக்கின் றோம். நம் அம்மையாரிடமிருந்து நம் மகளிர் அறிய வேண்டுவன நாணினும் கற்புச் சிறந்தது என்பதும் யாண்டும் மணமாகு முன் காதலனைத் தீண்டுதல் நன்றன்று என்பதும் ஆம்.

———

(5)

வெண்காட்டு நங்கையார்

பெண்ணறிவு:

நுண்ணுணர் வுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பே தமைத்தே.

எனக் கூறினர் முன்னோர் சிலர். "நுண்ணிய உணர் வுடையோர் இயற்றிய சிறந்த அறிவு விளக்க நூல்க ளோடு எவ்வளவுதான் படித்துப் பழக்கத்திலும் கொண்டுவரினும் பெண்ணின் அறிவு என்பது பெரிய பேதைமையோடு கூடியதேயாகும்" என்பது இதன் பொருள். பெண்கள் எவ்வளவுதான் படித்தாலும் அதனால் சிறந்த அறிவுடையவராய் இருந்தாலும் அவர்களின் அறிவு ஆண்களின் அறிவினைப்போ லின்றிப் பேதைமை (அறியாமை) யோடு கூடிய தாகவே இருக்கும். சங்கர நமச்சிவாயர், சிவஞான

முனிவர் போன்ற பெரும்புலவர்களின் கொள்கையும் இதுதான்.

> "ஒருவர் அறிவு தந்தார் என்றால், 'நுண்ணுணர்வுடையோர், நூலொடு பழகினும் பெண்ணறிவென்பது பெரும் பேதமைத்தே, என்ப ஆதலின் அறிவு பெண்பாலால் பெறுதல் கூடாமையின் அதனை யொழித்த 'ஒருவர்' என்னும் படர்க்கைப் பெயரும் அதன் பயனிலையாகிய 'தந்தார்' என்னும் படர்க்கை முற்றும் உயர்திணையினையும் ஆண்பாலினையும் குறிப்பான் விளக்கும். (சேனா. சூத். 265).

இவ்வாறு கூறினர் சிவஞான முனிவர் தமது நன்னூல் விருத்தி யுரையில். பரிமேலழகர்,

> பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற

என்ற குறளில் 'அறிவறிந்த என்றதனால்' 'மக்கள்' என்னும் பெயர் பெண்ணையொழித்து நின்றது எனவும்,

> என்ற பொருளைப் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோனெனக் கேட்ட தாய்

என்ற குறளில் "பெண்ணியல்பால் தானுக அறியாமையில் கேட்டதாய் எனக் கூறினர்" எனவும் விசேடவுரை கூறியிருத்தலால் அவரும் பெண்பாலார் அறிவில் குறைபாடு கண்டவரே யானர் என்னலாம்.

"பெண்களை மனையகத்திலேயே மடக்கி வைத்து உலக அறிவினைப் பெருதவாறு செய்து, கணவன் ஒருவனைக் காப்பதே யன்றி வேறு நோக்கம் இருத்தல் கூடாது என்று வைத்திருந்தார்கள் அக்காலத்தில். ஆதலினால் பெண்களின் அறிவு வளத்தினை ஆண்கள் அறிதற்கு இயலாது போயிற்று. இக்காலத்தில் அவ்வாறின்றிப் பெண்களும் கல்வி யறிவு பெறவேண்டும்

என்ற பரந்த நோக்கத்தோடு அவர்களையும் சமமாகக் கல்விகற்கச் செய்து வருதலால் அவர்களும் அறிவிற் சிறந்தவரே என அறிகின்றனர். அதனால் இக்காலப் புலவர்கள் அவ்வாறு கூறுர்கள்," என்று கூறுவோரும் உளர்.

பெண் ஆண் உடல் உறுப்புக்களின் தன்மைகளையும் மனப் பண்புகளையும் அறிவின் விளக்க வகைகளையும் ஊன்றியறிந்தவர்களில் சிலர் இக்கொள்கையினை உடன் படுதலும் செய்வர்.

இக்கொள்கையினை இக்காலத்தில் விளங்கும் பேரறிவுடைப் பெண் மக்களையும் அக்காலத்தில் விளங்கிய ஔவை போன்ற புலமைமிக்க மெல்லியலார்களையும் எடுத்துக்காட்டி அறிவே மறுப் போரும் உளர். மறுத்தவர்களுள் சார்ந்தவர். ஆவாரோ என ஐயுறுதற்குரிய நிலையில் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஒரு பாடலைப் பாடியுள்ளனர்.

கற்ரு ரறிகுவர் மக்கள்தம் பேறெனக் கட்டுரைத்த
சொற்ருன் ஒருபெண் ணெழித்த தென்பரோடு முலகினில்
நற்ருன் மகப்பெறு கென்ருசீ சொல்பவர் நாணவுனைப்
பெற்ருன் மலையரையன் குன்றை வாழும் பெரியம்மையே
(பெரிய நாயகியம்மைக் கலித்துறை)

இதனகத்து "மக்கள் தம் பேறெனக் கட்டுரைத்த சொல்" என்றது, வள்ளுவரது "பெருமை வற்றுள்.....பிற" என்றதில் உள்ள 'மக்கட்பேறு' என்றதையாகும். "ஒரு பெண்ணெழித்த தென்பார்" என்றது, "அறிவறிந்த என்றதனால் மக்கள் என்னும் பெயர் பெண்ணெழித்து நின்றது" என்ற பரிமேலழகரையாகும்.

உலகில் மணமக்கள், பெருமக்கள் கால்களில் விழுந்து வணங்கும் போது அவர்கள் 'நல்ல ஆண்பிள்ளை பெற்று வாழ்க' என வாழ்த்துவர். அவர்கள் பெண் மக்களையும் உடன் கூறுது ஆணமட்டும் கூறுவது ஆனை சிறந்தது என்ற கருத்தினாலேயாம்.

அறிஞர் எனப்பட்ட பெருமக்களும் உலக மக்களும் பெண்ணைவிட ஆணுக்கு மதிப்புத் தருகின்றனர். அவ்விருசாராரும் நாணும்படியாக அறிவோடும் ஆற்றலோடும் காஞ்சியில் ஓரளவு கெல் கொண்டு 32அறங்களையும் வழுவாது காத்தும் பாண்டிய நாட்டினைக் கன்னி நாடாக்கி ஆண்டும் அருள் சுரந்த நின்ன மலையரையன் மகளாகப் பெற்றான். என்பது இப்பாடலின் கருத்து.

பெண்ணறிவினைப்பற்றி முடிந்த முடிவு வரும வளவும் நாம் ஒன்றும் கூறுதற்கில்லை. நம் வெண்காட்டு நங்கையாரின் அறிவு பெண்களுக்கு இன்றியமையாதது ஆதலின் அவர் தம் அறிவின் மாண்புற்ற விளக்கத் தினைக் காண்போம்.

வரலாறு

வெண்காட்டு நங்கையார் சிறந்த அறிவினர்; கணவர் சிறுதொண்டர்பால் பிக்க அன்பினர். அவர் வாழ்வே தம் வாழ்வு என எண்ணியவர். மனையற மாண்புடையவர். அன்னதையை, அடியாள் பணிவு பொன்னின் அழகு, புவிப்பொறை, வேசிதுயில், மந்திரிமதி ஆகியவற்றில் தலைசிறந்தவர். சுருங்கக் கூறுமிடத்தில் வள்ளுவரது வாழ்க்கைத் துணை நலத்திற்கு இலக்கியமானவர் என்னலாம். இவரது மாண்புகளுள் சிறந்ததாகச் சிறுத்தொண்டர் புராணம் பாடிய

சேக்கிழார் நமக்கறிவிப்பது இவரது சமயத்திற்கேற்ற நல்ல அறிவுப்பண்பேயாம். வரலாறுகொண்டு இவரது அறிவின் நுட்பத்தினைக் காண்போம்.

சோழ நாட்டில் திருச்செங்காட்டங்குடி என்னும் ஊரில் வந்த சிறுத்தொண்டர் சிவனடியார்களுக்கு விருந்தளிக்கும் நெறியினைக் கடைப்பிடித்தவரானார். அடியவர்களை உண்பித்துப் பின் உண்ணும் பெற்றியினர். சிறுத்தொண்டர்க்கும் அவர் மனையாராம் வெண்காட்டு நங்கையார்க்கும் அடியார்க்கு அமுது அருத்தும் பணியளிக்கும் பெற்றியுடைய மகவு ஒன்றுண்டு. அம்மகவு சீராளன் என்ற பெயருடையது. சீராளன் சீராக வளர்ந்து நற்குண நற்செய்கைகளை யுடையவனானன், தக்ககாலத்தில் அவனைப் பள்ளியினிற் சேர்த்தனர்.

ஒரு நாள் தொண்டரின் அடியார்க் கமுது படைத்துப் பின்னுண்ணும் நெறியினை உலகினர்க்கு வெளிப்படுத்த எண்ணிய சிவபிரான், தாம் பின்னர்க் கேட்க இருக்கும் இரக்கமற்றசெயலுக் கேற்றவாறு வட நாட்டுப் பயிராகி வேடங்கொண்டு தொண்டர் மனைவந்து, "தொண்டனுர்க்கு எந்நாளும் சோறளிக்கும் சிறுத்தொண்டர் மனைக்கண் உள்ளாரோ" என வினவினர். அவர் வந்த சமயம், தொண்டர் அன்று அதுவரையிலும் அடியாரைக் காணுது, தேடிவர வெளியில் சென்ற சமயமாகும். பயிராகியும் அச்சமயத்தையே எதிர்பார்த்து வந்தவர் அன்றோ? வந்தவர் வினவியபோது உள்ளிருந்த சந்தன நங்கை என்னும் தாதி வெளிவந்து, தொண்டர் அடியாரைத் தேடி வெளியில் சென்றிருப்பதை உணர்த்தி மனைக்குள் எழுந்தருள

வேண்டினர். பயிராகி, "மாதரார் தாமிருந்த இடவகையில் தனிப்புகுதோம்" என்றனர். இதனை உள்ளிருந்து கேட்ட நம் வெண்காட்டு நங்கையார், பயிராகி உடனே வெளிச்சென்று விடுவார் போலும் என எண்ணி வெளிவாயில் வரை வந்து,

> "அம்பலவர் அடியாரை அமுதுசெய்வீப் பாரிற்கைக்கு
> எம்பெருமான் யாவரையும் கண்டிலர்தே டிப்போனர்
> வம்பெனநீர் எழுந்தருளி வருந்தீருவே டங்கண்டால்
> தம்பெரிய பேறென்றே மிகமகிழ்வார் இனித்தாழார்
> இப்பொழுதே வந்தனைவார் எழுந்தருளியிரும்"

என்றார்.

இங்கு அம்மையாரின் அறிவுத்திறனைக் காண வேண்டும். பயிராகியார் மனைக்கண் வந்தபோது அவரிடம் சந்தனநங்கை உரையாடினாள். பயிராகி, "பெண்கள் தனித்திருக்கும் வீட்டில் ஆடவனாகிய—பயிராகியாகிய யாம் தனித்துப் புகமாட்டோம் என்றபோது, வாளாகேட்டு அது வரையிலும் உள்ளிருந்த அம்மையார் உடனே வெளிப் போந்ததற்குக் காரணம் யாது? அதுதான் சேச்கிழாரால் மனைக்கடன் என்று கூறப்பட்டது. மனைக்கண் இருந்து ஆற்றவேண்டிய மனைவியின் கடமை என்ன? தம் கணவர் சிறுத்தொண்டர் அடியரைத்தேடி வெளிச்சென்றுள்ளார். வழக்கப்படியின்றி இன்று ஒருவரையும் காணமையால் தேடிச் சென்றார். அவர் சென்றசமயம் வந்தவர் இப் பயிராகி. இவரும் இங்கிராது போய்விடுவாராயின் சென்ற தொண்டருக்கும் அடியார் அகப்பட்டிலராயின் வருத்தத்துடன் வரநேரும். வந்து வந்த பயிராகியும் சென்றுவிட்டதைக்கேட்டால் மிகவும் துன்

புறுவார். அடியாரை உண்பித்துப் பின் உண்ணும் நெறியுடையார் ஆதலின் தாமும் உண்ணுது வாடுவர், அவர் வாட்டம் காணுதல் மனைவாழ்க்கைக்குக் குற்றம் உண்டானது போலாம். வந்த பயிராகியைப் போக விட்டது தன் குற்றமாகிவிடும். ஆதலின் உள்ளிருந்த வர் வாயில்கடைவந்து பயிராகியிடம் அவ்வாறு கூறினர்.

மனைவியின் உள்ளமும் கணவன் உள்ளமும் ஒன்றாகவே யிருக்க வேண்டும். ஒருவர் உள்ளத்தை மற்றவர் உணர்ந்திருத்தல் வேண்டும். உலகில் பல குடும்பங்களில் அவ்வாறு உணராதிருக்கும் காரணத் தாலேயே மனைவிபால் கணவனுக்கும் கணவன் பால் மனைவிக்கும் நம்பிக்கையின்மையுண்டாகிச் சச்சரவுகள் ஏற்படுகின்றன. அம்மையார் தொண்டரின் உள்ளத்தை நன்கு அறிந்தவர். தொண்டரும் அம்மையாரின் உள்ளத் தினை அறிந்தவர். தொண்டர் உள்ளங்கோணுமல் தொண் டாற்றி வரும் அம்மையாருக்குத் தொண்டரின் உள்ளம் தெரியாதுபோமோ? தொண்டருக்குச் சிறந்த நம்பிக்கை உண்டு அம்மையாரிடம். அம்மையாரின் நற்குண நற் செய்கைகளால் பலனடைந்து வருபவர் தொண்டர். அதனுல் அம்மையார், "மாதரார் தாமிருந்த இடவகை யில் தனிப்புகுதோம்" என்ற பயிராகிக்கு, "எழுந்தருளி வரும் திருவேடங் கண்டால் தம் பெரிய பேறென்றே மிக மகிழ்வர்" என்றார். எம் பெருமான் திருவேடத்தினர் நல்லவர்கள். அவர்களிடத்திலும் தொண்டர் குற்றம் காணமாட்டார்.

பெரிய பேறென மகிழ்தற்குச் சிறந்த காரணம் ஒன்றுண்டு; இன்று இது வரையிலும் அடியாரைக்

காணுமையேயது என்பதற்காக, "அம்பலவர் அடியாரை அமுது செய்விப்பார் இன்றைக்கு எம் பெருமான் யாவரையும் கண்டிலர் தேடிப் போனர்" என்று வெளிச் சென்ற காரணம் கூறி அதனல் மகிழ்தற்கும் காரணம் கூறினர்.

சென்றவர் வர நேரம் ஆகுமோ எனத் தாங்கள் எண்ண வேண்டுவதில்லை; இப்போதே வந்து விடுவார்; அவர் சென்றும் நெடு நேரம் ஆயிற்று; வீடு திரும்பும் நேரம் இது என்பதற்காக, "இனித்தாமார் • இப் இப்பொழுதே வந்தணைவர்" என்றார்.

அம்மையார்க்கு வந்த பயிராகி பசித்திருப்பரோ என்ற கவலை ஒரு பால் இருந்திருக்கலாம். ஆனல், "தம் கணவர் பயிராகியை மீண்டும் தேடிச் செல்ல வேண்டுமே; அதனல் அவர்க்கு வீண் நடைதானே" என்ற கவலையும் மிகுதியும் உண்டு. அதனைப்பின் ஓரிடத்துக் காண்போம். இனிவரலாற்றினைத் தொடர்வோம்.

இவ்வாறு வேண்டிய அம்மையாரிடம், பயிராகி, தொண்டர் இல்லாத இவ்விடத்து இரோம். நமக்கு வடதேசம்; நாம் பக்கத்துள்ள கணபதிச்சுரக் கோயிலில் திருவாத்தி மரத்தின் கீழ் இருப்போம்: அவர் வந்தால் நாம் இருக்கும் தன்மையை உரைப்பீர் என்று சொல்லிச் சென்று விட்டார்.

இப்பால் அடியாரைத் தேடிச் சென்ற தொண்டர் அடியார் ஒருவரையும் காணது வீடு வந்து நம் அம்மையாரிடம் வருத்தத்துடன் தெரிவிக்க, அம்மையார் பயிராகி ஒருவர் இங்குவந்து சென்றார் என்றார். உடனே

தொண்டர், "அடியேன் உய்ந்தேன் எங்குற்றூர் உரையாய்" என்றூர் பரபரப்புடன். பரபரப்புடன் கேட்ட தொண்டர்க்கு அம்மையார் அமைதியாகப் பதில் இறுத்தார். அப்பதிலே அம்மையாரின் அறிவின் மாண்பினை நன்கு புலப்படுகின்றது அவர் பதில் இது :—

"வடிசேர் சூல கபாலத்தர் வடதேசத்தோம் என்றூர் வன்
துடிசேர் கரத்துப் பயிரவர்யாம் சொல்ல இங்கும் இராதேபோய்க்
கடிசேர் திருவாத் தியினிழற்கீழ் இருந்தார் கணப தீச்சரத்து"

சொற் செல்வம்.

எங்குற்றூர்? என்ற கேள்விக்கு நேர் விடை கணபதிச்சரத்து என்பதேயாகும். இவ்வாறு அம்மையார் சொல்வாரோ? சொல்ல மாட்டார், ஏன்? இவ்வாறு சொல்லிவிட்டால் தொண்டர் உடனே கணபதீக்சுரம் புறப்பட்டுவிடுவார். ஆங்குச் சென்று எங்கு தேடுவது? வீண் அலைச்சலைத் தொண்டருக்கு உண்டாக்காமல் ஆங்கு சென்று குறித்த இடத்தில் அடியாரைக் காண வேண்டும் என்பதற்காகக் கணபதீச்சரத்து என்று உடனே சொல்லிவிடாமல் பயிராகி குறித்துச் சென்ற ஆத்தியைக் குறித்துப் பின்கோயிலைக் குறித்தார். திருவாத்தியின் நிழற் கீழ் இருந்தார் கணபதீச்சரத்து என்றூர் அம்மையார். இவ்விரண்டு வார்த்தைகளில் நிறுத்திக் கொண்டால் தொண்டர்க்கு வரும் தொல்லை நீங்கிவிடாது. கணபதீச்சரத்து ஆத்தி நிழற் கீழேயே சென்று கண்டாலும், "காணப்படும் அடியார் நம் நாட்டடியார் போன்றின்றி வடநாட்டவராக இருக்கின்றூரே, நம் மனவியால் குறிக்கப்பட்டவர் இவர் தாமோ" என்ற ஐயம் மேலிடும். அதனால் தொண்டர் அங்குத்தயங்க நேரும். இத்தயக்கமும் அவர்க்கு இருத்த

லாகாது என்பதற்காகவே அம்மையார், "வட்தேசத தோம் என்றூர்; சூலகபாலத்தர்; துடிசேர் கரத்தர்; பயிரவர்" என அவரின் அடையாளங்களையும் முதற் கண்கூறினர். இவ்வளவும் கூறியபோது தொண்டர், "ஏன் இந்து இருக்கச் சொல்லலாகாது" எனச் சினப் பாரோ என்ற எண்ணம் மனதில் எழவே "யாம் செல்ல இங்கு இராதே போனர் என்றூர். தொண்டர் எங்குற்றூர் என்க் கேட்ட கேள்விக்கு உடனே விடை யிறுக்காமல் அடையாளம், தேசம், பயிராகி சொன்னது, இருக்கும் இடம் ஆகியவற்றை மூறைப் படுத்திக் கூறியது அம்மையாரின் அறிவின் நுட்பத்தினை யன்றே புலப்படுத்துகின்றது? "நாமிருந்த பரிசுரைப் பீர்" என்று கூறிச் சென்றூர் பயிராகி என்று சேக் கிழார் கூறினர். 'இருந்தபரிசு' என்றதற்கு, 'கணப தீச்சரத்து இருந்த தன்மை' என்று பொருள் கிடப் பினும் அம்மையார் தொண்டரிடம் கூறியதற்கேற்ப, 'நாம் பயிராகிக் கோலத்துடன் இருந்தபரிசு' எனப் பொருள் கோடலும் சிறக்குமன்றே? அவ்வாறுயின் அச்சொல்லின் உட்பொருளை நன்குணர்ந்து முறையாகக் கணவனரிடம் கூறிய நுண்மாண் நுழைபுலத்தினை வியக்காமல் இருக்க முடியுமோ?

தொண்டர் கேள்வி 'எங்குற்றூர்' என்பதொன்றே. ஆனால் அம்மையார், எவ்விடத்தார்? அடையாளம் என்ன? எத்தேசத்தார்? வந்தவரை ஏன் இங்கிருக் கச் சொல்லவில்லை? என்ற பலகேள்விக்கு உரிய பதிலை ஒரே தடவையில் சொல்லி விட்டார். இவ்வாறு சொல்வதை—அதாவது தம்மால் மதிக்கப்படும் பெரிய வரிடத்துப் பேசுங்கால் அவர்கேட்கும் ஒரு கேள்வி

யிலேயே தொடர்பான பல கேள்விகட்குரிய விடைகள் இறுத்தலைச் சொற்செல்வம் என்றூர் கம்பர்.

சீதையைத் தேடிச்சென்ற இராமனும் இலக்குவனும் கிட்கிந்த மலையை அடைந்த காலத்து அம்மலையில் இருந்த சுக்கிரீவன் ஏவலால் போந்த அநுமனை இராமன் நீயார்? என்றான். அதற்கு அனுமன்,

"..... காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றின் வந்தேன் நாமமும் அநுமன்"

"இம்மலை யிருந்து வாழும் எரிகதிர்ப் பருதிச் செல்வச்
செம்மலுக் கேவல் செய்வேன் தேவரும் உரவு நோக்கி
வீம்மலுற் றனையான் ஏவ வினவிய வந்தேன்"

என்று கூறினான். உடனே இராமன் திகைப் பெய்தியவனைய் அவன் பதில் இறுக்கும், திறத்தினை எண்ணிப் பார்த்தான். இராமன் கேட்டது 'நீயார்' என்ற ஒரு கேள்வி. அநுமன் விடையிறுத்தது அவ்வொன்றே யன்றித் தன்பெயர், தொழில், வந்த காரணம் ஆகிய வற்றிற்கும் விடையிறுத்து விட்டான். அதனை யுணர்ந்து வியந்த இராமன்,

இல்லாத உலகத் தெங்கும் இங்கிவன் இசைகள் கூறக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சிச்
சொல்லாலே தோன்றிற் றன்றே யார் கொல்இச் சொல்லின் செல்வன்
வில்லார்தோள் இனைய வீர விரிஞ்சனே விடைவல் லானே.

என இலக்குவனை நோக்கிக் கூறினான். இராமன் அநுமனைச் சொல்லின் செல்வன் என்றது நோக்கத் தக்கது. இராமன் அவனை வியக்கும் நிலையில் நமக்குக் கம்பர் சொற் செல்வத்தின் இலக்கணத்தை நன்கு விளக்கி யிருத்தல் காணத் தக்கது. இத்தகைய சொற் செல்வம் நம் அம்மையாரிடத்தும் காணலாம்.

இவ்வாறு சொல்லின் செல்வியாம் அம்மையார் தொண்டரிடம் கூறியவுடன் தொண்டர் உடனே விரைந்து சென்று கணபதீச்சரத்து ஆத்தியின் நிழற் கீழ் பயிராகி இருக்கக் கண்டு வணங்கி அவர் விருப்பப் படியே உணவருத்துவதாக வாக்குறுதி கொடுத்து மீண்டு அம்மையாரிடம், 'சிவனடியாராகிய மாதவர் உள்ள மகிழ அமுத செய இசைந்தார்; அவர் உண்ணும் உணவு "நல்ல குடிக்கு ஒரு மகனுய் ஐந்து வயதுள்ளவனுய் உறுப்பில் யாதொரு குறைபாடும் இல்லாதவனுய் உள்ள சிறுவனேத் தாய் பிடிக்கத் தந்தையார் அரியும் போது இருவரும் தம்முள் உவந்து அரிந்து, சமைத்து வைத்த கறியுணவே தாமுண்பதாம்" என்றூர், என்று கூற, அம்மையார் அது கேட்டு, அடியார்க்கு உரிய வகையால் அமுதமைக்கலாம்; அத்தகைய பிள்ளையைப் பெறுவது எங்கே? என்று தொண்டரை வினவ, தொண்டரும், 'பொருள் நிரம்பக் கொடுத்தால் பிள்ளையைக் கொடுப்பாரும் உலகில் உளர்; ஆனல் தந்தை தாயார் தம்முள் மனமுவந்து அரிய மாட்டாரே; ஆதலினுல்,

"ஏனையிங் குய்ய நீபயந்தான் தன்னை யழைப்போம் யாம்" என்றூர்.

"இதைக் கேட்டதும் அம்மையாருக்குத் தரும சங்கடமான நிலை ஏற்பட்டு விட்டது. தொண்டர், நான் பிழைக்க வேண்டி நீ பெற்ற பிள்ளையை நாமிருவரும் அழைப்போம்" என்று பிரித்துப் பிரித்துக் கூறினர். அம்மையாருக்குப் பிள்ளையும் கணவனும் எதிர் நின்றனர். தாம் பெற்ற பிள்ளையை அரிய மனம் ஒரு

படவில்லை. பெற்ற மனம் அல்லவா? அரிந்து சமைக்க வில்லை யென்றால் அடியார்—பயிராகி அமுது அருந்தார். அடியார் அருந்த வில்லை யென்றால் கணவனும் அருந்த மாட்டார். உண்ணதிருந்து கணவர் உயிர் விட நேரும், எனவே கணவனுர் பிழைக்க வேண்டுமானுல் மகனை—சிராளனை அரிந்தேயாக வேண்டும். மகன் வேண்டுமானுல் கணவனுரை யிழந்தாக வேண்டும். என் செய்வார்! 'பெண்ணறிவு பேதமைத்து' என்கின்றூர்கள். அம்மையாரின் அறிவு நினைத்தது; கணவன், மகன் இருவரில் சிறந்தவர் யாவர்? தமக்கு இன்றியமை யாதவர் யாவர்? என அறிவு ஆராய்ந்து முடிவு கணவனே என்று கண்டது. உடனே தாழ்த்தலின்றி மகிழ்ச்சியாகவே அதற்குடன்பட்டுப், "பள்ளியில் இருக்கும் சிறுவனைத் தாங்கள் சென்று அழைத்து வாருங்கள்" என்றூர். அவ்வாறே தொண்டரும் அழைத்து வந்தார். அம்மையாரும் சிறுவனை நன்றுகக் குளிப்பாட்டித் தூய்மைப் படுத்தினர். இருவரும் சிராளனைச் சீராகவே அரிந்தனர்.

அரிந்தபோது அம்மையார் மனம் எவ்வாறிருந்தது? உவந்தது என்றூர் சேக்கிழார். பயிராகி கேட்டதும் உவக்கவேண்டும் என்பது தானே? உவந்தது என்றூல் எவ்வகையில்? பயிராகி சிறுத்தொண்டரிடம், 'மகனைத் தாதையறியத் தாய் பிடிக்கும் பொழுதில் தம்மில் மனமுவந்தே ஏதமின்றி யமைத்த கறி யாமிட்டுண்பது, என மொழிந்தார். மொழிந்த பயிராகி இருவர் மனமும் ஒரே காரணத்தைக் கொண்டு உவக்க வேண்டும் என்று கூறவில்லை. அதனைச் சேக்கிழார் நுணுகியறிந்தவர் போன்று தொண்டர் உவப்பினையும

அம்மையார் உவப்பினையும் ஒரே காரணத்தின்பாற் படுத்தாமல் தனித் தனிக் காரணங்களிற் சேர்த்தார்.

பொருவில் பெருமைப் புத்திரன் மெய்த் தன்மை அளித்தான்
எனப் போலிந்து
மருவு மகிழ்ச்சி யெய்தவர் மனைவியாரும் கணவனுர்
அருமை யுயிரை எனக்களித்தான் என்று மிகவும் அகமலர
இருவர் மனமும் பேர் உவகை எய்தியரிய வினைசெய்தார்.

தந்தையார் தம் மகன் தமக்கு ஆற்றவேண்டிய கடனைச் செய்து நிறைவேற்றினமைக்கு மகிழ்ந்தார். ஆனுல் அம்மையார் அக்காரணங் கருதாமல் கணவன் உயிரைத் தான் இறந்து அளித்தானே என்ற அளவில் மகிழ்ந்தார். கற்பரசி கணவன், மகன் இருவருள் கணவனையே விரும்புவள் அன்றே? இருவரிடத்தும் விருப்பம் தனித்தனி முறையில் உணடெனினும் ஒரு வரை யிழக்க நேரின் மகனையே யிழப்பள். இக்கருத்து கற்றினையிலும் வந்தமை காணலாம்.

முழங்குதிரை கெழீஇய மூரி யெக்கர்
நுணங்குதுகில் நுடக்கம் போலக் கணங்கொள
ஊதை தூற்றும் உலவுநீர்ச் சேர்ப்ப
பூவி னன்ன நலம்புதி துண்டு
நீயுணர்ந் தனையே யன்மையின் யாமே
நேர்புடை நெஞ்சம் தாங்கத் தாங்கி
மாசில் கற்பின் மடவோள் குழவி
யொய்ய வாங்கக் கைவிட் டாங்குச்
சேணும் எம்மொடு வந்த
நாணும் விட்டேம் அலர்கூர் வுரே. (நற். 15)

"தலைவனே! எம் தலைவியின் அழகைப் புதிய தாக நுகர்ந்தும் மறந்திருக்கின்றுய். அதனுலுண்டான வருத்தம் எம்மைக் கொல்லு கின்றது. இது ஒருபுறம்

இருக்கப் பல நாளாக எம்மோடு உடன் உறைந்து வரும் நாணத்தினையும் முடிந்தவரையில் தாங்கிப் பார்த்தும் முடியாது போகவே கற்புடைய மனைவி தன் குழந்தையைக் கணவன் பலியிடுவான் வேண்டி வாங்க அதனைக் கைவிட்டது போலக் கைவிட்டோம். இனிமேல் இவ்வூர் எங்களை அலர் தூற்றுக, என்று தோழி வரைவு நீட்டித்த வழிக்கூறி வரைவு கடாவினுள் தலைவனை.

அம்மையார், மகிழ்ந்து மகனை அரிந்து கணவர் தறிசமைக்க என்று தம்மிடம் கொடுக்கத் தலையினைக் கறிக்காகாது என நீக்கி மற்றப் பகுதியினைப் பக்குவமாகக் கறியமுதாக்கினர். தலையினை நீக்கியவுடன் அதனைச் சந்தன நங்கையார் தம் தலைவியார் அறியாமலேயே கறிசமைத்து வைத்தனர். தொண்டரும் பயிராகியாரை அழைத்து வந்தனர். அவர்க்கு வேண்டிய வகையில் படைக்கும்போது அவர் வேண்டிய படி கறியினையும் சோற்றினையும் கலந்து படைத்தனர். தலைக்கறியும் சமைக்கப்பட்டதோ எனப் பயிராகி வினவ அம்மையார் வாடாதபடி சந்தன நங்கை சமைக்கப் பட்டது என்றுகூறிக் கொணர்ந்து வைத்தார். உடன் இருந்து உண்ண வேறு அடியவர் இன்மையின் தொண்டரே பயிராகியுடன் உடன் உண்ண அமர்ந்தார். பயிராகியை உண்பிக்க வேண்டித் தாம் முன் உண்டு காட்டத் தொடங்கினர். பயிராகி சினந்து 'ஆறு மாதத்திற் கோர்முறை உண்ணும் கொள்கையுடையோம் உண்ணும் முன் தினம் உண்ணும் நீர் உண்ணல் தகாது' எனத் தடுத்து 'உமக்கு மகன் உளனோ?' என வினவினர். தொண்டர் 'அவன் இங்கு இப்போது

பயன்பட மாட்டான்' என்றனர். பயிராகி 'அவன் வந்தால் தான் யாம் உண்போம்; சென்று அழைத்து வருக' என்றனர். தொண்டர் வேறு வழியின்றித் திகைத்தவராய் அம்மையாருடன் வெளியில் வந்து மகன் கறியானுன் எனத் தெரிந்தும் அடியார்க்காக அழைப்பாராயினர். அழைக்குமிடத்து ஆண் மகனு ராகிய் தொண்டர்க்கும் பெண்பாலராகிய அம்மையார்க் கும் உள்ள வேறுபாட்டைச் சேக்கிழார் நன்கு விளக்கி யுள்ளார். இவ்விடத்துத் தான் அம்மையாரின் உண்மை யறிவின் திறன் வெளிப்படுகின்றது. கணவனுரைவிட விஞ்சிய அறிவின ராயினர் அம்மையார். அவ்விரு வரும் அழைப்பதாக உள்ள சேக்கிழார் பாடல் பின் வருவது.

"வையம் நிகழும் சிறுத்தொண்டர் மைந்தா வருவாய் என அழைத்தார்
தைய லாரும் தலைவர்பணி தலைநிற் பாராய்த் தாமழைப்பார்
செய்ய மணியே சீராள வாராய் சிவனுர் அடியார் யாம்
உய்யும் வகையால் உடன் உண்ண அழைக்கின்றுரென் றேலமிட"

சிறுத்தொண்டர் சீராளனை அழைத்த போது மைந்தா என வழைத்தார். இவர் இவ்வாறு விளித்தது முறையா? அடியார்க் கென வரையறுத்த பின்னர் மகனை மகனுகக் கருதுவது நீதன்றே? அவ்வாறு கருதின் திருட்டுடன் ஒப்பிக்கப்படும். தொண்டர் தம் மறிவில் சிறிது இவ்விடத்துக் குறைபாடுடையவரே யாயினர். பயிராகிக்குக் கறியமுது படைக்கத் தம் மகனையே நேர்ந்து அவனைப் பள்ளியினின்றும் கொண்டு வந்து மனைவியார் அவனை நீராட்டிக் கொடுக்க அவனைத் தம் பொருள் என்றெண்ணுமல் இறைவனடியார் பொருள் என எண்ணி,

அச்சம் எய்திக் கறியமுதாம் என்னும் அதனுல் அரும்புதல்வன்
உச்சி மோவார் மார்பின்கண் அணைத்தே முத்தம் தாமுண்ணர்
பொச்சம் இல்லாத் திருத்தொண்டர் புனிதர் தமக்குக் கறியமைக்க
மெச்சு மனத்தால் அடுக்களையின் மேவார் வேறு கொண்டணைவார்.

இவ்வாறு செய்தார் எனச் சேக்கிழார் கூறியுள்ளார். இவ்வெண்ணம் உடைய தொண்டர் அவனை யழைக்கச் சென்றவிடத்து 'மைந்தா' என முறைமை கொண்டாடியது பொருந்துமோ?

இவர்க்கு மாறாக அம்மையார் மகனைத் தம்மகன் என எண்ணுமையால் 'செய்யமணியே சீராளா வாராய்' என்றார். அவ்வாறு அழைக்கும் போதும் 'யாங்கள் அழைக்கவில்லை. எட்கட்குத் தெரியும் நீ யிருக்குமிடம். ஆனல் அடியார் அழைக்கின்றார். நாங்கள் அழைப்பதாக எண்ணுதே என்று கூறுவதற்கு "அடியார் அழைக்கின்றார்" என்றார். இவ்விடத்தில் அம்மையார் அறிவு தொண்டர் அறிவினைவிட உச்சியில் நிற்பதைக் காணலாம்.

இவ்வாறு அழைக்கப் பள்ளியினின்றும் ஓடி வருவானைப் போன்று சீராளன் ஓடிவந்தான். இனி அடியார் அமுதருந்துவார் என்ற உவப்புடன் அவனை வாரி எடுத்து விரைந்து உள்ளே சென்றனர். அங்கு பயிராகியையும் உணவினையும் கண்டிலர். வானில் இறைவன் இறைவி முருகன் இவர்களுடன் காட்சியளிக்கக் கண்டனர். அருள் பெற்றனர்.

முடிவு.

வரலாறு முடிவுற்றது. இதில் அம்மையாரின் அறிவு நுட்பத்தினைக் கண்டபின் பெண்களின் அறிவினைப்பற்றி முடிவு கூறுங்கள். நுங்கள் முடிபு எவ்வா

ருயினும் சேக்கிழார் அம்மையாரை அறிவு வடிவாகக் கொண்டு போற்றி யிருத்தலின் பெண்ணறிவிற்கும் பெருமையுண்டு என்பதில் தடையிராது. எனவே, "நுண்ணுணர்வு என்ற நூற்பாவிற்கு" நுண்ணிய உணர் வினையுடைய ஆடவர்கள், சிறந்த அறிவு நூல் களோடு எவ்வளவுதான் கற்றுப் பயின்ருலும் பெண்ணின் அறிவினைக் குறித்து, "இது பெண்ணறிவு தானே! என்று இழித்துரைக்குமது பெரிய பேதைமை யாகும்" என்ற புத்துரையினைக் கூறுமளவில் அம்மையார் விளங்கினர் என்னலாம்.

---

(6)

சந்தன நங்கையார்.

ஏவலர் பண்பு:

பாண்டிய நாட்டிலிருந்து வந்த பிரிராந்தையார் என்ற புலவரை முதல் முதலில் கண்ட சோழன் அவை களப் புலவர்கள், அவரை நோக்கி, "ஐயா! யாங்கள் நும்மைப் பற்றிச் சிறுவயதிலிருந்தே நன்ருகக் கேள்விப் பட்டு வருகின்ருேம்; எங்கட்கு வயது முதிர்ந்த காலம் இது; நாங்கள் அனைவரும் அதற்கறிகுறியாக நரை திரை யுடையவராயினேம்; தாங்களோ என்ருல் இவ் வளவு வயது முதிர்ந்தும் ஒரு நரை கூட இல்லாதவ ராக இருக்கின்றீர்கள்! இதற்கென்ன காரணம்?" என்று வினவினர். அதற்குப் பிரிராந்தையார், "புலவர் காள்! என் மனவி மக்கள் அறிவு நிரம்பியவர்கள்;

என் ஏவலர் (வேலைக்காரர்)களும் யான் நினைத்ததையே முன்னறிந்து செய்து முடிக்கும் ஆற்றலுடையவர்கள்; எம் அரசனும் செங்கோல் முறைதவறாது ஆட்சிபுரிபவன்; மேலும் சான்றோர் பலர் யான் வாழும் ஊரில் உளர். இவ்வளவு வசதி யுள்ள எனக்குக் கவலைக் கிடமில்லை; அதனால் நரையும் தோன்றவில்லை."

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையரென் இனையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.

என்பது அவர் பாடல், ஈண்டு நமக்குத் தேவைப்பட்டது "யான் கண்டனையர் என் இனையரும்" என்றதாகும். நல்ல வேலைக்காரர் அமைவதும் ஒரு பேறேயாகும் அன்றோ? தலைவன் சொன்ன தொன்றிருக்க வேறொன்றைச் செய்து அவனுக்குத் தொல்லை விளைவித்துக் கவலைக்கிடமுண்டாக்கும் வேலைக்காரரும், தலைவனை மதியாது அவனுடன் அடிக்கடிச் சச்சரவிடும் வேலைக்காரரும் உலகில் உளர்.

ஏவலர் முத்திறப்படுவர். தலைவன் சொல்லு முன் குறிப்பறிந்து முடிக்கும் ஆற்றலுடையவர் தலையாயர்; தலைவன் சொல்லியபின் செய்து முடிப்பவர் இடைப்பட்டவர். சொல்லியும் செய்து முடிக்காது அத்தலைவனுலேயே அக்காரியம் நிறை வுறும்படிக் குறைபடச் செய்பவர் கடைப்பட்டவராவார். இவருள் முன்னவரே விரும்பத்தக்கவராவார்

பூவாதே காயக்கும் மரமுமுள மக்களுளும்
எவாதே நின்றுணர்வார் தாமுளரே-தூவா
விதைத்தாலும் நன்குகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்று துணர்வு.

இப்பாட்டில் இடைப்பட்டவரை விட்டு மற்றை யிரு திறத்தார்க்கும் உவமை கொடுத்துக் கூறியிருப் பதைக் காண்க.

தம் தலைவர் எவற்றை நினைக்கின்றனரோ அவற் றையே குறித்து நிறைவேற்றுதலும் அவற்றையும் அவர் ஏவாமலேயே நிறைவேற்றுதலும் தலையாய ஏவலர்க்கே இயல்வதாகும், தலைவர் குறிக்கோள்களுக்கு யாதோர் இடையூறும் வாராதபடிக் காத்தலும் அவர் செய்வர். தலைவர்க்குப் பின்னுல் வரும் இடையூறு இது என்று தம் மறிவுக்குப் படுமேயானுல் அவர் ஏவி லரேனும் மறை முகமாகவாவது அதனை நீக்குதற்குரிய வழியினைத் தேடுவர். இவ்வகையில் சிறந்த வேலைக் காரியாக அமைந்தவர் நம் சந்தன நங்கையார்.

வரலாறு :

சந்தன நங்கையார் சிறுத்தொண்டர் வீட்டில் வேலைக்கமர்ந்தவர். இவரது கணவர் பெயர் முதலியன தெரியவில்லை. வேலைக்காரிக்கு வேண்டிய நற்குணங்கள் யாவும் நிரம்பப் பெற்றவர். அடியவர்க்கு அமுது அருந் திய பின் தாம் உண்ணும் வழக்கங்கொண்ட சிறுத் தொண்டர் ஒரு நாள், அடியாரைக் காணப் பெருது வெளியில் தேடிச் சென்ற சமயம் சிவபிரான் பயிராகி வேடங் கொண்டு அவரது மனைக்கு வந்து, "தொண்டா னுர்க்கெந் நாளுஞ்சோறளிக்கும் சிறுத்தொண்டர்

மனைக்குள்ளாரோ"? என வினவினர். அது போது உள்ளிருந்த நம் அம்மையார் வெளிப் போந்து,

"அந்தமில்சீர் அடியாரைத் தேடியவர் புறத்தணைந்தார்
எந்தமைய ரூடையவரே அகத்துளெழுந் தருளும்."

என்றார். பயிராகி வெளியில் நின்றுவினவ, உள்ளிருந்த அம்மையார், "வந்தணைந்து வினவுவார் மாதவரேயாம்," எனத் தெளிந்து வெளிவந்து வணங்கி அவ்வாறு கூறினர் என்றார் சேக்கிழார். பின்னல் பயிராகி "மாதவரார் தாமிருந்த இடவகையில் தனிப்புகுதோம் என் பதற்கும் தக்க பதில் அம்மையாரின் சொற்களில் உண்டு. "அடியாரைத் தேடிப் புறத்தணைந்தார்; அதனால் நீங்கள் சென்றுவிட வேண்டியதில்லை. அகத் துள் எழுந்தருளியிருக்கலாம்." என்றது எவ்வளவு முன்னறியும் திறத்தினைப் புலப்படுத்து கின்றது!

பெரும் பணக்காரத் தலைவன் ஒருவன் தன்னை நாடி வந்தவருக்கு உதவி செய்ய வேண்டும்—விருந்திட வேண்டும் என்றெண்ணினாலும் அதற்கேற்ற உதவி களைச் செய்யாமல் வந்தவர்களையே கடுகடுத்துப் பேசியும் உதவிகளைச் செய்யாமலும் விரட்டி விடப்பார்க்கும் வேலைக்காரிகளையும் உலகில் காண்கின்றோம். ஏன்? தலைவன் உறவினர்களையே ஏன் வருகின்றார்கள் இவர்கள்? இவர்கட்கெல்லாம் நாம் வேலை செய்ய வேண்டியிருக்கின்றதே', என்றெண்ணுபவர்களும் உளரே! இவர்கள் எவ்வாறு மனம் விரும்பி வந்த விருந்தினரைப் பணிந்து போற்றுவார்கள்? வந்த வர்களிடம் மனம் கோணுவாறு பக்குவமாகப் பேசித் தங்க வைப்பார்களோ அவர்கள்? நம் அம்மையாரைக் காணுங்கள்! எவ்வளவு பக்குவமாகப் பதில் கூறியிருக்

கின்றார்கள்! 'வேலைக்காரி நம்மை மதிக்காமலில்லை' என்று பயிராகி எண்ணிக் கொள்ளும்படி "எந்தமையாளுடைய வரே" எனக் கூறிக் கொண்டார். தலைவன் வெளியில் சென்றிருந்தால், அவர் வெளியில் சென்றிருக்கிறார்; வர நேரமாகும் தாங்கள் போய் வாருங்கள் என்று சொல்லும் வேலைக்காரியைப் போன்றில்லாமல் அகத்துள் எழுந்தருளும் என்றார். தேடிச் சென்ற சிறுத் தொண்டர் வந்தால் உண்மையாக மகிழ்வார் என்பதைத் தெரிவிப்பதற்காக "அடியாரைத் தேடிப் புறத்தணைந்தார்" என்றார். இவ்வாறு நயமாகப் பேசிய முறை வேலைக்காரிகள் அனைவரும் கைக் கொள்ள வேண்டிய தொன்றன்றே? "யான் கண்டனையர் என் இளையரும்" என்று பிரிசாந்தையார் பெருமித மடைந்தது போன்று சிறுத் தொண்டரும் நம் அம்மையாரால் பெருமிதம் அடைந்திருப்பர் அன்றே?

பயிராகிக்குப் பிள்ளைக் கறியமுது படைக்க இசைந்து, தொண்டரும் அவர் மனைவியார் வெண் காட்டு நங்கையாரும் தம் அருமைப் பிள்ளையாகிய சீராளனையே அரிந்து கறி சமைக்கத் தொடங்கியபோது தலை கறிக்காகாது என எண்ணி அதனை அப்புறப் படுத்துமாறு நம் அம்மையாரிடம் கொடுத்தனர். அம்மையார் குறிப்பறியும் ஆற்றலினர். ஏவாது உணரும் உணர்வினர். அதனால் அவர் எண்ணினார்; பயிராகி பிள்ளைக் கறி கேட்டதையும் அப்பிள்ளையும் நல்ல குடிக்கு ஒரு மகனாய் இருக்க வேண்டும் என்றதையும், அவனை அறியுப்போது தாய் தந்தையார் மனம் உவக்க வேண்டும் என்ற கொடிய கட்டளையையும் நினைந்தார். நினைக்கவே பயிராகி ஒரு வம்பர் என

எண்ணினுர் போலும்! வெண்காட்டு நங்கையாரும் தொண்டரும் தலை கறிக்காகாது என நீக்கினுலும் அப் பயிராகி ஒரு வேளை தலைக்கறியும் கேட்பாரோ என்ற எண்ணம் தோன்றியது. அதனுல் தலையினை அவர் கட்குத் தெரியாமலேயே அதனைப் பக்குவமாகக் கறி சமைத்து வைத்தார். 'அப்புறப்படுத்துக' எனக் கொடுத்த தலையினை அப்புறப்படுத்தி யிருக்கலாம். அவ்வாறு செய்யாமல் தாம்சமைத்துவைத்தது பின்னுல் பயனுடையதாயிற்று. சிறுத்தொண்டர் பயிராகிக்குச் சோறும் கறியும் ஒன்முகப் பிசைந்து இலையில் படைத்த போது தலைக்கறி எங்கே எனக் கேட்டு விட்டார். அப்போது சிறுத்தொண்டரும் வெண்காட்டு நங்கை யாரும் 'அது ஆகாதென நீக்கினேம்' என்றனர். பயிராகி, 'அதுவும் யாம் உண்போம்! என்றனர். இருவரும் கலங்கி நின்றனர். தவறு செய்தோம் என வாடினர். இதனை முன்னரே எதிர்ப்பார்த்திருந்த நம் அம்மையார் உடனே காலம் தாழ்த்தாமல்.

.....அந்தத் தலையிறைச்சி
வந்த தொண்டர் அமுது செய்யும் பொழுது நினைக்க வரும் என்றே
முந்த அமைத்தேன் கறியமுது.

என்று எடுத்துக் கொடுத்தார்.

அம்மையார் தம் தலைவராகிய தொண்டர்க்கு வந்த இடையூறினை இவ்விடத்து நீக்கி விட்டார். இவர் தலைக் கறி சமைக்கவில்லை யென்முல் தொண்டர் நிலை என்ன வாகியிருக்கும்!

அம்மையார் புலால் உண்ணும் மரபினைச் சார்ந்த வராக வேண்டும். கறிக்காகாது என அப்புறப்படுத்த

வேண்டிக் கொடுத்த தலையினையும் பயிராகி உண்ணும் போது கேட்க நேரும் என எண்ணிப் பக்குவப்படுத்திச் சமைத்ததால் அவ்வாறு எண்ண வேண்டி யிருக்கிறது. வெண்காட்டு அம்மையார்மாத்திரமாப் பிராமண குலம். எவ்வெவ் வுறுப்புக்கள் எவ்வெவ்வாறு பயன்படும் என்பது தெரிய வராது; அதனாலேயே அப்புறப்படுத்தக் கொடுத்து விட்டார். புலால் உணவு கொள்வோர் ஆடு முதலியவற்றின் தலைகளையும் உடைத்துப் பக்குவமாகச் சமைத்துச் சாப்பிடுகின்றார்கள் அன்றே? நம் அம்மை யாரும் அம் மரபினுள் வந்தமையாலேயே தலையினையும் கறி சமைக்கலாம் என்றும் பயிராகியும் கேட்க நேரும் என்றும் எண்ணிச் சமைத்தார். வெண்காட்டு நங்கை யார் சமைத்ததும் சந்தன நங்கையாரின் பக்குவமாகவே யிருக்கலாம்.

(7)
சங்கிலியார்

மணந்து கொடுத்தற்குரிய பருவத்து மகளிர்களுள், தங்கள் பெற்றோர்கள் தக்க மணமக்களைத்தேடி மணந்து கொடுக்க அவர்களுடன் மனைவாழ்க்கையை மேற்கொள் பவர்களும், தாங்களே தங்கட்கு ஏற்ற கணவன் மார் களாகப் பிறரை முன்கண்டறிந்து காதலால் பிணைக்கப் பட்டுப் பின் பெற்றோர்களால் அவர்களை மணந்து மனை மாட்சி யெய்துபவர்களும் உளர். நம் நாட்டில் பெரும் பாலும் பெற்றோர் மணமக்களைத் தேடிச் செய்து கொடுக்கும் மணமே நிகழ்ந்து வருவது. மகளிர்தாமே கணவன்மார்களைப் பெறும் மணம் சிறுபான்மை நிகழ்ந்து வருவது. ஆனால் சங்க இலக்கியங்களில்

பின்னதைப் பற்றியே காணப்படுகின்றதால் அக்காலத்தில் பெரும்பான்மை யான ஒழுக்கமாகப் பின்னது இருந்திருக்கலாம். நம்பெரிய புராணப் பெண்மணிகளுள் திலகவதியார் தம் பெற்றோர் தேடிய கலிப்பகை யாரையே கணவராக உள்ளத்திருத்தினர்.

"எந்தையும் அனையுமவர்க் கெனைக்கொடுக்க இசைந்தார்கள் அந்தமுறை யாலவர்க்கு யுரியது நான்"

என்பது அவரது எண்ணம். காரைக்காலம்மையாரும் அத்தகையரே. சுந்தரரது முதல் மனைவியாராகிய பரவையார் காதல் கொண்டு பின்மணந்து கொண்டவர். மேற்கூறிய இருதிறத்தாரையும் போலின்றி 'தம் மனதிற் கேற்றவர்களாகக் கணவன் மார் அமைதல் வேண்டும். அதாவது தாங்கள் நேரில்கண்டு காதல் கொள்ளா விட்டாலும் பெற்றோர்களே தேடிக் கொண்டு வந்தாலும், தாங்கள் குணம் கல்வி ஒழுக்கம் முதலிய தகுதிகளுக்கேற்ற தகுதியுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.' என எண்ணுபவர்களும் உளர். இம் மூன்றும வரைச் சார்ந்தவர்கம் அம்மையார் சங்கிலியார்.

குலம் வேண்டும் என்றிருப்பர் குலத்துள்ளார் கல்வியினைற்
[குறையா ஞானப்
பலம் வேண்டும் என்றிருப்பர் தந்தைமார் பரந்த பெருஞ்
[செல்வ முள்ள
தலம்வேண்டும் என்றிருப்பர் தாய்மார்கள் யவ்வனமும்
[அழகும் சார்ந்த
நலம் வேண்டும் என்றிருப்பர் நாறுகுழற் கன்னிமார்
[நலத்தின் மிக்கார்.

(இராமா. உத்த-இராவணன் பிறப்புப்படலம் 60)

பெண்ணதவும் காலைப் பிதாவிரும்பும் வித்தையே
எண்ணில் தனம்விரும்பும் ஈன்றதாய்—நண்ணும்
மருவினிய சுற்றம் குலம்விரும்பும் காந்தனது
பேரழகு தான்விரும்பும் பெண்.

இப்பாடல்களுக்கேற்பப் பெற்றோர் அனைத்தையும் தேர்ந்து அவை வாய்க்கப் பெற்ற மணமக்களைத் தம் பெண் மக்களுக்கு,மணம் முடித்து வைத்தால் அவர்களுள் நல்ல முறையில் வாழ்வோரும் உளராவார். அன்றிப் பெண் மக்களின் குணத்திற்கும் ஆண் மக்களின் குணத்திற்கும் சிற்சில போது ஒவ்வாதகாரணத்தால் மனவருத்தம் சச்சரவு முதலியவற்றுடன் கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று பேசிக்கொண்டு வாழ்வைத் தள்ளுவோரும் உளர்.

காதல் கொண்டு மணம் புரிந்துகொண்ட காதலர்களுள், வாழ் நாள் அளவும் தம் காதலில் சிறிதும் குறையாதவர்களாய் வாழ்வோரும் உளர். அன்றி மணம் முடிந்த சில ஆண்டுகளில் காதல் முறிவு எற்பட்டு வேறு வகையின்றி உடன் இருந்து குடும்பத்தை நடத்துவோரும் உளர். பின்னவர் கொண்ட காதலுக்கு அழகு, அறிவு, ஒழுக்கம், பொருள் முதலியவற்றுள் ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு தான் காரணமாகும். மணந்து ஆண்டுகள் ஆக ஆக இவர்கள் கொள்கைகள் ஒற்றுமைப்படாது சச்சரவுகளுக்கு இடம் உண்டாகிறது. இக் காலத்தில் காதல் மணம் என்று நிகழ்த்திக் கொண்டு வாழ்வோரில் பின்னவரே மிகுதியும் உளர்.

நம் சங்கிலியாரைப் போன்று காதலர்களைத் தேர்ந்து பெற்றோர் மணந்து கொடுக்க மனையறத்தை மேற் கொள்பவர்களே சிறந்த முறையில் வாழ்க்கையினை நடத்த இயலும். இவர்கள் வாழ்க்கையில் ஏதேனும் மாறுபாடு நேருமாயின் அது ஊழால் வந்ததென்று தள்ள வேண்டுமே தவிர அறிவுக் குறையால் வந்ததென்று வெறுக்க முடியாது.

வரலாறு.

திரு வொற்றியூர் அருகே ஞாயிறு கிழவர் என்ற பெரியார்க்கு மகளாகத் தோன்றியவர் நம் சங்கிலியார். சிவபிரானிடத்து அன்புடையவராய் வளர்ந்து வந்தார். தக்க மணப்பருவம் வந்த காலத்து ஒரு நாள் பெற்றோர் மணம் குறித்துப் பேசினர். அதனைக் கேட்ட சங்கிலியார் மூர்ச்சிக்க, அவரைத் தாங்கி வேண்டுவன செய்து உயிர்க்கச் செய்து என்ன நேர்ந்தது என வினவினர் பெற்றோர்.

"என்று தம்மை யன்றெடுத்தார் வினவ மறைவிட் டியம்புவார்
இன்றென் தீறத்து நீர்மொழிந்த இது என் பரிசுக் கிசையாது
வென்றி விடையார் அருள்செய்தார் ஒருவர்க் குரியேன் யானினிமேல்
சென்று திருவொற் றியூரனைந்து சிவனார் அருளிற் செல்வன் என"

மொழிந்தார். இப்பாட்டில் உள்ள இரண்டாம் அடி உயிர்நாடி போன்ற தாகும். என்திறத்து நீர் மொழிந்த இது என்றுகூறு முகத்தால் என்னைக்கலவாமல் நீங்கள் மணமுடிவு செய்வது தவருகும் என்பதை வற் புறுத்தினர் அம்மையார். "யான் இறைவனை வழிபடு பவள். இறைவன் அடியார்க்கே—அதுவும் அவ்விறை வனால் குறிப்பிடப்பட்டவர்க்கே மணம் பெற வேண்டும் என்ற கொள்கையுடையவள். நீங்கள் என் குணம் கொள்கை முதலியவற்றிற்கு மாறுக உள்ளவனையும் உறுதிப் படுத்தி விடுவீர்கள். அதனால் இறைவனே எனக்கு மணவாளனை உறுதிப் படுத்தியருள வேண்டும் என்று எண்ணுபவள்" என்றெல்லாம் விளங்கிக் கொள்ளும்படியாக, "என்பரிசுக் கிசையாது" என்று அழுத்தமாகக் கூறினர்.

பெற்றோர்கள் தம் மக்களுக்குத் திருமணம் முடிப்ப தாயின் மக்களையும் கலத்தல் வேண்டும். மக்களைக் கலவாமல் பணம் முதலிய பயன்கருதிச் செய்வாராயின் அவர்கள் நரகமே யடைவர் என்பது பெரியோர் கொள்கை.

இம்மை சேர்பயன் கருதியே தகாதவ ரிடத்தில்
கொம்மை வார்முலை மகட்கொடை நேர்ந்தஅக் கொடியார்
அம்மை யாழ்நரை யத்திடை வீழ்ந்தன ரழுந்தித்
தம்மை நோக்குநர் ஒருவரும் இன்றியே தளர்வார்.

(பிரபு. அக். துறவு. 20)

இவ்வாறு நல்லாற்றூர்ச் சிவப்பிரகாச அடிகள் கூறுவர். மக்களும் தம்மைப் பெற்றோர் கலக்கு மிடத்துத் தம் எண்ணங்கள் முழுமையும் சிறிதும் விடாமல் அவர் களுக்கு அறிவிக்க வேண்டும். மனம் இயைந்த பின்னரே மணம் இயைதல் வேண்டும்.

சங்கிலியார் கூறியதைக் கேட்ட பெரியோர் அச்சம் வியப்பு முதலியன மேலிட்டவர்களாய் இந்நிகழ்ச்சியை யாவரும் அறியாதபடி மறைத்துவந்த நாளில், இவர்கள் குலத்தான் ஒருவன் சங்கிலியாரை மணக்க எண்ணிச் சிலரை மணம்பேச அனுப்பினன். அவர்கள் ஞாயிறு கிழவரிடம் அதுகுறித்துப் பேச அவர் ஏற்கும் வகையில் 'நடவாது' எனச் சொல்லிப் போக்கினர். அவர்கள் தம்மூர் போகுமுன் மணமகனை இருந்தவன் பிணமக னனன். இச்செய்தி அனைவர்க்கும்--ஞாயிறு கிழவர்க்கும் எட்டியது. அவர் சங்கிலியாரின் விருப்பத்தை அனை வர்க்கும் அறிவித்து அவரைத் திருவொற்றியூரிற் சென்று கன்னிமாடம் அமைத்து இருக்கச் செய்து திரும்பினர். அம்மையார் இறைவனுக்கு மாலை தொடுத் தணியும் திருப்பணி புரிந்து வழிபட்டு வந்தனர்.

இக்காலத்தில் சுந்தர மூர்த்தி நாயனார் சிவபெருமானைக் கோயில்கள் தோறும் வணங்கி வருபவர் அவ்வொற்றி யூர்க்கும் வந்தனர். கோயிலுட் சென்று இறைவனை வணங்கிப் புறம் வந்தவர், ஒரு மண்டபத்திலிருந்து மாலை தொடுத்த சங்கிலியார் அதனை இறைவனுக்குச் சாத்தக் கொடுத்து வணங்கிச் சென்றதைக் கண்டார். கண்டவர் காதல்வயப்பட்டார். அருகில் இருந்தாரால் சங்கிலியார் என உணர்ந்தார். அவரையடையச் சிவபிரானே துணை செய்ய வேண்டும் என எண்ணி இறைவனையே வேண்டினார். சிவபிரானும் உடன்பட்டார். அன்றிரவு இறைவன் சங்கிலியார் கனவில் தோன்றி,

"சாரும் தவத்துச் சங்கிலிகேள்
சால என்பால் அன்புடையான்
மேரு வரையின் மேம்பட்ட
தவத்தான் வெண்ணெய் நல்லூரில்
யாரும் அறிய யான்ஆள
உரியான் உன்னை எனை யிரந்தான்
வார்கொள் முலையாய் நீயவனை
மணத்தால் அணைவாய் மகிழ்ந்தென்றார்

சிவபிரான் சங்கிலியார்க்குச் சுந்தரராகிய மணமகனைத் தேர்ந்தெடுத்தார். சங்கிலியார் ஒப்பும்படியான குணநலங்கள் சுந்தரர்பால் விளங்கின. அம்மையாரிடம் 'சுந்தரரை மணக்க' எனக்கூறுவதற்கு முன் அவரது குணநலங்களைக் கூறினார். "சங்கிலியே! நீ என்பால்மிக்க அன்புடையவள்; என்னால் நினக்குத் தேடப்பட்ட மணமகனும் என்பால் மிக்க அன்புடையவன். நீ சாரும் தவத்துச் சங்கிலி; அவன் மேருவரையின் மேம்பட்ட தவத்தான். அவன் என்பால் வைத்த அன்பு கருதியும்

அவன் தவம் கருதியும் எல்லோரும் அறியும்படி திரு வெண்ணெய் நல்லூரில், உலக மாயையில் சிக்காதபடி அவன் மேற்கொள்ள இருந்த திருமணத்தினைத் தடுத்து ஆட்கொண்டேன்; எனவே என்னுல் முன்னமேயே அருள் செய்யப்பட்டவன் அவன் என்பதையும் நீ உணர்க. வெண்ணெய் நல்லூர்த் திருமணத்தைத் தடுத்த யான் நின்னுடன் மணம் கொள்ள ஒருப்படுகின்றேன் என்பதையும் உணர்க. ஒரு வேளை அவன் விருப்பம் இல் லாமலேயே தகுதி நோக்கி யானே கூறுகின்றேனே என எண்ணுவாய் நீ, உன்னை மணந்து கொடுக்கும்படி என்னைக் கேட்டான் ஆதலின் கூறுகின்றேன். நீ ஞாயிறு கிழவர் மகள், உன்னை மணப்பதாயின் அவரிடம் மணம் பேசிச் செல்ல வேண்டும், அவ்வாறின்றிச் சுந்தரன் என்னையே தோழனுகப் பெற்றவனுதலின் என்னை மணம் பேச அனுப்பினன். அதனுல் வந்தேன்; ஏன்? நீயும் யான் அருள் செய்கின்ற ஒருவனுக்கேயுரியள் என்றுதானே மனதில் கொண்டிருக்கின்றுய்; ஆதலின் எவ்வகையிலும் நினக்குக் குறைபாடில்லாதவாறு சுந்தரனை மணம் முடித்துத் தருகின்றேன்; அவனை மணந்து மகிழ்க" என்று விளக்கமாகக் கூறினர்.

நம் அம்மையார் வணங்கி "எம்பிரானே! நீர் அருளிச் செய்தார்க்கு உரியேன் நான், சுந்தரருக்கு மணம் செய்து கொடுக்க எண்ணும் தாங்களிடம் ஒரு வேண்டுகோள். அவர் முன்னமேயே திருவாரூர்ப் பரவை யாரை மணந்தவர், பார்வதியைப் பக்கத்திலேயே பிரியாது வைத்திருக்கும தாங்கள் இதனைச் சற்று சிந் திக்க வேண்டும்" என்றார். முதல் மனைவியிருக்க இரண் டாவது மணம் செய்து கொண்டவர்கள் படும்பாடும்,

அம்மனவியர் இருவரும் படும்பாடும் உலகில் அனைவரும் அறிந்ததே. அந்த அறிவோடு அம்மையார் சிவபிரானை வேண்டினர். வேண்டியது நியாயந்தானே. உடனே சிவபிரான் "சங்கிலி! சுந்தரன் நின்னை விட்டுப் பிரியாமைக்கு ஒரு சபதம் செய்து தருவான்" என்று கூறிச் சென்றார். அம்மையாரும் இறைவன் ஆணைப்படி உடன் பட்டார். சிவபிரான் திருவிளையாட்டினால் விடியற்காலையில் அவ்வூர்க் கோயில் மகிழமரத்தின் கீழ்ச் சபதம் நிறைவேறியது. பின்னர் ஊராரால் மணமும் நிகழ்ந்தது. இருவரும் மகிழ்ந்திருந்தனர்.

•

குறையும் நிறையும்.

'சங்கிலியார் தம் கணவர் இவ்வாறு இருக்க வேண்டும் என விரும்பியதற்கேற்பவும் சுந்தரர் காதலுக்கேற்பவும் மணம் நிகழவும் சில காலம் சென்ற பின்னர் சுந்தரர், சங்கிலியாரிடம் சொல்லாமலேயே திருவாரூர் வசந்த விழாவையும் பரவையாரையும் நினைத்துக் கொண்டு சென்று விட்டாரே! அதனால் அம்மையார் மனம் விரும்பியபடி மணம் நிகழ்ந்திருந்தும் வாழ்க்கை யிறுதிவரை நன்கு நடைபெறவில்லையே, என்று கேட்கலாம். இவ்வாறு சங்கிலியார் வரலாறு ஆதற்குப் பண்டையூழ் காரணம் என்க. கயிலையில் கமலினி அநிந்திதை என்ற உமையம்மையின் பணிப் பெண்களும் ஆலால சுந்தரர் என்ற சிவபிரான் தொண்டனும் தம் முள் தம் தொழிலில் சிறிது வழுவிக் காதல் கொண்டனர். ஆதலின் அக்காதலினை அனுபவித்து வரும்படி மண்ணுலகிற் கனுப்பப்பட்டனர். அதனால் பரவையாராக வந்த கமலினியை ஆலால சுந்தரனாகிய நம் சுந்தரர், முதலில் மணந்து மீண்டும் அநிந்திதையாராகிய

சங்கிலியாரை மணந்தார். அதனால் ஒற்றியூரின் நீங்கித் திருவாரூர் சென்றார் சுந்தரர். எனவே சங்கிலியார் அடைந்த பிரிவு ஊழால் வந்ததாகும்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

என்பது வள்ளுவர் வாக்கன்றே ?

---

(8)

குங்கிலியக் கலயர் மனைவியார்

கடமை.

ஒவ்வொருவனும் கடமையை உணர்தல் வேண்டும். உணர்ந்து தன் துறைக் கேற்பப் பணிபுரிதல் வேண்டும். பணி புரிபவன் பயன் கருதலாகாது. பயன் தானே வரும். பயன் குறைந்தாலும், வராவிட்டாலும் கவலைப்படவும் கூடாது. பணியைச் செய்துகொண்டு செல்வதே சாலச் சிறந்ததாம். அவ்வாறு செய்பவனே தலைமையான பணியாளன். பணியாளன் என்பவன் தனிப்பட்ட ஒருவன் அல்லன், ஒவ்வொருவனும் பணியாளனே. ஒரு தொழிலாளி சிறந்த பணியாளன். அவனைத் தொழிற் படுத்தும் முதலாளியும் ஒருபணியாளனே, தொழிலாளியின் பணி முதலாளிக் குரியதைச் செய்தல். முதலாளியின் பணி தொழிலாளிக்கு உரியதைக் கொடுத்தல். பணிந்து செய்தலின் பணி எனப் பட்டது. இருசாராரும் தமது தொழில்களைப் பணி எனக் கொள்வார்களே யானால் ஒருவரை ஒருவர் மதிக்கின்றனர் என்னலாம். இக்கொள்கை என்று வருமோ அன்றே

உலகம் நன்னிலையுறும். இப்பணிகளை உணர்ந்து செய்தலைக் கடமை எனக் கொள்ளவேண்டும் ஒவ்வொருவனும்.

கடமையைச் செய்பவன் கடவுளைப் பற்றியும் கூடக் கவலைப்பட வேண்டியதில்லை. கடவுள் பணியில் ஈடுபட்டவன் தன்பணியைச் செய்தலே அமையும். 'கடவுளே! அருள்க' என்பனவாக வேண்ட வேண்டியதேயில்லை. ஏன்? கடவுளின் கடமை அருள்வதுதானே? ஒருவன் செய்த பணிக்கேற்பக் கடவுளும் அருள்வர் அன்றே? அதனாலன்றோ அப்பரடிகளும்,

"என்கடன் பணி செய்துகிடப்பதே"

என்று சொல்ல வந்தவர்,

"தன்கடன் அடியேனையும் தாங்குதல்"

என்றும் சொல்லி வைத்தார்.

கடவுட் பணி

உயிர்கட்குச் செய்யும் பணியே கடவுட்பணியாகும். கடவுட்பணி ஒன்றே கொண்டு உயிர்களிடத்தில் கொடுமை கொள்வானேயானால் அவன் கடவுளால் தண்டிக்கப்படுவானேயன்றி அருள் செய்யப்படான். அதனால் உயிர்கட்குச் செய்யும் பணியே தலைசிறந்ததாம். உயிர்களிடத்தில் அன்பும் அருளும் கொண்டு பணிபுரிதல் வேண்டும். அன்பு என்பது தன்னால் விரும்பப்பட்டவரிடத்துத் தோன்றும் மனநெகிழ்ச்சி. அருள் என்பது பொதுமலரிடத்துத் தோன்றும் மனநெகிழ்ச்சி. சிலர் தம் சுற்றத்தாருக்கு உதவியாயிராமல் வெறுப்பாக நடந்து பொதுமலரிடத்தில் அன்புடையார் போல நடப்பர். இவரது நடப்பு நடிப்பேயாம். இவரது நடிப்

பினை அருள் எனக் கோடலாகாது. அன்பின் முதிர்வே அருள். "அருள் என்னும் அன்பீன் குழவி" என்றார் வள்ளுவரும். அன்பேயில்லாதவரிடத்து அருள் எங்ஙனம் நிகழும்? அன்புடையவரே அருள் உடையவராவார். அன்புடன் சுற்றத்தாரிடம் நடப்பவரே அருளுடன் பொதுமலரிடம் - ஏன்? பகைவரிடமும் நடக்க இயலும். அன்புடன் சுற்றத்தார்க்குச் செய்ய வேண்டிய பணியினைச் செய்தலே கடவுட் பணியாகும், எத்தகைய இடுக்கண் நேரினும் சுற்றத்திடம் மேற்கொள்ள வேண்டிய பணியினைக் கைவிட லாகாது. தன்னால் இயலுமளவும் முடிவாகச் செய்தலே சிறந்தது. இவ் வாறு செய்தால் கடவுள் அருள் நினையாமலே வந்து கிட்டும். குடும்பக் கடமையுணர்ந்து சுற்றம் போற்றிய சிறப்பால் கடவுள் அருள் கிடைக்கப்பெற்ற அம்மை யாரே நம் குங்கிலியக் கலய நாயனார் மனைவியார்.

வரலாறு

சோழ நாட்டில் வயலெல்லாம் வினை செஞ்சாலி யுள்ள கடவூர் என்ற ஊரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர் கலயர் என்பவர். இவர் சிறந்த ஒழுக் கத்தார்; சிவனடியார். இறைவனுக்குக் குங்கிலியம் புகைக்கும் பணியினை மேற்கொண்டமையால் குங்கிலியக் கலயர் எனப்பட்டார். இவர் தம் பணிக்கு உறுதுணை யாக மனைவியார் அமர்ந்தார். மனைவியார் இல்லறத்தை நல்லறமாச்சிக் கொண்டு வந்த மேன்மையார். இல்லறக் கடமை தவறாதவர். சுற்றம் போற்றிய பண்பினர்.

கலயர் குங்கிலியம் புகைக்கப் பணத்தை மிகுதியும் செலவழித்தமையாலும், இறைவனருள் இருந்த

மையாலும் வறுமை வந்தெய்தியது. நன்னிலங்கள் யாவும் விற்றூர்; அடிமைகளான மாடு முதலியவைகளையும் விற்றூர். செல்வம் யாவும் சென்றது. மனை மக்கள் சுற்றம் வறுமையில் வாடினர். மனைவியார் தம் அணிகலன்கள் யாவற்றையும் விற்றுச் சுற்றத்தைக் காத்து வந்தார். அணிகலன்களும் தொலைந்தன. வீட்டில் யாதொன்றும் இல்லை. மக்களும் சுற்றமும் இரண்டு நாட்களாக உணவின்றி வாடினர் கண்ட அம்மையார் தம்மை நோக்கினர். தம் கழுத்தில் மங்கல நூலில் தொங்கிய பொன் தாலி விளங்கக் கண்டார். கண்டு மனம் ஆறுதலுடன் கழற்றினர். கணவனர் கைக் கொடுத்து, 'நெல் பெற்று வருக' என்றூர்.

வரலாறு கூறி வந்த சேக்கிழார் இவ்விடத்துக் கூறியதைக் காணுதல் நல்லது,

யாதொன்று மில்லை யாகி இருபீகல் உணவு மாறிப்
பேதுறு மைந்த ரோடும் பெருகு சுற்றத்தை நோக்கிக்
காதல் செய் மனைவியார் தம் கணவனர் கலயனர் கைக்
கோதில்மங் கலநூல் தாலி கொடுத்து நெற்கொள்ளும் என்றூர்.

இப்பாட்டில் பின்னிரண்டடிகளே நம்மால் ஈண்டு நோக்குதற் குரியன. அம்மையார் சுற்றத்தை மிக்க அன்புடன் போற்றும் கடப்பாட்டினர் என்பதைச் சேக்கிழார் "மைந்தரோடும் பெருகுசுற்றத்தை நோக்கி" என்றதோ டமையாது "காதல் செய் மனைவியார்" என்றதால் அறிவித்தார். சுற்றத்திடம் காதல் (அன்பு) இருந்ததால்தான் தம் தாலியை விற்கவும் உடன் பட்டார். கலயர் கேளாத நிலையில் வலியத் தாமே விற்கும்படிக் கூறியது போற்றத்தக்கது. மாதர்களுக்கு அணிகலன்களில் ஆசை அதிகம். பட்டினி கிடந்தாலும்

அவற்றை இழக்க உடன் பட மாட்டார்கள். அம்மை யாரோ அணி கலங்களுக்கெல்லாம் அணியாகவும், மங்கல அணியாகவும் விளங்கிய தாலியையே விற்கத் துணிந்தார். 'தாலியை விற்கக் கலயனார் துணியவில்லை: அம்மையாரே வலிய விற்க வேண்டிக் கொடுத்தார்' என்பதைச் சேக்கிழார் "கலயனார் கைக்—கொடுத்து" என்பதால் தெரிவித்தார். கொடுப்போர் கையில் கொடாது வேறெங்குக் கொடுப்பர்? "கைக் கொடுத்து" என வேண்டாது கூறுதல் தவறாகும். ஆனால் சேக்கிழார் அவ்வாறு கூறியதனால் வேறொரு கருத்திருக்க மல்லவா? ஒருவர் ஒரு பொருளைக் கொடுக்கும் போது மற்றவர் வேண்டாம் என்றால் கொடுப்பவர் அவர் கைப் பிடித்துக் கொடுத்தல் உண்டன்றோ? அது போலவே 'முதலில் கலயர் மறுத்தமையால் அம்மையார் வலியக் கைப் பிடித்துக் கொடுத்தார்' என்று நாம் உய்த்துணர்ந்து கொள்ளும் படியாகக் "கைக் கொடுத்து" என்றார் சேக்கிழார்.

தாலியைக் "கோதில் மங்கல நூல் தாலி" என்றார். மங்கல நூலில் தொங்கிய தாலி 'கோதில் தாலி' எனப் பட்டது. குற்றமற்ற தாலி யது. ஒரு பொருளுக்குக் குற்றம் என்பது அதனாற் பயன் பெறுதபோது உண் டாம். பயன்படாப் பொருள்கள் யாவும் குற்றமுள்ள பொருள்களே. தாலி மங்கலமானவியர்க்குச் சிறந்த அணி. அந்த அணி இப்போது நெற் கொள்ளப் பயன்பட்ட மையால் அது தன்னாற் பெற வேண்டிய பயனுக்கு உத வியாயிற்று; அதனால் அது கோதில் தாலியாயிற்று. இத்தாலியால் பின்னர் நல்லன வினைதலினாலும் குறிப் பாகக் 'கோதில்தாலி' ஆயிற்று என்றும் கொள்ளலாம்.

தாலி தொங்கிய நூல் மங்கல நூல். 'மங்கல நூல்' என்ற அளவிலே 'அது சிறந்த நூல்; மற்றய நூல்களினும் வேறுபட்டது; குற்றமற்ற நூல்' என்று கருதப்படும். ஆதலினால் 'கோதில்' என்ற சொல் தாலியையே சாரும். அல்லது தாலியை நீங்கிய மங்கல நூலாயினும் அதுவே மனைவிக்குரிய மங்கல அணியாக விளங்கியதினால் "கோதில் மங்கல நூல்" எனப்பட்டது என்றும் கொள்ளலாம். 'கோதில்' என்ற சொல்லை எவ்விடத்து வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளலாம்.

இனி வரலாற்றைத் தொடர்வோம்.

அம்மையார் தாலியை "நெற் கொள்ளும்" என்று கூறிக் கொடுத்தார். கலயனாரும் அவ்வெண்ணத்துடனேயே வீடு நீங்கித் தெருவழிச் சென்றார். எதிரே ஒருவன் குங்கிலியப் பொதி தாங்கி வந்தான். கலயர், அவனால் அது குங்கிலியம் என்பதை வினவியறிந்தவர்,

ஆறுசெஞ் சடைமேல் வைத்த
அங்கணர் பூசைக் கான
நாறுகுங் கிலியம் ஈதேல்
நானின்று பெற்றேன் நல்ல
பேறுமற் றிதன்மே லுண்டோ
பெருப்பேறு பெற்று வைத்து
வேறினிக் கொள்வ தென்னென்
றுரைத்தெழும் விருப்பின் மிக்கார்.

உடனே தாலியைக் கொடுத்துக் குங்கிலியம் பெற்றுக் கோயில் சென்று புகைத்தார். பகல் முழுமையும் புகைத்தார். இரவும் வந்தது. அங்கேயே அமர்ந்தார்.

அம்மையார் தாலியைக் கொடுத்தது நெற்கொள்ள வேண்டி; கலயர் பெற்றதும் அதற்குத்தான். ஆனால்

பெற்றது குங்கிலியம். ஏன்? அம்மையார் நோக்கம் கணவன், மக்கள், சுற்றம் இவர்கள் பசியைப் போக்க வேண்டும் என்பது. பொதுவாகச் சுற்றம் போற்ற வேண்டும் என்பது. அஃது அவரது கடமை. கலயர் நோக்கம் குங்கிலியம் புகைத்தல். அஃது அவரது கடமை. முன் பாட்டில் சேக்கிழார், "காதல் செய் மனைவியார் தம் கணவனுர் கைக்.....கொடுத்தார்" என்னுமல் "கணவனுர் கலயனுர் கைக்...கொடுத்தார்" என்று கூறியதை ஈண்டு கருதுதல் வேண்டும். 'கணவனுர்' என்றதே அமையும்; 'கலயனுர்' என்றும் கூறவேண்டுவதில்லை, இரண்டும் ஒரு பொருளையே கருதுதலினுல். சேக்கிழார் இருபெயரையும் கூறியதினுல் ஒரு சிறப்பிருக்க வேண்டும். குங்கிலியம் புகைப்பதில் மனவேறுபாடில்லை யென்றாலும் இன்று தாலி கொடுத்த நோக்கம் நெற்கொள்ள வேண்டும் என்பதே அம்மையார்க்கு. கணவனுர்க்கும் அமுதருத்தி அவரைக் காக்கவும் எண்ணங் கொண்டவர். அதனுல் அம்மையார் "கணவனுர் கைக் கொடுத்தார்" என்றார் சேக்கிழார். கலயனுர்க்கு இன்று நெற்கொள்வதே நோக்கமாயினும் குங்கிலியம் புகைப்பதிலேயே மனம் பதிந்ததாதலின், நெல் குங்கிலியம் ஆம் இரண்டனுள் குங்கிலியம் பெறுதலே சிறந்த தென்றெண்ணி அதனைப் பெற்றார். "வேறினிக் கொள்வதென்" என்று உறுதிப் படுத்திக் கொண்டதைக் காணின் அது புலப்படும். எனவே, அம்மையார் தம் கணவனுர் கைக் கொடுத் தாலும் குங்கிலியம் புகைக்கும் கலயனுர் கைக்கொடுத் தார் எனக், கலயனுர் அம்மையார் நோக்கத்தின் வேறு பட்டவர் என்பதையும் புலப்படுத்தத்தான் "கணவனுர்

கலயனுர் கைக் கொடுத்தார்" என்றூர். கலயனுர் மனைவியார் கருத்தை விடுத்துத் தம் கருத்தினை நிறை வேற்றினர்.

" என் கடன் பணி செய்து கிடப்பது" என்ற முறையில் அம்மையார் தம் கடமையாக நெற் கொள்ள வேண்டித் தாலியைக் கொடுத்தார். கலயரும் குங்கிலியம் புகைக்கும் தமது கடமையை நிறை வேற்றினர். இனித் " தன் கடன் அடியேனையும் தாங்குதல் " என்ற வாக்குப்படி இறைவன் கடமை நிற்கின்றது.

கலயர் கோயிலில் இருக்க, இரவில் மக்களும் சுற்றமும் வாடியுறங்கத் தாமும் உறங்கினர் அம் மையார். இறைவன் வீடு நிறைந்த செல்வங்களை அமைத்து அம்மையார் கனவில் அறிவித்தார். அம் மையார் உணர்ந்து எழுந்து செல்வம் கண்டு ஆண்டவ னருளை வணங்கிக் கணவனுர்க்கு அமுது சமைக்கத் தொடங்கினர். இறைவன் கலயரிடமும்" நீ சென்று உன் மனையில் பாலின் இன்னமுதுண்க" என்றனர். கலயரும் வியந்து வீடு வந்து செல்வம் கண்டு, "மனைவியாரிடம் இந்த விளைவெல்லாம் என் கொல்" என்றூர். அம்மை யாரும், " அல்லொத்த கண்டன் எம்மான் அருள் தர வந்த தென்றூர் ". பின்னர்க் கணவர்க்கும் மக்களுக்கும் சுற்றத்திற்கும் அறுசுவையமுது அருத்தினர்.

அம்மையாரை "நற்றவக் கொடியார்" என்றூர் சேக்கிழார். இல்லறக் கடமையை ஒழுங்காக ஆற்றிய அம்மையார் தவம் உடையவரானர்.

" இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை "

என்ற வள்ளுவர் வாக்குப்படி இயல்பினன் இல்வாழ்க்கையை மேற்கொண்ட அம்மையார் முயல்வாராகிய தவத்தினர் பேறுபெற்றார். அதனால் நற்றவத்தினரானார். தவமுடையவராயினமையாலன்றே செல்வம் வந்துற்ற காலே ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் தம் மனைக் கெழுந்தருள அவர்களுக்கு விருந்து செய்து திருவருள் பெறும் பேறு பெற்றார்? கடமை தவறாது இல்லறப் பயனே—இறைவன் திருவருளைப் பெற்ற அம்மையாரின் உயரிய குணத்தினை நம் நாட்டு மகளிர் உளம் கொண்டு வாழ்வார்களாக.

---

(9)

பரவையார்

வரலாறு

திருவாரூரிலே உருத்திர கணிகையர் குலத்திலே தோன்றியவர் நம் அம்மையார். சிவனிடத்தன்புடையவர். நாளும் திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டு வரும் வழக்கம் உடையவர். ஒருநாள் அவ்வாறு வழிபடச் சென்றிருக்கையில், திருநாவலூரில் தோன்றிச் சிவபெருமானால் தமக்கு நடக்க இருந்த கலியாணத்தை தடுத்து ஆட்கொள்ளப்பட்டுப் பலதலங்களையும் வணங்கி வரும் சுந்தரர், திருவாரூர்க் கோயிலையும் வணங்க வந்தவர் தற்செயலாய்ப் பரவையாரைப் பார்த்தார். பரவையாரும் பரமனடியாரைப் பார்த்தார். "இருவரும் மாறிப்புக்கிதயம் எய்தினர்"; ஒருவரைப்பற்றி ஒருவர் அயலவர் மூலம் அறிந்து கொண்டனர். சிவபிரான்

திருவருள் முன்னிற்க அந்தண குலத்தவராகிய சுந்தரர் கணிகையர் குலத்தவரான பரவையாரை மணந்து கொண்டார். இருவரும் ஆரூரிலேயே அமர்ந்து இல்லறத்தை இனிது நடத்தினர். அம்மையார் அறவோர்க் களித்தும், அந்தணர் ஓம்பியும், துறவோர்க் கெதிர்ந்தும், விருந்தெதிர் கொண்டும் மனையறத்தை மாண்புறுத்தி வந்தார். தமக்கு நாளைக்கு வேண்டும் என்று வையாது விருந்தளித்து வந்தார்.

குண்டையூர் என்னும் ஊரிலே வேளாண் குலதிலகராய் ஒரு பெரியார் விளங்கினர். அவர் சுந்தரரைச் சிவபிரான் தடுத்தாட் கொண்டார் என்பது கேட்டுச் சுந்தரரிடம் அன்புடையவராய் அவரைக் கண்டு வணங்கிய தோடன்றிச் செந்நெல் பருப்பு முதலிய உணவுக்குரிய பொருள்களையும் நாளும் பரவை மனைக்கு அனுப்பி வந்தார். பரவையாரும் வருவனகொண்டு வளமுற விருந்தளித்தனர். இங்ஙனம் அனுப்பி வந்த காலத்தில் மழை வறள் கூர்ந்து மாநிலம் வளம் சுருங்கியது. மிக்க நெல் விளைத்தெடுப்பதற் கில்லாமல் குண்டையூர்ப் பெரியார் வருந்தினர். ஒருநாள், "வன்தொண்டர் திருவாரூர் மாளிகைக்கு நெல்லெடுக்க இன்று குறைவாகியது என் செய்கேன்" என்று மிக்க கவலையினால் உணவும் கொள்ளாமல் அன்றிரவு துயில் கொண்டார். அவர் கனவில் இறைவன், 'சுந்தரனுக்களிக்க வேண்டி நினக்கு மிக்க நெல் தந்தோம்' என்றார். பெரியாரும் விடியலில் உணர்ந்தெழுந்து நெல் மலை வானளாவ ஊரெங்கும் இருப்பது கண்டதிசயித்தார். ஊரினரும் அதிசயித்தனர். 'இவ்வளவு நெல்லையும் ஆரூருக்கு

எவ்வாறெடுத்துச் செல்ல முடியும்? இதனைச் சுந்தரரிடம் கூறுவோம்' என்று புறப்பட்டார் ஆரூருக்கு. ஆரூரில் இறைவன் சுந்தரரிடமும் நெல் அளித்ததைக் கூறிக் குண்டையூர் செல்லச் சொன்னார். சுந்தரரும் குண்டையூர் நோக்கி வந்தார். இடையில் இருவரும் சந்தித்தனர். சுந்தரரிடம் பெரியார் கூறினார் தம் கருத்தை. சுந்தரரும் இறைவனுலேயே இதனைக் கொண்டு சேர்க்க ஆள் தர முடியும் என்று அருகிருந்த திருக்கோளிலி என்ற ஊர்க்குச் சென்று இறைவனைப் பாடி ஆள் வேண்டினார். இறைவன் வாக்கு 'இரவில் பூதங்கள் நெல்லைத் திருவாரூரில் சேர்க்கும்' என்றதைக் கேட்டு ஆரூர் வந்து, பரவையாரிடம் நிகழ்ந்தன கூறி மகிழ்ந்தார். இரவில் பூதங்கள் நெல்லை ஆரூரில் சேர்த்தன. ஆரூர் எங்கும் நெல் நிறைந்து நடப்பதற்கு வழியின்றி மிகுந்தன. காலையில் யாவரும் எழுந்து பார்த்து அதிசயித்தனர். பரவையாரும் பார்த்து மகிழ்ந்து, 'தெருவெல்லாம் அடைத்த நெல்லை அவரவர் வீடுகளில் வாரி வைத்துக் கொள்ளுக.' என்று பறையறைவித்தார். அவ்வாறே தங்கள் தங்கள் மனைக்கு எதிரே உள்ள நெல்லை அவரவரும் தத்தம் மனைகளில் நிரப்பிக் கொண்டனர்.

"இன்றுங்கள் மனைநெல்லைக் குட்படுநெற் குன்றெல்லாம்
பொன்தங்கு மாளிகையிற் புகப்பெய்து கொள்க"

என்று பறையறைவித்ததாகச் சேக்கிழார் கூறியுள்ளார். ஊரவர் நெல்லை மனைக்கண் நிரப்பிய தோடன்றி ஆங்காங்குக் குதிர்களிலும் நிரப்பிவைத்து மகிழ்ந்தனர். அவர்தம் மகிழ்ச்சிகண்டு அம்மையார் மகிழ்ந்தார்.

அம்மையார் மாட்சி.

ஊர் நிறைந்த நெல்லை வைக்க இடமில்லாது போகவே தானம் பண்ணிவிட்டார் போலும் அம்மை

யார் என்று எண்ணிவிடக் கூடாது. அத்தகையர் அல்லர் அவர். உள்ளத்தோடியைந்தே பறையறைவித்தார். அக்குறைபாடுடைய வரானுல் முதலில் தமக்கு வேண்டியன கொண்டு, பின் அவரவரும் இவ்வளவு இவ்வளவு நெல் அளந்து விடவேண்டும் என்று கூறியிருப்பார். "நெற்குன்றெல்லாம் கொள்க" என்று கூறியதை நாம் கவனித்தல் வேண்டும். தேவைக்கு வேண்டியனவே கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தினர் அம்மையார். அதனுல்தான், "உங்கள் மனை எல்லைக்கு உட்படு நெற் குன்றெல்லாம் கொள்க" என்றார். மனை எல்லைக் கப்பாற் பட்டனவற்றில் ஆசை கூடாது என்பது பெறப்படும். மனையெல்லை—மாளிகையளவு, அவரவர் செல்வ வறிய நிலைகளுக்கேற்ப அமைந்திருக்குமன்றே? அவரவர் தேவைக் கேற்ற அளவிலேயே நெற் கொள்ள வேண்டும் என்பதற்காகவே 'மனை எல்லை'யைக் குறிப்பிட்டார். அம்மையார் மனையறத்தை மாண்புற மேற்கொண்டவர். மனையகத்துப் பொருள்களை அவர் விருப்பப்படிப் பயன் படுத்தினர். சுந்தரரைக் கேட்டுச்செய்ய வேண்டியதில்லை. சுந்தரரும் அவ்வாறு உரிமை தந்திருந்தார். மனைவியார் விருப்பப்படி நடப்பவர். மனைவியார் வேண்டுவனற்றை இறைவனிடம் பாடிக் கேட்டுப் பெற்றுத்தருவார். இவ ரது வரலாற்றில் அவ்வாறு நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் உண்டு. அம்மையார் விரும்பினவற்றைக் கொண்டு வந்து கொடுப்பது அவரது கடமை. மனையற மாட்சிமை அம்மையார் கடமை.

பெருஞ் சித்திரனர், குமணனிடம் பாடிப் பரிசில் நிறையப் பெற்று வந்து மனைவியிடம், "நீ இப்பொருளை நின்னுல் விரும்பப்பட்டவர்க்கும், நின்னை விரும்பிய

வர்க்கும், நின் சுற்றத்தார்க்கும், கடனைப் பெற்று வந்தவர்க்கும், யாவர்க்கும் இல்லையென்னுமலும், வைத்து நாளைக்கு நன்றாக வாழ்வோம் என்னுமலும், என்னையும் கேட்க வேண்டியதில்லாமலே நின் விருப்பப் படி எல்லோர்க்கும் கொடு" என்றாராம். புறப்பாட்டொன்று இவ்வாறு கூறுகிறது. இவ்வகையில் அம்மையார் தம் விருப்பப்படியே நெல் மலையினைத் தமக்கென வைக்காமலும், எதிர் காலத்திற்கு எனக்கொள்ளாமலும் இன்னார்க்கென வரையறுக்காமலும் எல்லார்க்கும் எல்லாவற்றையும், 'கொள்க' என்று கொடுத்தனர். என்னே அம்மையாரின் மன மாண்பு! தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த நம் அம்மையார் வரலாறு விரிந்த தொன்று, ஈண்டு ஒரு கருத்தே எழுதப்பட்டது.

---

(10)

அப்பூதியடிகள் நாயனார் மனைவியார்

வீரம்.

வீரம் என்ற சொல்லைக் கேட்டவுடன் போர் நினைப்பு வரும். போரில் எதிரியை வெல்வதற்குத் துணைபுரியும் உள்ளத்துணர்ச்சியே வீரம் எனப்படும். போர்வீரம் மட்டும் வீரம் எனப்படாது. அது எதிரியாகிய மனிதனை—அவனைச் சார்ந்த விலங்குகளை வெல்லப் பயன்படும். வாழ்க்கையில் குறுக்கிடும் எதிரிகளை வெல்லப் பயன்படாது. அவ்வகையில் பயன்படும் உள்ளத்துணர்ச்சியும் வீரம் எனவேபடும். இவ்விரண்டிலும் பின்னதே மிகச் சிறந்தது. வாழ்க்கைப் பாதையில்

குறுக்கிடும் எதிரிகள் ஐம்பொறிகளாலும் தோன்று பவர்கள். அவர்களைப் பொதுவாக ஆசை யென்ற ஒரு பெயரில் அடக்கிவிடலாம். ஒருவனுக்கு அவன் மனப் பேராசையே பேர் எதிரியாம். அவ்வாசையை எவன் வெல்லுகின்றானே அவனே சிறந்தவீரன்.

அடியவரும் வீரரே.

மனப் பேராசையை அடக்குபவர்கள் அடியவர்கள். அவர்களே வீரர்கள்; அவர்களே வெற்றி யாளர்கள்.

> • கேடு மாக்கமும் கெட்ட திருவினர்
> ஒடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்.
> கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி
> வீடும் வேண்டா விறலின் விளங்குவார்.

என்று அடியார்களைப் பற்றிக் கூறினார் சேக்கிழார். சிவபிரானே அன்புடன் கும்பிடுமளவில் இருந்தனரே யன்றித் தமக்கு வீடுவேண்டும் என்ற விருப்பமும் கொள்ள வில்லையாம் அவர்கள். வீடுவேண்டியே யாவரும் பாடுபடுவர். ஆனால் அவ்வீட்டிலும் ஆசை வைத்திலர் என்றால் ஆசையை எவ்வளவில் வென்றிருக் கிறார்கள் என்று ஓர்மின். அதனால் தான்-வீடும் வேண்டா மையால் தான் "விறலின் விளங்கினர்" என்றார் சேக் கிழார். அவ்விறலுடையவர்களின் "வீரம் என்னால் விளம்பும் தகையதோ" என்று பின்னரும் கூறினர்.

அடியவர்க்கு வீரம் உயிர்க்கொலை வீரம் அன்று; ஆசைக் கொலைவீரம். முதற் 'கொலைவீரம்' மெய்ப் பாட்டு வகையில் வெளிப் புறப்படும். அதனையுடைய வன் தன் மெய்யின் மூலம் புலப்படுத்திக் கொள்ளலாம். பிறர்க்கும் புலப்படுத்தலாம். பின்னது புலப்படாது.

செயல் முடிவிலேயே வீரம் என உணரும் தன்மையது. முதல் வீரனைக் காணும்போதே அறியலாம்; பின்ன வனை அவ்வாறு அறியமுடியாது.

பெரிய புராணத்துட்கண்ட அடியவர் யாவரும் துறவிகள் அல்லர். சிலரே துறவியர். பலர் இல்லறத் தாரே.

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்ற வள்ளுவர் வாக்குப்படி அடியவர் யாவரும் இறைவனை – இறைவனடியாரைப் பற்றினமையால் அவர்களை, உலகத்தோ டியைந் திருந்தும்-இல்லற வாழ் வினமேற்கொண்டிருந்தும் பற்று(ஆசை)விட்டகன்றது. அதனாலன்றே மனைவியைக் கையைத் துணித்தவரும், மகனைக் கொன்றவரும், சுற்றத்தைக் கொன்றவரும் ஆன அடியார்களும் இறைவனருள் பெற்றார்கள். சிறுத் தொண்டர் மனைவியார் மகனைத் துறந்ததை முன்னர் அறிந்தோ மன்றே? மகன்மாட்டு வைத்த பற்று தானே நீங்கி வீரங்கொண்ட அம்மையார் நம் அப்பூதியடிகளார் மனைவியார்.

வரலாறு.

சோழநாட்டுத் தீங்களூரிலே அந்தணர் குலத்திலே அப்பூதி என்ற அடிகளார், களவு, பொய், காமம், கோபம் முதலிய குற்றங்களைக் காய்ந்தவராய், அவ் வாறே காய்ந்த தம் மனைவியாருடன் இல்லறமாம் நல் லறத்தை மேற் கொண்டிருந்தனர். அவர் திருநாவுக் கரசர் சிவபிரானுல் சூலநோய் கொடுத்தாளப் பட்டதும் அமணர்களால் தொல்லைப் பட்டுக் கடலில் கல்லே

தெப்பமாகக் கொண்டு திருப்பாதிரிப் புலியூர்ப் பாங்கர்க் கரையேறியதும் பிறவும் ஆன அருட்செயல்களை வியந்த வராய் அவரைக் காணுதிருந்தும் அவர்பால் பேரன்பு பூண்டவரானார். "அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும் உள்ள"னவற்றிற்கும் "திரு நாவுக்கரசு" என்ற பெயரிட்டு அழைப்பா ரானார். அப்பெயர் அவர்க்கொரு மந்திரமானது.

வேனிற்காலம். தம்மூர் வழி மருங்கு தண்ணீர்ப் பந்தல் அமைத்து அதற்குத் 'திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல்' எனப் பெயரிட்டுத் தருமம் செய்தனர். அது காலை திருநாவுக்கரசர், சோழ நாட்டுத் தலங்களை வணங்கி வந்தவர் திங்களூர் வந்து, தண்ணீர்ப் பந்தலில் தம் பெயர் இருப்பது கண்டு அங்கிருந்தாரை வினவி, அப்பூதியடிகளிடம் வந்து "நும்பேர் எழுதாமல் தண்ணீர்ப் பந்தலுக்கு வேறொரு பேர் எழுதக் காரணம் என், என வினவினர். அப்பூதியார் மிக்க சினம் கொண்டு "பொங்கு கடற் கல் மிதப்பில் போந்தேறும் அவர் பெருமை, அங்கணர் தம் புவனத்துள் அறியாதார் ஆருளர்? மங்கலமாம் திருவேடத்துடன் இருந்தும் அறியாது கேட்ட நீர்தாம் யாவர்? எந்தவூரினர்?" என வினவினர். நாவுக்கரசரும் "பிறதுறையின் நின்றேறச் சூலையினால் ஆட்கொள்ளப்பட்ட சிறுமையேன் யான்" என்றார். உடனே அடிகளார் வணங்கித் தம்மனை மக்கள் சுற்றத்தையும் அழைத்து வந்து வணங்கு வித்தார். நாவுக்கரசரும் நீறளித்து அருள் செய்து அவர்கள் வேண்டுகோட்படி அமுது உண்ண இசைந் திருந்தார்.

அம்மையாரும் கறிகளானவற்றை அறுசுவையால் ஆக்கி அமுதும் ஆக்கினர். மூத்த பிள்ளையாகிய மூத்த திருநாவுக்கரசரை வாழைக் குருத்துக் கொண்டு வரும் படிப் போக்கினர். அவனும் "நல்ல தாய் தந்தை யேவ ஈனிது செயப் பெற்றேன்" என்று சென்று வாழைக் குருத்து அரிந்த காலத்தில் வாளரவு ஒன்று அவன் கையைச் சுற்றிக் கொண்டு தீண்டியது. உடனே கையை உதறி வீழ்த்திப் பதைப்புடன், "பாம்பின் வேகம் தலைக்கேறு முன் வேகமாக விரைந்து இலையைக் கொடுப்பேன்; அடியவர்க்கு அமுதூட்டத் தடங்கலாகு மாதலால் பாம்பு தீண்டியதையும் வெளிப்படுத்த மாட்டேன்" என்றெண்ணியவனுய் ஓடித் தாயினிடம் இலை கொடுத்துத் தரையில் வீழ்ந்தான். தாயும் தந்தையும் "உளம் பதைத்து உற்று நோக்கி உதிரம் சேர் வடிவும் குறியும் கண்டு விடத்தினுல் வீழ்ந்தான்" என்றெண்ணிக் கொண்டவர்களாய் யாதோர் மன மாறுபாடும் இன்றி, அடியவர்க்கமுதூட்ட வேண்டிப் பெறலரும் பிள்ளையைப் பாயினுல் சுருட்டி மூடி, வீட்டின் புற முன்றிலில் ஒரு பக்கத்தில் மறைத்து வைத்து, யாவர்க்கும் இது தெரியாதபடி அடியவர்க்கு அமுது செய்விப்போம் என்று நாவுக்கரசரை அழைக்க வந்தனர்.

பற்று நீக்கம்.

பிள்ளை "பெறலரும் புதல்வன்"; அவனைப் பாம்பு தீண்டியது; தளர்ந்து வீழ்ந்தான். வீழும்போது உளம் பதைத்தனர். பாம்பு தீண்டியிறந்தான் என்பதை உணர்ந்தனர். ஆனல் துயரிலேயே ஆழ்ந்து விடவில்லை. துயரம் தூரம் சென்றது. துயரத்தை மறக்க முயன்

றிலர். துயரம் இவர்கள் பால் நிற்க மறந்தது. இவர்கள் பற்றற்றான் பற்றினை—பற்றற்றான் அடியவர் பற்றினைப் பற்றியவர்கள்; ஆதலின் இவர்களைத் தொடர்ந்து வந்த பற்று தானே நீங்கியது.

நீயவன் ஒருவன் தன்னைத் தீங்குறுத்த வந்த காலத்து அவனிடம் எதிர்த்தால் அவனைப் பொருட் படுத்தியதாகும். அதனால் அவனும் மேலும் மேலும் நெருங்குவான். அவனை நீக்கப் படாதபாடு பட வேண்டும். ஆனால், முதலில் தீங்குறுத்த வரும்போதே 'உறுத்திக் கொள்' என்று வாளா இருந்தால் அவனும், 'இவனைத் தீங்குறுத்துவதிற் பயனில்லை' என்று ஒதுங்குவான். அவனால் மற்றைய தீங்கினரும் கண்ட வுடனேயே ஒதுங்கிச் செல்வர். அவ்வாறே களர்ந்து வீழ் மகனைக் கண்டு உளம் பதைத்தனர், ஆசையால்—பற்றால். ஆனால் அப்பதைப்புக்கு—பதைப்பின் காரண மான ஆசைக்கு இடம் கொடுக்க வில்லை. அதனால் அப்பதைப்பு நீங்கியது. "துளங்குதலின்றி" அமுது செய்விக்கச் சென்றனர். இவர்கள் தம் செயலன்றே வீரச் செயல்! பற்றினை வென்ற வீரம் இவர்கள் பால் உள்ளமை காண்மின்.

தந்தையாரைக் காட்டிலும் தாயார்க்கே துயரம் அதிகம் இருக்கும். துக்கம் கொண்டதந்தை ஒருவாறு தேறிப் பின் அவன்தேற்றத் தேறுவாள் தாய். அப்பூதி யாரும் அம்மையாரும் ஒரே காலத்தில் தெளிந்தவராய்த் "துளங்குதல் இன்றி" யிருந்தனர். மிக்கதும் நீடித்தது மான துயர்கொள்ள வேண்டிய அம்மையார் துளங்காம லிருந்தார் என்றால் அவர்தம் மனப் பக்குவத்தை நாம்

என்னென்று கூறுவது? ஒளிமுன் இருள்போல் அம்மை யாரின் ஞான ஒளிமுன் பற்றும் இருள் பறந்தது.

வரலாறு.

நாவுக்கரசரை அமுதுண்ண அழைத்தனர். உரிய முறையால் ஆசனத்தமரச் செய்து திருநீறு பெறும் போது, நாவுக்கரசர் யாவர்க்கும் நீறளித்து 'மூத்த திருநாவுக்கரசு எங்கே' என வினவினர். அதற்கு "அவன் இங்கு இப்போது உதவான்" என்று பொய் யில்லா மெய்யுரையைக் கூறினர் அப்பூதியார். இதில் ஏதோ மறைவிருக்கிறது என்றுணர்ந்து உண்மையை வினவினர். அப்பூதியார் உண்மை யுரைத்தார். உடனே அரசர் அவ்விறந்தவன் உடலைக் கோயிலின் முன் கொணரச் செய்து பதிகம் பாடி உயிர்ப்பித்தார். உயிர் பெற்ற மகனும் தூங்கி எழுவான் போல் எழுந்து நாவுக்கரசரை வணங்கினன். மகன் உயிர் பெற்றது கண்டு மகிழ்தற்கு மாறாக "அறிவரும் பெருமை யன்பர் அமுதுசெய் தருளுதற்குச் சிறிதிடை யூறு செய்தான்" என்று எண்ணினர்.

மகன் பிழைத்தது கண்டு மகிழவேண்டிய மகிழ்ச்சி நீங்கியது. இருவரின் வருத்தம் கண்ட அரசரும் உடன் அமுதுண்ணச் சென்றார். அப்பூதியார்க்கும் அம்மை யார்க்கு மக்கள் சுற்றங்களுக்கும் நீறளித்து அருள் செய்து சென்றார் அரசர். அன்றுமுதலாகவும் அப்பூதி யாரும் அம்மையாரும் 'திருநாவுக் கரசர்' என்ற பெயரையே தாம் செப்பும் ஊதியமாகக் கொண்டனர்.

வீரன் வெல்லுவான். வீரம் வெல்லும். வென்றால் கிடைப்பது வெற்றி. அம்மையார் வீரம் உடையவர்.

அவர் வீரம் ஆசையை—பற்றை வென்றது. மகன் இறக்கவும் துளக்கம் இன்மையைத் தந்தது, அவர் வீரம் வென்று தந்த வெற்றி இறையருள்; பிறவாப் பேரின்பம்; அதனுடன் இறந்த மகன் உயிர் பெற்றது மாம். இல்லறத்திருந்தும் அம்மையாரும் அப்பூதியாரும் துறவிகள் போல் விளங்கினர். இவர்கள் இல்லறத் துறவியர் என்பதற்கேற்ப ஈண்டுக் காது வழிச் செய்தி யொன்றினைக் குறிப்போம்.

பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் தம் மாணவர் கட்குத் துறவற நெறியினைப் பற்றிப் பாடம் பயிற்றிய காலத்தில் மாணவர்கள், 'நம் அடிகளார் இல்லறத்தார் அன்றே? இவரால் எங்ஙனம் துறவற நெறியினைத் தெளிவிக்க இயன்றது?' என்று ஐயுற்றுப் பேசிக் கொண்டனர். அஃதறிந்த அடிகளார் மறு நாள் மாண வர்கள் பாடத்திற்கு அமர்ந்தவுடன் தம் மனைவியா ராகிய ஞானம்பிகையம்மையாரை அழைத்துத் தம் இடப்பக்கத் துடைமீது இருத்திக்கொண்டு பாடம் பயிற்றினர். மாணவர்கள் அம்மையாரும் அடிகளாரும் அம்மையப்பர் கோலத்தில் விளங்கக் கண்டு அஞ்சி எழுந்து வணங்கித் தாங்கள் ஐயுற்றதைக் கூறி மன்னிக்க வேண்டினர். அப்போது அடிகளார், 'இல் லறத்திருந்தும் துறவறம் காக்கலாம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்' என்று கூறினர்.

இது செவிவழிச் செய்தி; வரலாற்றில் விடுபட்டது. இவ்விருவர் போன்ற நிலையிலேயே அப்பூதியாரும் அம்மையாரும் விளங்கினர் என்னலாம்.

---

(11)

கலிக்காமர் மனைவியார்.

விஞ்சியமேம்பாடு.

ஒரு கார் ஓட்டிக்குத் (Driver) துணையாய் இருந்து அவனுடனே பழகிய ஒருத்தன், தன் அறிவுக்கூர்மை யால் பெரிய கார்த் தொழிற்சாலைக்கே உரிமையாளனாகி அக்கார் ஓட்டிக்கு உதவுபவனாகவும் மாறுவான். ஒரு கல்லூரியில் விஞ்ஞானப் பேராசிரியருக்குப் பணி யாளனாக(Attender)இருந்து, விஞ்ஞானப் பாடத்தை மாணவர்கட்குப் பயிற்றச் செயல்முறைப் பயிற்சி விடுதியில் (Laboratary room) உடனிருந்து வேண்டுவன எடுத்துக் கொடுத்துத் தானும் கவனித்து வந்தவன், அத்துறையில் பல்லாண்டாகக் கவனித்து வந்தமையால் அறிவு மிகப் பெற்றுத் தக்க சமயத்தில் அவ்வாசிரிய ருக்கும் உதவி செய்யும்படி நேரத் தன் அனுபவத்தைக் கூறுவான், இவ்வாறு குருவுக்கு மிஞ்சும் தன்மை நேர்வதுண்டு. ஆசிரியனை மிஞ்சிய மாணவன் உளன். துரோணனை—துரோணன் வடிவில் செய்த உருவத் தைக் குருவாகக் கொண்டு கற்ற வில் வித்தை வீரன் ஏகலைவன் துரோணனை விட விஞ்சியவன் அல்லனே? விவேகானந்தரின் புகழா லன்றே அவர்தம் குருவாகிய இராமகிருஷ்ண பரமஹம்சரின் புகழ் உலகில் பரவ லாயிற்று? ஒருவருக்குத் துணையாய் இருப்பவருக்கு அவர் அறிவினைவிட மேம்பட்ட அறிவுடைமையும் உண்டாம் என இவற்றால் நாம் உணரலாம். இந்நிலை யிலேயே கணவனுக்குத் துணையான மனைவியும் அறிவில் மிக்கவளாதலும் கூடும். இதனை வெண்காட்டு நங்கை

யாரிடம் முன்னமேயே கண்டிருக்கின்றோம். உலகிய லறிவில் அன்றி மெய்ப் பொருள் அறிவாகிய ஞான நிலையிலும் காணலாம். ஞான நிலையில் விஞ்சியவரே **கலிக்காமர் மனைவியார்.**

வரலாறு.

சோழநாட்டில் **திருப்பெரு மங்கலத்தில் கலிக்காமர்** என்பவர் விளங்கினர். வேளாண் மரபில் **ஏயர்கோ** என்ற குடியில் தோன்றியவர். அக்குடி சோழர் சேனைபதி உரிமையுள்ள குடியாகும், அக்குடியில் வந்த அவர் "நிதியமாவன நீறுகந் தார் கழல்" என்று கொண்டு சிவனையும் அடியவரையும் போற்றித் தொண்டர் ஆனார். அவர் தம் மனைவியாரும் அவர்க்குத் துணை யாக அடியவர் பணியில் ஈடுபட்டுப் போற்றி வந்தார். கணவனார் அடியார்களிடம் நடந்து கொண்டதும் போற்றியதும் கண்டு கண்டு, தாமும் செய்து செய்து அவரை விடவும் அடியார்களிடம் ஆழ்ந்த மதிப்பும் பற்றும் கொண்டு விளங்கினர், அடியார் தொண்டே சிறந்த தொண்டு என்றும் கொண்டார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலில் புத்தூர்ச் **சடங்கவி** என்பவர் மகளாரை மணக்கும் நிலையினின்றும் இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டுப் பின் **பரவையாரை** இறைவன் துணையால் திருவாரூரில் மணந்து வாழ்ந்தார். பின்னர் திருவொற்றியூரில் மீண்டும் சிவபிரான் துணைகொண்டு **சங்கிலியாரை** மணந்தார். சங்கிலியார் திருமணத்தைச் சிலர் மூலம் கேள்விப்பட்ட பரவையார், சுந்தரர்பால் ஊடல் கொண்டார், திருவாரூர்த் திருவிழாவும் பரவையாரும்

நினைவில் அகலாது வரவே திருவொற்றியூர்ச் சங்கிலி யாரை விட்டுத் திருவாரூர் வந்தார் சுந்தரர். பரவையார் அவரைச் சேர்க்கவில்லை. ஆரூர்ப் பெருமக்களாலும் இருவரையும் சேர்த்து வைக்க முடியவில்லை. முடிவாக இறைவனையே வேண்டினர் சுந்தரர். இறைவனும் இருவரையும் சேர்த்து வைக்க மும்முறை தூது சென்றுப் பின் சேர்த்து வைத்தார்.

பரவையார் மனைக்குச் சுந்தரர் இறைவனைத் தூது அனுப்பிய செய்தியைக் கேள்விப்பட்டார் கலிக்காமர். 'இறைவனை ஒரு பெண்ணிடம் இன்பத்துக் காகத் தூது அனுப்புவதா? மிக்க அழகு' என்று சுந்தரரிடம் வெறுப்புக் கொண்டார். கலிக்காமர் தம்மை வெறுத்தது கேட்ட சுந்தரர் தாம் செய்தது பிழையே என்று எண்ணியவராய்க் கலிக்காமர் மனதை மாற் றும்படி இறைவனை வேண்டினர். இறைவனும் இரு வரையும் கூட்டுவிக்க எண்ணிக் கலிக்காமருக்குச் சூலை நோய் அருளினர். கலிக்காமர் சூலையால் வாடினர்: இறைவனை வேண்டினர், இறைவன் 'சுந்தரர் தீர்த்தாலன்றி இந்நோய் தீராது' என்றார். அதற்கு ஏயர் கோன், 'அவன் வந்து தீர்ப்பதைவிட இந்நோய் வருத்த வருந்துவதேமேல்' என்றார். இறைவனும் மறைந்து சுந்தரரிடம் சென்று "இன்று நம் ஏவலாலே ஏயர்கோன் உற்ற சூலை சென்று நீ தீர்ப்பாயாக" என்றனர், சுந்தரரும் கலிக்காமரூர் நோக்கி வந்தார். வந்தவர் தாம் சூலை தீர்க்க வந்த செய்தியை முன்ன தாகச் சொல்லியனுப்பினர். சுந்தரர் நோய் தீர்க்க வந்தது கேட்ட ஏயர்கோனர் மனம் பொருராய் 'அவன் வந்து தீர்ப்பதற்கு முன் நானே வயிற்றினோடு சூலையும்

தீர்ப்பேன்' என்று வாளால் வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறந்தார். கணவனோடு உடனுயிர் துறக்கச் சென்ற தேவியார், "சுந்தரர் இங்கு வந்தணைந்தார்', என்று சிலர் கூறக் கேட்டு மனத்துயர் மாறினர். நகை முகம் கொண்டனர்; மனையிலும் ஒருவரையும் அழாமலிருக்கக் கட்டளையிட்டனர். மனைக்காவலரிடம் 'சுந்தரரை நல்ல முறையில் மனையை அலங்கரித்து எதிர் கொள்ளுங்கள்' எனப்போக்கினர். காவலரும் அவ்வாறே சென்று எதிர்கொண்டுவந்து ஆசனத்திருத்தி அருச்சனை கள் செய்தனர். சுந்தரர், "கலிக்காழர் யாண்டுளார்? அவரைக்கண்டு சூலை தீர்த்து உடனிருக்கவேண்டும்" என்றார். அம்மையார் ஏவலால் மனத்தொழில் மக்கள். "ஏதம் ஒன்றில்லை, உள்ளே பள்ளிகொள்கின்றார்" என்றார்கள், சுந்தரர் "நீதனை வில்லை யேனும் என் மனம் தெருளா தின்னம் ஆதலால் அவரைக் காண வேண்டும்" என்றனர். அவர்கள் கலிக்காமர் கிடக்கு மிடம் காட்ட சுந்தரர் கலிக்காமர் நிலைகண்டு "நானும் இவர்முன் நண்ணுவேன்" என்றுகூறி உடை வாளைப் பற்றினர். இறைவனருளால் கலிக்காமர் விரைந்தெழுந்து சுந்தரரின் வாள்பற்றிய கையினைப் பற்றிப் பிடித்துக் கொண்டார். இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கினர்; நண்பராயினர். அம்மையாரும் மகிழ்ந்தனர்.

அம்மையார் மேன்மை.

கணவனார் இறந்ததும் உடன் உயிர் நீக்கச் சென்ற வர், சுந்தரர் வரவு கேட்டதும் மனம் மாறி அவரை வரவேற்கச் செய்ததுதான் அவரது அடியார் பற்றின் மேம்பாட்டைப் புலப்படுத்துகின்றது. கலிக்காமர் சிவ

னடியார் பெருமையை நன்முக உணரவில்லை யென்றே கொள்ள வேண்டும், சிவபிரானை விட அவன் அடியவரே சிறந்தவர் என்பதை உணர்ந் திருந்தாரேல் சுந்தரர் பரவை மனைக்குத் தூதனுப்பியதைக் குறையாகக் கருதியிருக்கமட்டார். சுந்தரர் ஒருகால் திருவாரூரில் இறைவனை வணங்கச் சென்றவர் தேவாசிரியன் மண்டபத்திருந்த அடியவர் கூட்டத்தை வணங்காமல் சென்றமையால், கூட்டத்திருந்த விறன்மிண்ட நாயனார் என்பவர் சுந்தரரையும் அவரை ஆட்கொண்ட சிவனையும் புறம்பு என விலக்கினர். சுந்தரர் பின் இறைவன் அருள்படி "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று தொடங்கிய திருத்தொண்டத் தொகை பாடிய பின் புறம்பு நீங்கி அடியவர் கூட்டத்தின் அருள் பெற்றார். இவ்வரலாற்றினையாவது ஏயர்கோன் அறிந்திருக்க வேண்டுமே. அம்மையார் உணர்ந்தார் போலும். அது அவரது பக்குவத்தின் முதிர்வு; அதனால் கணவனுரை விட அடியவர்பால் உண்மையன்பு கொண்ட அவர் சுந்தரர் வரவு கேட்டு மனம் தெளிவடைந்து வர வேற்கச் செய்தார். அதனால் தம் கணவன் உயிரையும் மீட்டு இருவரும் நட்பினராகத் துணை செய்து வரானார்.

---

(12)
மங்கையர்க் கரசியார்

துணை.

உலகில் ஒருவர் துணையின்றி ஒருவர் வாழமுடியாது. அஃறிணைப் பொருள்களும் அறிந்தோ அறியாமலோ ஒன்றற் கொன்று துணை புரிந்தே வாழ்கின்றன. சில சமயங்களில், உதவியும் துணையும் பொருளில் ஒன்று போலக் காணப்படினும் வேறுபாடுடையன. எதையோ நினைத்துப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் ஒருவனுக்குப், பின்புறமாகவந்த மோட்டார்காரால் நேரவிருந்த தீங்கினை வழிப்போக்கன் ஒருவன், அப்பொழுது அறிந்து காத்தானெனில் அவன் காத்தது 'உதவி' (நன்றி) யாகும். அவ்வொருவனையே அவனுடன் சென்ற நண்பன் காத்தானெனில் அல்லது அவனை அழைத்துச்சென்ற ஒருவன் காத்தானெனில் அது "துணை' ஆகும். உதவி சமயத்தில் செய்வது; 'துணை' வாழ் நாள் முழுமையும் அல்லது ஒரு குறிக்கோள் நிறைவுறும் வரையும் உடன் நிற்பது. மனைவி கணவனுக்கு வாழ்நாள் முழுமையும் துணைபுரிபவள். "துணையோடல்லது நெடுவழியேகேல்" என்ற முதுமொழியை நோக்கின் நெடுவழியேகும் ஒரு குறிக்கோள் வரையிலும் ஒருவன் துணை தேவைப் படுகிறது என்பது தெரியும்.

துணையின் இன்றியமையாமை.

ஒருவனுக்குத் துணை தேவை என்றால் அத்தேவை அவன் எந்த வகையிலாவது குறைபாடுடையவன் என் பதையே காட்டும். அத்துணை யில்லையென்றால் இழிவு, குற்றம், அழிவு முதலியவற்றுள் ஏதேனும் அவன் அடைவான். "துணையோடல்லது நெடுவழியேகேல்'

என்றனர் பெரியோர். நெடுவழி (சாலை–பாதை) வண்டி யிழுத்துச் செல்லும் ஒரு குதிரையினை, அவ்வழியில் பிரிதோர் கிளைவழி கூடிய விடத்தில் தயங்காமலும், கிளைவழியில் செல்லாமலும் ஓட்டியும், மாறுன வழியில் சென்றுல் திருப்பியும் ஓட்டக்கூடிய ஒருவன் இன்றி யமையாது வேண்டப் படுதல் போல நெடுவழியில் செல்லும் ஒருவனுக்கும் துணைவன் வேண்டப்படுவான்,

துணைபுரிபவன் துணைவன். இன்பத்திலேயே சென்றுகொண்டிருக்கும் ஒருவனுக்கு அவ்வின்பத்தை யிழக்கவும் நேரும். இன்பத்தை யிழக்க நேரும் சமயத்தில் உடன் இருந்து துன்பத்திற் செல்லாதவாறு முன்னதாக அறிந்து துன்பக் காரணங்களை விலக்கி, இன்பத்தில் இடையறவு படாத வகை செய்ய வல்லவனே துணைவனுவான். இடையறவு பட்டதாயினும் தானும் உடனிருந்து துன்பங்களை அனுபவித்து, எப்படியேனும் மீண்டும் அவனை யின்பத்தில் நிறுத்துவதும் துணைவன் கடனே. அதனுலன்றே நண்பன் 'துணைவன்' என்றும் கூறப்படுகின்றுன்? தாய், தந்தை, மனைவி, மக்கள் யாவரும் ஒருவர்க்கொருவர் துணைபுரிபவர்களே.

இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை
துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை

என வள்ளுவர் இல்வாழ்வானைத் துணை என்றதும் காண்க.

வாழ்க்கைத்துணை.

வாழ்வு ஒரு நெடுவழி. வாழ்க்கைப் பாதையில் செல்லுகின்ற கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர்

துணைவர். 'இல்வாழ்க்கை' என்ற அதிகாரத்தில் இல்வாழ் கணவனைப் பற்றிக் கூறி அடுத்த அதிகாரத்தை 'வாழ்க்கைத் துணை நலம்' என வைத்த வள்ளுவர் அமைப்பையும் காணலாம். வாழ்க்கைக்குத் துணை ஆதலால் மனைவியை, 'வாழ்க் கைத் துணைவி' என்னுமல் 'வாழ்க்கைத்துணை' என்றே கூறியதையும் நாம் கவனித்தல் வேண்டும். வாழ்வுப்பாதையில் முட்கள் கிடக்கும்; மேடு பள்ளங் கள் இருக்கும்; கவர்த்த வழிகள் கவலைப்படுத்தும். இவற்றை யெல்லாம் தம்மறிவு கொண்டு விலக்கிக் கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் துணை புரிந்து காத்தல் வேண்டும். நல்ல நெறியில் செல்லும் ஒருவனை அவன் சூழ்நிலை தீய நெறியில் செலுத்தவும் கூடும். அவனைத் திருப்புவதும் துணைவன் அல்லது துணைவி கடனும். அவனைத் திருப்பும்போது சூழ் நிலை தடங்கலானாலும் அல்லது முரட்டுப் பிடிவாதத்தால் தன் சொற் கேளாது சென்றானாலும் துணைவன் காலம் பார்த்திருந்து அது வந்த போது திருப்புதல் வேண்டும். கணவன் தவறிய காலத்தில் மனைவியும் அவ்வாறே திருப்புதல் வேண்டும். அவளே வாழ்க்கைத் துணை ஆவாள். நம் மங்கையர்க்கரசியாரும் ஒரு சிறந்த வாழ்க்கைத் துணையாக விளங்கினர் என்பதை இனிக் காண்போம்.

வரலாறு.

சோழ வேந்தன் மகளாய்த் தோன்றிய மங்கையர்க் கரசியார் பாண்டியன் தேவியானார். பாண்டியன் கூன் முதுகுடையவன். தம் கணவனிடத்தில் மிக்க அன்பும் பண்பும் கொண்டு கணவன் நலத்தையே நாடி வந்தனர்.

அக்காலத்தில் பாண்டிய நாட்டில் சமணர்கள் மிறைந் திருந்தனர். பாண்டிய மரபு சைவ மரபு. சைவ சமயத் திருந்த பாண்டியன் சமண சமயத்தைத் தழுவிய தோடன்றிச் சமண முனிவர் விருப்பப்படியே நாட்டை யும் நடத்தி வந்தான். சைவக் கோயில்கள் பல சமணக் கோயில்களாயின. சைவர்கள் சமணர்களாயினர். அரசன் எவ்வழிக் குடிகளும் அவ்வழியினர் தாமே. மங்கையர்க்கரசியார் சமயம் மாறவில்லை. மந்திரியார் குலச்சிறையாரும் நம் அம்மையாருமே சைவ சமயத் தைப் பின்பற்றியிருந்தனர். அம்மையார் சைவ நெறியே சிறந்த நெறி எனக் கண்ட முடிபினர்; ஆதலினுல் தம் கணவன் சென்ற சமணசமயத்தைத் தீநெறி எனக் கொண்டார். அதனுல் கணவனை எவ்வகையிலேனும் மீண்டும் சைவநெறியில் திருப்ப எண்ணினர். தமது எண்ணத்தைக் கணவனிடம் வெளிப்படுத்தவில்லை. வெளிப்படுத்தினும் பயன்படாது என்பது அவருக்குத் தெரியும். தக்க சமயத்தில் வெளிப் படுத்தி மாற்றலாம் எனக் காலம் பார்த்திருந்தார். காலமும் வந்தது.

திருஞான சம்பந்தர் திருமறைக்காடு என்னும் ஊரில் திருநாவுக்கரசருடன் வந்திருப்பதனைக் கேள்விப் பட்டார் அம்மையார். சம்பந்தர் மூன்றும் வயதிலேயே உமையம்மை பாலூட்ட உண்டதும், பிறவும் ஆன சிறப்பு நிகழ்ச்சிகளையெல்லாம் கேட்டறிந்து, 'காணும் பேறு என்று வாய்க்குமோ' என இருந்த அம்மையார் கேள்விப்பட்ட உடனே அமைச்சர் குலச்சிறையாருடன் கலந்து எண்ணிச் சம்பந்தரை அழைக்கத் தூது விட்டார். சென்ற தூதுவரும் ஞானசம்பந்தரிடம் மங்கையர்க்

கரசியார் குலச்சிறையார்களின் விருப்பினைத் தெரிவித்து வணங்கினர். ஞானசம்பந்தரும் உடன்பட்டு அப்பரிடம் விடைபெற்றுப் பல தலங்களையும் வணங்கிக் கொண்டு மதுரை எல்லையை அடைந்தார். அடைந்தது கேட்ட அம்மையார் குலச்சிறையாரை நோக்கிச் 'சென்று எதிர் கொள்க' என்றார். குலச்சிறையாரும் சென்று சம்பந்தரை எதிர் கொண்டு வணங்கினர். சம்பந்தரும் அமைச்சரையும் அம்மையாரையும் நலம் வினவினர். அம்மையாரும் தம் கணவனிடம் விடை பெற்றுச் சம்பந்தரைக் காண வந்தார். சம்பந்தர் ஆலவாய் இறைவனை வணங்கி வருகையில் அம்மையார் வணங்கி அருள் பெற்றனர். பின்னர் குலச்சிறையார் மடம் காட்ட அம்மடத்தில் சைவப்படையுடன் சம்பந்தர் எழுந்தருளினர்.

இப்பால் சமணர்கள் சம்பந்தர் வரவினை அரசனுக் கறிவித்துச் சம்பந்தர் மடத்தில் தீ வைக்க ஆணையும் பெற்றுச் சென்றனர். பாண்டியன் கவலை தோய்ந்த முகத்துடன் அமைச்சுக்குச் சென்றான். இரவு நேரம், அம்மையாரும் அரசனிடம் வந்தனர். அரசன் வாட்டம் கண்டு,

"என்னுயிர்க் குயிராயுள்ள இறைவ! நீ உற்ற தென்னே?
முன்னுள மகிழ்ச்சி யின்றி முகம்புலர்ந் திருந்தா யின்று
பன்னிய உள்ளத் தெய்தும் பருவரல் அருள் செய்"

என்றார். அரசனும்.

"காவிரி நாட்டில் மன்னும்
தாவில்சீர்க் கழும லத்தான் சங்கரன் அருள்பெற்றிங்கு
மேவினன் அடிகள் மாரை வாதினில் வெல்ல"

என்று கூறி, "அச்சங்கரன் அடியவர்களைக் கண்டதால் சமண முனிவர்கள் கண்டு முட்டானார்கள்; அவர்கள்

அதனைக் கூறியதைக் கேட்டதால் யானும் கேட்டு முட்டானேன்; இதுவே கவலைக்குக் காரணம்" என்றான். அம்மையாரும் அரசனைத் தேற்றுவாராய் உள்ளத்து மகிழ்ச்சி கொண்டு, "அவ்வாறு இரண்டு சமயத்தாரும் வாது புரிவாரேயானால் வென்றவர் பக்கம் நாம் சார்வோம்; இதற்காகக் கவலையுற வேண்டிய தில்லை" என்றார்.

அரசன் ஆணைபெற்றுச் சென்ற சமணர்கள் சம் பந்தர் மடத்தில் தீவைத்தனர். அடியவர்கள் அல்லலுற் றுச் சம்பந்தரிடம் வேண்ட சம்பந்தர் குடிகள் தவறுக்கு அரசனே பொறுப்பாளி யாதலின் "பையவே சென்று பாண்டியர்க்காக" என அத்தீயினுக்கு ஆணையிட்டனர்.

பாண்டிமா தேவியார் தமது பொற்பில்
பயிலுநெடு மங்கலநாண் பாது காத்தும்
ஆண்டகையார் குலச்சிறையார் அன்பி னாலும்
அரசன்பால் அபராதம் உறுத லாலும்
மீண்டுசிவ நெறியடையும் விதியி னாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடைய ஞதலாலும்
தீப்பினியைப் "பையவே செல்க" என்றார்.

இவ்வாறு "பையவே செல்க" எனத்தீயினுக் காணை யிட்ட தற்குக் காரணம் கூறினார் சேக்கிழார். தீயும் பாண்டியனைப் பற்றியது. வெப்பு நோய்க்காற்றது துன்புற்றான். அமணர்கள் மணிமந்திர மருந்துகளால் முயன்றும் நோய் நீங்கியபாடில்லை. இனி அவர்களால் ஒன்றும் இயலா தென்றுணர்ந்தான் அரசன்.

அமணர்களால் சம்பந்தர்க்கு என்னதீங்கு விளை யுமோ என்றஞ்சி யிருந்த அம்மையாரும், குலச்சிறை

யாரும் அரசனுக்கு வெப்புநோய் வந்ததற்கு அமணர்கள் செய்த தீச்செயலே காரணம் என உணர்ந்தவர்களாய் அரசனிடம் போந்து, "இந்நோய் அமணர் தீச்செயலால் வந்தது; சம்பந்தரால்தான் இந்நோய் தீரும்; அன்றியும் பிறவிநோயும் தீரும்" என்றனர். அரசனுக்குச் சம்பந்தர் பெயர் கேட்ட அளவிலேயே சிறிது அயர்ச்சி நீங்கியது. உடனே, "இவ்வமணர் செயலெல்லாம் நோய் அதிகப் படவே பயன் பட்டன. நீங்கள் கூறிய பிள்ளையால் நோய் நீங்கு மானால் பார்ப்பேன் யானுற்ற பிணியைத் தீர்த்து வென்றவர் பக்கம் சார்வேன்: விரகுண்டேல் அழையும்" என்றான். மகிழ்ச்சியுடன் இருவரும் சம்பந்தரை வணங்கி அழைத்து வந்தனர். அமணர் கொடுமைக்கு அஞ்சினர் அம்மையார். சம்பந்தர் அஞ்சாமை கூறினர். பின்னர் அரசன் நோய்தீர்க்க வேண்டிச் சமணர் விருப்பப்படியே அவர்கட்கு இடப்பக்கம் விட்டு வலப்பக்கமாகத் தாம் அமர்ந்து நோய் நீக்க முற்பட்டு ஐந்தெழுத்தோதி நீறு பூசித்தடவினர். வலப்பக்கம் வெப்புநோய் நீங்கியது. என்ன முயன்றும் சமணர்களால் நீக்கமுடிய வில்லை. வலப்பக்க வெப்பமும் இடப்பக்கம் சேர்ந்துவிட்டது. ஒருபால் தண்மையும் ஒருபால் வெம்மையும் கண்ட அரசன், வெம்மையின் வேகம் தாங்க முடியாமல், சம்பந்தரையே மறுபக்கமும் நீக்க வேண்டினான். சம்பந்தரும் அவ்வாறே நீக்கினார். பின்னர் அனல் வாதம் புனல் வாதங்களில் சமணர்களை வென்றார் சம்பந்தர். புனல் வாதத்திற் கென்று எழுதிய பதிகத்தில் 'வேந்தனும் ஓங்குகவே' என்றமைத்துப் பாடியதால் பாண்டியன் கூனும் நிமிர்ந்தது. இவ்வாறு வெப்ப நோவும் உடற் கூனும் நீங்கிய

அரசன் நீறணிந்து சைவனானன். குடிகளும் அவ்வழிய ராயினர். சம்பந்தர் அருள் கண்டும் பெற்றும் அம்மையாரும் அமைச்சரும் அளவில் பேறு பெற்றனர். பாண்டியநாடு சைவநாடாயிற்று. அமண்கோயில்கள் சைவக் கோயில்களாயின. அம்மையார் எண்ணம் நிறைவேறியது.

அம்மையாரின் மாட்சி.

காலம் பார்த்துக் கணவன் மனதைக் கவிர இருந்த அம்மையார், கணவன் வாடிய முகத்துடன் பள்ளி யறையில் இருப்பக் கண்டு காரணம் வினவியபோது நயமாக வினவியது அறிந்து மகிழ்தற்குரியது. "என்னுயிர்க்குயிராயுள்ள இறைவ" என விளித்துக் கொண்டதால் தாம் கேட்டற்குரிமையுடையவர் என்பதையும், பின்னர் "நீயுற்ற தென்னை" என்றதால் தமக்குத் தெரியாதிருக்க முறையில்லை என்பதையும் தெரிவித்துக் கொண்டு "உள்ளத்து எய்தும் பருவரல் அருள் செய்" என்றார், 'சொல்க' என்னாது 'அருள் செய்' என்று வேண்டிக் கொண்டது தம் மடக்கத்தையும் பணிவையும் காட்டுகிறது. அரசன் உள்ளத்தைப் பற்றிக் கூறியபோது 'பன்னிய' உள்ளம் என்றார். பன்னுதல் என்றால் திரும்பத் திரும்பப் பேசுதல் என்பது பொருள். 'பன்னிப் பன்னிப் பேசுகின்றான்' என்று ஒருவன் ஒருவனைப் பற்றிக்கூற நாம் கேட்கின்றோ மன்றோ? உள்ளம் பன்னுதலாவது ஒன்றைப் பற்றிப் பலவாறாக மீண்டும் மீண்டும் எண்ணுதலாம். 'உள்ளம், பன்னிய உள்ளம்' ஆதலின் 'பின் தம் சொல்லையும் பன்னிப் பார்க்கும் தன்மை யுடையது' என்று தமது சொல்லையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதையும்

குறிப்பாகக் கூறிக்கொண்டார். துன்பம் உண்டு என் பதை 'அகத்தின் அழகு முகத்திற் றெரியும்' என்பதற் கேற்பத் தெரிந்து கொண்டேன் என்று கூறுவார் போல "முன்னுள் மகிழ்ச்சி யின்றி முகம்புலர்ந் திருந் தாய் இன்று" என்று கூறினர்.

மனவருத்தத் தோடிருந்த அரசன் தன் மனைவியார் கேட்டதற்கு யாதோர் மாறுபாடும் கொண்டிலன். அவருடன் அன்போடு உரையாடினான். அமளியிடத்தில் மனச் சோர்வுடன் இருந்தாலும் அம்மையார் அழகில் ஈடுபட்டவனாகவும் இருந்தான். அமளியிடத்தில் வந்த அம்மையாரைப் பற்றிப் "பொங்கெழில் தேவியார்" என்றுரை சேக்கிழார். அரசன் அழகிலும் ஈடுபட்டிருந் தான் என்பதை அம்மையார் வினவிற்கு விடையிறுக் கும்போது "காவி நீள் கண்ணினாய்" என விளித்ததி லிருந்தே அறிந்துகொள்ளலாம்.

இச்சமயமே அம்மையார் தம் கருத்தினை அரசனிடம் வெளிப்படுத்திக் கொள்ள ஏற்றசமயம். அதனால் அரசன் பதில் கூறியதும் எச்சார்பிலும் சாராதநிலையில் பொதுப்பட "அன்னவர் வாது செய்தால் வென்றவர் பக்கம் சேர்ந்து துன்னுவ துறுதி யாகும் சுழிவுறேல் மன்ன" என்றார். சம்பந்தர் வெல்வர் என்ற உறுதி அவர்க்குண்டு; அதனால் துணிந்து கூறினர். கணவனைச் சைவ நெறியில் மீண்டும் திருப்புதற்கு இந்த இடத்தில் அடிப்படை அமைத்துக் கொண்டார். இந்த அடிப் படையின் மேலேயே வெப்பு நோயை அமணரால் நீக்கமுடியாது போக, ஞானசம்பந்தரால் நீக்கிக் கொள்ளலாம் என அம்மையாரும் குலச்சிறையாரும்

கூறினர் என்னலாம். என்னே அம்மையாரின் அறிவின் மாட்சி!

சைவ வழித்துணை.

சைவ நெடுவழி சென்ற பாண்டியன், சமணக் கிளைவழி-(அம்மையாரின் எண்ணப்படி)முள்நிறைந்த கொடியவழிச் சென்றமையால் அவ்வழி நீக்கிச் சைவ நன்னெறி செலுத்தித் துணைபுரிந்த நம் அம்மையார் பாண்டியனுக்குச் சைவவழித் துணையாயினர்; ஏன்? பாண்டிய நாட்டிற்கே தமிழ்நாட்டிற்கே சைவவழித் துணையாயினர் என்னலாம். சைவ நெறி தழைத் தோங்க வேண்டிய நலங்கள் யாவும் விளங்கியமையாலன்றே ஞானசம்பந்தரால் மதுரை நகர்க்குவந்த அன்று தமது பாடலில் "மங்கையர்க்கரசி வளவர் கோன் பாவை பாண்டிமாதேவி" என்று சிறப்பிக்கப் பட்டார். அம்மையாரைப் பற்றி நாம் மிகுதியும் கூறுதற்கியலாது. சேக்கிழார் கூறியதையே கூறி அமைகின்றேம்

பூசுரர்சூ ளாமணியாம் புகலி வேந்தர்
போனகஞா னம்பொழிந்த புனித வாக்கால்
தேசுடைய பாடல்பெறும் தவத்தினரைச்
செப்புவதி யாமென்னறிந்து தென்னர் கோமான்
மாசில்புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ
வழித்துணையாய் நெடுங்காலம் மன்னிப் பின்னை
ஆசில்நெறி யவரோடும் கூட ஈசர்
அடிநீழற்கீழ் அமர்ந்திருக்க அருளும் பெற்றார்.

---

(13)

கலிக்கம்பர் மனைவியார்

குறையின் உயர்வு

ஏற்போர் இருப்பதால் ஈவோர்க்குப் புகழ் உண்டாகின்றது. தாழ்ந்தோரால் உயர்ந்தோர் உயர்வு புலப்படுகின்றது. தீயோரால் நல்லோர் நன்மை தெரிகின்றது. இளங்குமணனுல் குமணன் புகழ் ஓங்கியது. கைகேயினுலன்றே தசரதன் வள்ளன்மையும் இராமன் புகழும் உலகம் அறியலாயின. ஒருவர் குறைவால் ஒருவர் புகழ் ஓங்குமானுல் அக்குறையையும் உயர்வுடைய தென்னலாம். இவ்வகையில் தமது குறைவால் தம் கணவன்மார்களுக்கு உயர்வுதந்தவர்கள் இருவர் பெண்மணிகள் உளர் பெரியபுராணத்தில். அதனுல் அவர்கள் குறைகளையும் அவற்றுல் வந்த உயர்வுகளையும் நாம் அறியுமுகத்தால் அவர்களையும் மற்றைப் பெண்மணிகளோடு வைத்து மதிப்போம். அவ்விருவர் **கலிக்கம்ப நாயனர் மனைவியாரும் கழகற்சிங்க நாயனர் மனைவியாரும் ஆவர்.**

அம்மையார் குறை

இல்லறத்தினை நடத்தும் கணவன் மனைவியிருவரும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள வில்லையென்றுல் அவர்களின் வாழ்வு செம்மையுறுது. குடும்பப் பிணக்குகளுக்கு அதுவே காரணம். ஒத்த அன்பும் பண்பும் அறிவும் முதலிய யாவும் வாய்க்கப் பெற்றவராய் அன்றிலென ஒன்றியிருந்து வாழ்வு நடாத்தும் இல்லறத்தினர் சிலரேயிருப்பர். அவருள்ளும் ஒருவர்

மனதை ஒருவர் அறிந்து கொள்ளாமலிருப்போரும் உளர். அவரும் அறிந்தவராகவே நினைத்துக் கொண்டிருப்பர். காணும் பிறரும் நினைப்பர். வாய்ப்பான சந்தர்ப்பம் இன்மையே அத்தவறான நினைப்புக்குக் காரணம். வாய்ப்பு ஏற்பட்ட விடத்துத்தான் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமை புலப்படும். இவ்வாறு தம் கணவரைப்பற்றி நல்ல முறையில் புரிந்து கொள்ளாமல் தவறிழைத்தவர் கலிக்கம்பர் மனைவியார்.

வரலாறு

பெண்ணாகடம் என்னும் ஊரில் வணிகர் குலத்தில் தோன்றியவர் கலிக்கம்பர். சிவனிடத்தும் அடியாரிடத்தும் அன்பு பூண்டுத் தொண்டு புரிந்து வந்தார். வணிகரானமையின் வரும் அடியவர்கட்கெல்லாம் அறுசுவையமுதருத்துவதோடு வேண்டும் பொருள்களும் கொடுத்து வந்தார். அடியவர் பூசைக்கு அம்மையாரும் மாறுமல் உடன் உதவி செய்தார். அடியவர் பாதங்களை அம்மையார் கரகநீர் வார்க்க, விளக்கி ஆதனத்திருத்தி விருந்தூட்டுவது அவர் கொண்ட முறை.

அவ்வாறு அடியவர் பூசைபுரிந்து வந்தகாளில் ஒருநாள், வந்த அடியவர்களை முறையாக ஒவ்வொருவர் திருவடிகளையும் கலிக்கம்பர் பிடித்து அம்மையார் நீர் வார்க்க விளக்கி வந்தார். ஓர் அடியவர் தாளைப் பிடித்த சமயம் அம்மையார் நீர்வார்க்கத் தாழ்த்தார். காரணம் அவ்வடியவராய் வந்தவர் ஒருகால் இவர்கள் தம் மனையில் ஏவலராய் இருந்து மனம் மாறுபட்டுச் சென்றவர். அவர் அடியவர் வேடத்தில் வந்துள்ளார். அதனை

அம்மையார் நினைத்தமையால் காலம் தாழ்ந்தது. திரு வடி பிடித்தும் நீர்வார்க்காதது கண்ட கலிக்கம்பர்

"வெறித்த கொன்றை முடியார்தம்
அடியார் இவர்முன் மேவுநீலை
குறித்து வெள்கி நீர்வாரா
தொழிந்தாள்"

என்று எண்ணி, வேறு ஒன்றும் நினையாது வாள் கொண்டு அவள்கைக் கரகத்தை வாங்கிக் கையைத் துணித்தார். பின் தாமே கரகநீர் கொண்டு திருவடிகளை விளக்கினர். பின் வேண்டுவன செய்து திருவமுது செய்வித்தார்.

மாண்புள்ள குறை.

அம்மையார் கணவனுருடனிருந்து பாதபூசைக்கு உரியன எல்லாம் கொடுத்துதீ துணை புரிந்து வந்தவர். பல்லாண்டுகளாக அப்பூசையில் இருந்தும் கணவனரின் அடியவர் தொண்டின் உறைப்பினைப் புரிந்து கொண்டா ரில்லை; அடியவர் வேடத்தில் யாவர் வந்தாலும் அவர்க்குத் திருவடி பூசனை புரிவதில் தவறமாட்டார். மெய்ப்பொருள் நாயனார் தம் பகைவன் முத்தநாதன் என்பவன் நீறிட்டு அக்கமணி யணிந்து வந்தமையா லன்றோ அவனுக் கிடம் கொடுத்துக் கொலையுண்டார். மாற்றானுடன் போர்புரிகையில் தாம் வெல்லும் சமயம் அவன் தன் கையிலிருந்த பலகையைச் சற்றுவிலக்க அவன் நெற்றியில் நீறுகண்ட அளவில், 'நீறிட்டார் இவர்; சிவனடியார்' ஆதலின் இவரைக் கொல்ல லாகாது. நாமும், 'படையில்லாதவனைக் கொன்றார்' என்ற பழிச்சொல் இவர்க்கு வாராதபடி படையோ

டிருந்து இவரால் படுவதேமேல்' என்று நின்று அவனுல் பட்டு மாய்ந்தார் ஏனுதிநாத நாயனுர் என்பவர். பகைவ ராயினும் திருநீறும் கண்டிகையும் அணிந்திருப்பரேல் இறைவனடியராவர். அவர் வாழ்க்கையில் குற்றம் கருதலாகாது. இக்கருத்தே தொண்டருக் குண்டு. கலிக்கம்பரும் இத்தகையினரே. இவர்தம் கொள்கையை அம்மையார் அறியாதது தவறுதலேயாம். இவ்வளவு காலமாக அம்மையார் அறிந்து கொள்ளும்படியான நிகழ்ச்சியெதுவும் நிகழ்ந்ததில்லை. அம்மையாரும் அடியவருடன் அடியவர் பூசையில் விருப்பம் மிக வுடையவர் என்பதை,

> ' தீருந்து மனையார் மனையெல்லாம்
> தீகழ விளக்கிப் போனகமும்
> பொருந்து சுவையிற் கறிய முதும்
> புனிதத் தண்ணீருடன் மற்றும்
> அருந்து மியல்பில் உள்ளனவு
> மமைத்துக் கரக நீரளிக்க.
> விரும்பு கணவர் பெருந்தவர்தாள் எல்லாம்.''

விளக்கினுர் என்னுர் சேக்கிழார். அம்மையாரைத் '' திருந்து மனையார் '' என்னுர். அம்மையாரின் குறை கலிக்கம்பரின் தொண்டின் சிறப்பை உலகிற் கறிவித்த தாதலின் அவர் குறையை மாண்புள்ள குறை என்னலாம்.

---

(14)

கழற்சிங்கர் மனைவியார்

வரலாறு

கழற்சிங்கர் பல்லவ அரசர். சிவனடியாரிடத்தன்பர். வடநாடு சென்று பகைவர்களை வென்று வாகை புனைந்து, நாட்டைச் சிவ நெறி விளங்க ஆண்டு வந்த காலையில், சிவனுறையும் திருவிடங்களைக் காணும் விருப்பால் சேனை சூழ உரிமை மகளிர் உடன் வரப் புறப்பட்டார். பல தலங்களையும் வணங்கிக் கொண்டு திருவாரூர் வந்து கோயில் சென்று இறைவனை வணங்கினர். அப்போது அரசன் காதலுக்குரியவரும் பட்டத்துத் தேவியுமான மனைவியார், தனித்து ஒவ்வோர் இடங்களையும் கண்டு வந்தவர், இறைவனுக்குத் திருமாலை தொடுக்கும் இடம் வந்த போது, அங்கு ஒரு பூ கீழே கிடக்கக் கண்டு அதனை எடுத்து மோந்தார். அது போது மாலை தொடுத்துக் கொண்டிருந்த செருத்துணை நாயனார் கண்டு, 'இறைவனுக்குரிய பூவினை மோந்து தூய்மையிழக்கச் செய்து விட்டாளே' என வெகுண்டு வாள் கொண்டு அவர் மூக்கை யறுத்தார். மூக்கிழந்த அம்மையார் புலம்பினார், அது கேட்டு ஆங்கு வந்த கழற்சிங்கர் வெகுண்டு இது செய்தார் யாவர்?' என வினவினர். உடனே செருத்துணை நாயனார் நிகழ்ந்தன கூறினர். அரசர் மனம் கலங்கி' 'சிவ அபராதத்திற்கு இத்தண்டனை போதாது; பூவினை எடுத்தகையை முதற்கண் துணிக்க வேண்டும்' என்று கூறித் தாமே பூவினை எடுத்த கையினைத் துணித்தார். கண்ட அடியவர்கள் அவர்தம் கடவுட் பற்றினை வியந்தனர்.

கழற்சிங்கர் பின்னர் பல்லாண்டு சிவ நெறி விளக்கி ஆட்சி செய்து இறையருள் பெற்றார்.

மாண்புள்ள குறை.

'இறைவனுக்குச் சாத்தும் பூவினை மோத்தல் குற்றம்' என்பதை அறியாத குற்றத்தால் அம்மையார் இன்னல யடைந்தார். இவர் குற்றம் கழற்சிங்கரது சிவபக்தியையும், அடியவர் பக்தியையும், யாவர் செய்த தாயினும் குற்றம் குற்றமே என்றுணர்ந்து தண்டனை கொடுக்கும் நெறிதவறா அரசியல் மாண்பையும் உலகிற்கு வெளிப்படுத்தியது. சிவகுற்றம் புரிந்தவர் யாவராயினும்—அரசியாயினும் ஒறுக்கும் செருத்துணையின் சிறப்பினையும் வெளிப்படுத்தியது. அதனால் இக் குறையும் மாண்புள்ள குறை எனக் கூறலாம்.

முடிப்பு.

இவ்விரண்டம்மையாரின் குறைகளை உலகியல் நெறியில் நின்று நோக்கின் அவர்கட்குக் கொடுத்த ஒறுத்தல்கள் மிகையாகவே படும். ஆனால் உலகியலைக் கடந்த ஆண்டவன் தொண்டு நெறியில் ஈடுபட்டிருப்பவர்கட்கு இவை பெருங்குற்றங்களாகவே படும். அதனால்தான் கையையும் மூக்கையும் சிதைக்கலாயினர் அடியார்கள். இறைவனுக்கு நீராட்டவேண்டி வைத்திருந்த பாலை இடறியமையால் அன்றே சண்டேசுரர் தம் தந்தையார் காலை வெட்டினர்? இவ்விருவரின் வரலாறுகள் கொண்டு நம் மகளிர்கள் அறிய வேண்டியது, 'தாங்கள் எந்த எந்த நெறிகளை மேற் கொண்டிருக்கிறார்களோ அந்தந்த நெறிகளின் விதிகளை ஒழுங்கு பெற அறிந்துகொண்டு விதித்தன கொண்டு விலக்கியன வற்றை யறிந்து விலக்கிக்கொள்ள வேண்டும்' என்பதே.

(15)

இயற்பகையார் மனைவியார்

வரலாறு.

சோழநாட்டிலே பழம்பெருமை வாய்ந்த புகார் (காவிரிப்பூம் பட்டினம்) நகரிலே வணிகர் குலத்தில் அளவில் செல்வத்து வளமையின் அமைந்தவராய் விளங் கினர் **இயற்பகையார்.**

"மிக்க சீரடி யார்கள்யா ரேனும்
வேண்டும் யாவையும் இல்லையென் னாதே
இக்க டற்படி நிகழுமுன் கொடுக்கும்
இயல்பின் நின்றவர் உலகியற் பகையார்"

உலக இயல்புக்கு மாறுனவர் ஆதலின் 'இயற்கையார்' எனப்பட்டார். இல்லறத்தின் பயன் 'சிவனடியார் ஏவின வற்றைச் செய்யும் பெருமையே' என எண்ணிய வராய் அடியவர்த் தொண்டில் ஈடுபட்டிருந்தார். அடி யவர் எது வேண்டினும் இல்லை யென்னாது கொடுக்கும் இயல்பினர் என்பதை உலகிற் நிலைக்கவேண்டி. இறை வன் வேதியர் வடிவு கொண்டு இயற்பகையார் மனைக் கண் வந்தனர். அடியவரும் எதிர் கொண்டு போற்றினர். வேதியர் "அடியவர் வேண்டிய தளிக்கும் பெருமை கேட்டு வந்தோம்; எமக்கு வேண்டிய தொன்றுண்டு; கொடுக்க இயலுமானல் கூறுகின்றோம்" என்றார். உடனே அடியவர், "யாதும் ஒன்றும் என்பக்கல் உண்டாகில் அன்னது எம்பிரான் அடியவர் உடமை; ஐயம் இல்லை; நீர் அருள் செய்யும்" என்றார். வேதியர், "மன்னுகாதல் உம்மனைவியை வேண்டி வந்தது"

என்றார். தொண்டர் 'இது எனக்கு முன்புள்ளதே, என்றுகூறிச்சென்று மனைவியாரை நோக்கி, " விதிமணக் குலமடந்தை! இன்றுனை இம் மெய்த்தவர்க்கு நான் கொடுத்தனன்" என்றார். அம்மையாரும் முதற்கண் கலக்க முற்றுப்பின் தெளிந்து,

" இன்று நீரெனக் கருள்செய்த தீதுவேல்
என்னுயிர்க்கொரு நாதநீர் உரைத்த
தொன்றை நான் செயும் அத்தனை யல்லால்
உரிமைவே றுளதோ எனக்கு "

என்றுகூறித் தலைவரை வணங்கினர். அடியவரும் அம்மையாரை வேதியர்க்குக் கொடுத்தமையால் தாமும் தம் மனைவியார் என்ற எண்ணம் விட்டு வணங்கினர். அம்மையாரும் வேதியர்பால் சென்று பணிந்து மனம் திகைத்து நின்றனர். வேதியர் வேண்டு கோட்படி இயற்பகையார் மற்றைத் தமது சுற்றத்தால் வேதியர்க்குத் தீங்கு நேராதபடி வாளேந்திக் காத்து உடன் சென்றார்.

இப்பால் சுற்றத்தார் இச்செயல் கேட்டு வெகுண்டு, இதனை மாற்ற எண்ணி வாள்முதலியன கொண்டு வேதியரைத் தாக்கவந்தனர். வேதியர் எதிரில் 'அழிதகன்! போகேல் ஈண்ட அருங்கலக் கொடியை விட்டுப் பழிவிட நீபோ" என்றனர். வேதியர் அஞ்சி அம்மையார் முகம் பார்த்தனர். அம்மையார் " இறைவனே அஞ்ச வேண்டாம் இயற்பகை வெல்லும்" என்றனர். அவ்வாறே இயற்பகையாரும் உறவினர் யாவரையும் கொன்று வென்றார். பின்னர்ச் சிறிது தொலை காடுகடந்து சென்றதும் வேதியர் அடியவரைத்

திரும்பிச் செல்லும்படிகூற அடியவரும் மனம் மகிழ்ந்து மீண்டார். சிறிது தொலை சென்றதும் வேதியர்,

"இயற்பகை முனிவா ஒலம் ஈண்டுநீ வருவாய் ஒலம்
அயர்ப்பிலா தானே ஒலம் அன்பனே ஒலம் ஒலம்
செயற்கரும் செய்கை செய்த தீரனே ஒலம்"

என்று கத்தினர். அழைத்த பேரோசை கேட்ட அடியவர், "அடியேன் வந்தேன் வந்தேன்" என்று கூறிக்கொண்டே விரைந்து ஓடிவந்தார். வந்தவர் வேதியரைக் காணுது தனிமையில் இருந்த அம்மை யாரைக் கண்டார். இறைவன் உமையம்மையுடன் வானில் காட்சி யருளக் கண்டார். "உலகுதன்னில் இப்படி நம்பால் அன்பு பண்ணிய பரிவுகண்டு மகிழ்ந் தனம். நண்ணிய மனைவியோடு நம்முடன் போதுக," என்றருளினர். இருவரும் இறையடி எய்தியின்புற்றனர். இறந்த சுற்றமும் சுவர்க்கம் புக்கனர்."

வரலாற்றில் ஐயங்கள்.

இயற்பகையார் வரலாறு பற்றிப் பொதுவாகக் குறைபாடு காண்கின்றார்கள். தெய்வம் மனைவியைக் கேட்கலாமா? அடியார் கொடுக்கலாமா? அம்மையார் கற்பு இழந்தவர் தாமே? என்றெல்லாம் கேள்விகள் பிறக்கின்றன. அவற்றிற்கு விடையிறுக்க வேண்டியது இன்றியமையாததே.

கடவுள் ஒருவர் உண்டு என்ற கொள்கையின்றி யிருப்போர் இக்கேள்விகளை கேட்பாராயின் அவர்கட்கு விடையிறுத்தல் இயலாது. அவர்கள் இக்கேள்விகளைக் கேட்கவும் கூடாது. இவைகள் 'கடவுள் உண்டு' என்ற கொள்கையினர் கேட்க வேண்டியன. 'இல்லை' என்பவர் முதலில் 'உண்டு' என்ற முடிபிற்கு வந்தபின் கேட்க

வேண்டும். தமிழேயறியாத ஒருவர் தமிழ்நூலில் குற்றம் காணுவது போன்றுகும் அவ்வாறு கேட்பது ஆதலின் இரண்டாந் தரத்தினர்க்கே ஈண்டு விடை யிறுக்க வேண்டும்.

கடவுள் மனிவியைக் கேட்டது தனக்கு உரிமை யாக்கிக் கொள்ள அன்று. அங்ஙனமாயின் கடவுள் ஆவரோ? அடியவர் யாதும் இல்லை யென்னுது கொடுக்கும் திறலை உலகினுக்கு வெளிப்படுத்தற்கே என்பதை மனதிற் கொள்ளவேண்டும். அதனாலன்றே அம்மையாரைத் தமக்குரிய வராகக் கருதாமல் கொடுத் துத் திரும்பியபின் மீண்டும் அடியவரை அழைத்து மறைந்தார்.

உலகியல் நெறியினைக் கடந்து நிற்பர் அடியவர்கள். அடியவர்கட்குக் குறிக்கோள் உண்டு. அதுதவறுமல் பார்த்துக் கொள்வதில் கருத்தாய் இருப்பரே யன்றிப் பிறவற்றைக் கருதமாட்டார்கள். குறிக்கோள் நிறை வேற உயிரையும் இழப்பர்; யாவும் செய்வர். தாழ்வு உயர்வுகளைக் கருதார். வயிற்றின் நிமித்தம் - பதவி நிமித்தம் தீச்செயல்களைப் புரிந்து திரிவர் உலகில். உலகியல் கடந்த நிலையில்-ஒருகுறிக் கோளில் மனம் பதிந்தநிலையில் இருந்த அடியார் செய்தது எங்ஙனம் தவறுகும்? அடியவர் புறப்பற்றற்றவர். தன்னை யன்றிப் பிறவெலாம் புறப் பொருள்கள். மனிவிமக் களும் புறப் பொருள்களே. புறப் பொருள்களிற் பற்று அற்றால் தான் தன் அகப் பொருளிலும் பற்று அறும்; வீடுபேறு கிட்டும். அந்நிலையில் புறப்பற்றறும் முறை யாக அமைந்தது அம்மையாரை அடியவர் துறந்தது. அதனாலன்றே சிவவேதியர் ஓலமிட்டழைக்கும் போது

"இயற்பகை முனிவர் ஓலம்" என்று 'முனிவர்' என்றூர் அடியவரை. இல்லறத்திருந்தே துறவு மனப் பான்மை கொண்டவர் அடியவர். அதனல் அவர் அம்மையாரைத் துறந்தார். அம்மையாரை வணங்கினர்.

அம்மையார்க்கு ஒரு சிறிதும் கற்பு இழப்பில்லை என்னலாம். " கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை " இளமையில் தாய் தந்தையர் சொற்படியும் மணமான பின் கணவன் சொற்படியும் நடக்க வேண்டியவள் பெண். அம்மையார் அம்முறையில் தம் கணவர் சொற்படி நடந்தனர். அம்மையாரும் முதற்கண் மனம் பதைத்தனர். பின்னரே கணவனர் சொற்படி நடப்பது தான் சிறந்தது என்ற முடிபிற்கு வந்தனர். அவர் அடியவரிடம் பதில் கூறிய முறையைக் காணுதல் வேண்டும். " இன்று நீர் எனக்கு அருள் செய்த, திதுவேல் " என்று தொடங்கினர். இதுவரையும் நிகழாத தொன்று, —எங்கும் நிகழாதது என்பதைக் காட்டுகிறது 'இன்று' என்ற சொல் கணவன் மனைவி யை இவ்வாறு பிறரிடம் அனுப்புவது கூடாது என்பதைக் காட்டுகிறது 'இதுவேல்' என்ற சொல்லின் ஆற்றல். 'நீர்' 'எனக்கு' என்பன கணவன் மனைவி என்ற உரிமையைக் காட்டுகின்றன. இவ்வாறு கூறிய வர் அடியவரை விளித்தபோது, " என்னுயிர்க்கு ஒரு நாத!" என விளித்தார். வந்த வேதியரை இறைவன் என்றுணராமையால் அடியவர் ஒருவர் என்றெண்ணி னமையால் அம்மையார், இவ்வுடம்பினை அவர்க்கு நீர் கொடுத்தமையால் அவர் இவ்வுடம்பிற்கு நாதனுக இனியமைவர். அவரும் உடம்பைத்தானே அனுபவிக்க முடியும்? ஆனல் என் உயிர்க்கு நீரே நாதன் ஆவீர்"

என்பதற்காக 'உயிர்க்கு நாத' என்று விளியாமல் "உயிர்க்கு ஒரு நாத" என்று விளித்தார். உறவினர் வந்து தடுத்தகாலையில் அஞ்சிய வேதியரிடம் "இறைவனே அஞ்சவேண்டாம், இயற்பகைவெல்லும்" என்றது காண வேண்டும். இறைவன் என்ற சொல் தலைவன் என்றிருந்தாலும் காரண இடுகுறிப் பெயர் போன்ற நிலையில் 'கடவுள்' என்றும் பொருள்படும் ஆதலால், 'கடவுளே' என்று விளிக்கு முகத்தால் 'நும்மைக் கடவுளாக வணங்குகின்றேன்' என்னும் குறிப்பைக் கொண்டு தம் கற்பினைக் காக்கும் நோக்கம் உட்படவும் கூறினார்.

நம் அம்மையாரைத் "திருவினும்பெரியாள்" என்றார் சேக்கிழார். திரு செல்வத்திற் குரியவள், 'திரு' கண்டால் விரும்பப்படும். செல்வம் எங்கு சென்றாலும் தீங்கினைப் பெரிதும் விளைவித்துவிடும். அன்றியும் ஓரிடத்தும் நிலைக்காது. ஓரிடத்திருந்து மற்றோரிடம் செல்லுமாயின் முன்னிருந்த இடத்தை வறியதாக்குவதோடு பழியையும் உண்டாக்கிவிடும். செல்லுமிடம் தீயதாகவும் இருக்கும். தானும் அனுபவிக்கப்படும். அம்மையார் திருவானார். செல்வமானார். இயற்பகையிட மிருந்தார். பின்னர் வேதியரிடம் சென்றார். ஆனால் இயற்பகையாருக்குக் குறை பாடுண்டாக்கவில்லை. சென்ற இடத்திலும் அனுபவிக்கப் படவில்லை. ~~சென்ற இடத்திலும் அனுபவிக்கப்பட வில்லை.~~ இயற்பகைக்கு இறையருளையே பெறச் செய்தார். எனவே "செல்வத்தினும்—செல்வமகள் திருவினும் பெரியாள்" ஆனார் அம்மையார்.